உ

# புத்தளம் மன்னார் வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய



# கும்பாபிஷேக மலர்



11 - 06 - 2001

255.22
சித்தி
SLIPR

மலர் வெளியீடு: 27-07-2001

# புத்தளம் மன்னார் வீதி, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர்

Kumarasamy Somasundaram
President
Colombo Tamil Sangam,
7, 57th Lane, Colombo - 06.
Telephone No:- 2363759

255.22
சித்தி
SLPR

விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும்
நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.



*முக்கிய குறிப்பு:*

இம்மலரில் வெளியிடப்பட்ட ஆக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்பாளராவர். அவை மலர்க் குழுவினதோ, மலராசிரியரதோ கருத்துக்கள் அல்ல.

39180

ஆலய பரிபாலன சபை,
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்,
மன்னார் வீதி, புத்தளம்.

உ

சிவமயம்

புத்தளம் – மன்னார் வீதி

# ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

# கும்பாபிஷேக சிறப்பு மலர்



## மலர் வெளியீட்டுக்குழு

திரு. எல். சிவநாதன்பிள்ளை

திரு. மு. கௌரிகாந்தன்

திரு. அ. ந. இராஜகோபால்

திரு. த. பத்மநாதன் ([illegible])

*ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை*



மூலமூர்த்தி குடமுழுக்கள்



மூலஸ்தாபன கோபுரம்



நவக்கிரகம்




சிவன்



தலைவர் இலா. சிவநாதன்பிள்ளை, ஆலயகுருக்கள் சிவஸ்ரீ. இ. சிவகுமாரக்குருக்கள், பிரதமகுரு சிவஸ்ரீ. பரமேஸ்வரக்குருக்கள்



ஆஞ்சநேயர்





செயலாளர் K. லோக[illegible]தபதி தி. சந்திரன், தலைவர் இலா. சிவநாதன்பிள்ளை,
உப.தலைவர் K. செல்வராசா



பஞ்சவிநாயகர்




சுப்பிரமணிய வள்ளி தெய்வானை சமேதம்





வைரவர், நாகதம்பிரான்



கணபதி ஹோமம்



ஆலய நிர்வாக அங்கத்தவர் திரு. ச. பத்மலிங்கம் தெட்சனை வழங்கல்

புத்தளம் மன்னார் வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை



நடுவில் தலைவர் இலா. சிவநாதன்பிள்ளை, இடதுபக்கமாக பொருளாளர் க. பூபாலசிங்கம், உ.ப.தலைவர் K. செல்வராஜா, வலதுபக்கமாக செயலாளர் கு. லோகநாதன், உ.ப. செயலாளர் ப. கந்தசாமி, வலமிருந்து இடமாக ச. பத்மலிங்கம், S. சிவானந்தராசா (ரவி), R. சிவலிங்கம், P. சபாரத்தினம், T. கனகசபை



பஞ்சமுக விநாயகர்



புத்தளம் மன்னார் வீதி ஸ்ரீ சித்தி விநாயக
பழமை வாய்ந்த ஆலயத்தின் தோற்றம்

ஆலய பரிபாலனசபையின் செயலாளர்


## கே. லோகநாதன் அவர்கள்

வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

எம் செயலால் ஆவதொன்றில்லை. எல்லாம் அவன் செயல் எனும் நன் நெறிபோல் புத்தளம் மன்னார் வீதியில் அமைக்கப் பெற்றுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் புனராவர்த்தனம் செய்யப்பட்டு அழகான கோலங் கோயிலாக உருவாகியிருக்கின்றது.

எமது ஆலயத் திருப்பணிக்கு நிதி உதவி அளித்த விநாயக அடியார்களுக்கும் ஐங்கரன் அருள் பெருகட்டும். பல்லின மக்களும் வாழும் எமது நகரில் ஒற்றுமையும், நாடு சாந்தி, சமாதானம் மூலம் நிம்மதியாகட்டும். ஸ்ரீ சித்தி விநாயகர் அருள் எல்லோருக்கும் கிடைப்பதாகுக.



மணிக் கோபுரம்

மலர் வெளியீட்டுக்குழு

## பொருளடக்கம்

1. மலராசிரியரிடமிருந்து.....
2. ஆலய வரலாற்றுக் குறிப்புகள் - திரு. மு. கௌரிகாந்தன், *ஆசிரிய ஆலோசகர் (இந்து சமயம்)*
3. வாழ்த்துச் செய்தி - சுவாமி ஆத்மகனாநந்தா
4. ஆசியுரை - துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
5. ஆசிச்செய்தி - திருமதி. சாந்தி நாவுக்கரசன், *பணிப்பாளர் இந்து ச.க.தி.*
6. ஆசியுரை - பிரதிஸ்டா கலாநிதி, சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் - *நயினை*
7. ஆசிச்செய்தி - சிவஸ்ரீ கா. வைத்தீஸ்வரக் குருக்கள் - *பு/முத்துமாரியம்மன் கோவில்*
8. ஆசிச்செய்தி - சிவஸ்ரீ இ. சிவகுமாரக்குருக்கள் - *ஆலய பிரதமகுரு*
9. வாழ்த்துச்செய்தி - திரு. இலா. சிவநாதன்பிள்ளை, *தலைவர், பரிபாலன சபை - ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்*
10. வாழ்த்துச்செய்தி - திரு. க. பூபாலசிங்கம், *பொருளாளர், பரிபாலன சபை - ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்*
11. வாழ்த்துச்செய்தி - திரு. கு. லோகநாதன், *செயலாளர், பரிபாலன சபை - ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்*
12. வாழ்த்துச்செய்தி - திரு. தா. முருகேசம்பிள்ளை, *தலைவர், இந்து மகாசபை, புத்தளம்*
13. வாழ்த்துச்செய்தி - திரு. செல்லத்துரை சத்தியமூர்த்தி, *ஆதீன சைவப் பெரியார், கண்டா*
14. சிறுதெய்வ வழிபாட்டின் வரலாற்றுப் பின்னணி ஒரு நோக்கு - மா. நாகராஜா, *அதிபர் இந்து மகா வித்தியாலயம், புத்தளம்*
15. ஊஞ்சற் பதிகம் - பண்டிதர் ச. சுப்பிரமணியம், *ஆவரங்கால்*
16. சித்திவிநாயகர் பதிகம் - திரு. கே. பசுபதிப்பிள்ளை, *அதிபர், நாயக்கர்சேனை த. வி.*
17. பாமாலை - திரு. சி. சிவமூர்த்தி - பாலாவி
18. பாரதிகண்ட விநாயகர் - பேராசிரியர் சி. தில்லைநாதன் - *பேராதனைப் பல்கலைக்கழகம்*
19. நீதிநூல்கள் கூறும் கல்விச் சிந்தனைகள் - பேராசிரியர் சோ. சந்திரசேகரம், *கொழும்பு பல்கலைக்கழகம்*
20. வரதபண்டிதரின் இலக்கிய சமய நூல்கள்
    கலாநிதி துரை. மனோகரன், *முதுநிலை விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்*
21. கல்வியின் இறுதி நோக்கம்
    அல்ஹாஜ், M.H.M.M. மஹ்ருப் மரைக்கார், *மேலதிகக் கல்விப் பணிப்பாளர், வடமேல் மாகாணம்*
22. விநாயக வழிபாடு - கே. நாகேந்திரன்
23. சாத்தானும் அரிகர புத்திரனும் - திரு. வ. மகேஸ்வரன், *முதுநிலை விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்*
24. சைவ சமயிகள் என்போர் யாவர்? - குமாரசாமி சோமசுந்தரம்
25. குருநாகலையில் சைவம் - எஸ். ரமேஸ், *ஆசிரியர், இடகளியலாளர்*
26. சிலாபம் நகரில் கிறித்தவர்களினதும் இந்துக்களினதும் பரஸ்பர ஒற்றுமைப் போக்கு
    திருமதி. வயலெற் சந்திரசேகரம், *ஆசிரியை, புனித பேர்னெட் கல்லூரி, சிலாபம்*
27. கட்டிடக் கலையில் ஓர் கண்ணோட்டம் - அருட்கலைச்சக்கரவர்த்தி, கலாஜோதி நவாலியூர் தி. சந்திரன்
28. ஆலயங்களும் அறநெறிப் பாடசாலைகளும் - பா. மதுரநாயகம், *இந்து மகாசபை, புத்தளம்*
29. Why eminent place for God Vinayaga?
    T. Pathmanathan, *Retired Administrative Officer, Irrigation Department, Puttalam.*
30. விநாயக விரதங்கள் - அ. ந. இராஜகோபால்
31. ஆன்மீகம் ஒழுக்க விழுமியம் மற்றும் சமூக அபிவிருத்திக்கான கல்வி
    மா. கருணாநிதி, *சிரேஸ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்*
32. ஆலய தரிசனம் - உருத்திரசிவம் துஷ்யந்தி, *புத்தளம், இந்து மகா வித்தியாலயம்*
33. ஜோதிடக் கலை - த. பத்மநாதன், *ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், நீர்ப்பாசன திணைக்களம்*
34. மலருக்கான நிதியை மனநிறைவோடு வழங்கிய அன்பர்கள்
35. புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை
36. படங்கள்
37. அருள்மொழிகள்
38. வாழ்வின் வழிகாட்டிகள்
39. ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அமைப்பு
39. நன்றியுரை - இலா. சிவநாதன்பிள்ளை, *தலைவர், பரிபாலன சபை*

**மலராசிரியரிடமிருந்து......**

உங்கள் கரங்களில் உள்ள இக்கும்பாபிஷேக மலர் புத்தளம் மன்னார் வீதியிலே வீற்றிருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் கும்பாபிஷேக ஞாபகார்த்த வெளியீடாகும்.

புத்தளம் மாவட்ட கோயில்குடமுழுக்கின் ஞாபகார்த்தமாக இதற்கு முன்பு மூன்று மலர்கள் வெளிவந்திருக்கின்றன. முதலாவது ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னநாதஸ்வாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேக மலர் (1963). இரண்டாவது நாயக்கர்சேனை ஸ்ரீ ஐயனார் சுவாமி கோயில் கும்பாபிஷேக சிறப்பு மலர் (18.06.1995). மூன்றாவது புத்தளம் மணல் குன்று ஸ்ரீ கருமாரி (பொம்மக்கா) அம்மன் கோயில் கும்பாபிஷேக ஞாபகார்த்த மலர் (03.11.2000). இவற்றைத் தொடர்ந்து நான்காவதாக இம்மலர் வெளிவருகிறது.

பெருந்தொகையான பயனுள்ள ஆக்கங்களைக் கொண்டு இம்மலர் வெளிவரவேண்டுமென்று விரும்பி பல பெரியோர்களிடம் கட்டுரைகளைக் கேட்டிருந்தோம். சிலர் கட்டுரைகளை எழுதி அனுப்பாமையால் இவ்வளவில் இம்மலரை வெளியிடலானோம். புத்தளம் மாவட்ட சைவாலயங்கள் தொடர்பாக ஆய்வினை மேற்கொள்வோர் இதனையும் ஓர் உசாத்துணையாகக் கொள்ளக்கூடும்.

இம்மலர் வெளிவருவதற்கு முக்கியமாக இருசாரார் காரணமாக இருந்திருக்கின்றனர். முதலாவதாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் மலருக்கான நிதியுதவியை முழுமனதோடு வழங்கியோர். இவர்களில்லையென்றால் நாம் விளம்பரதாரர் பலரை நாடி அலைய வேண்டியநிலை ஏற்பட்டிருக்கும்.

அடுத்துக் குறிப்பிடப்படவேண்டியவர்கள் ஆசிச்செய்திகள், பாமாலைகள், கட்டுரைகள் என்பனவற்றை வரைந்துதவியவர்கள் இவ்விருசாராருக்கும் எமது இதமான நன்றிகள்.

இறுதியாக இம்மலர் சிறப்பாக வெளிவரவேண்டுமென்பதற்காக அடிக்கடி எம்மை ஆலயம் - கும்பாபிஷேகம் தொடர்பான பெருந்தொகையான வேலைப்பளுவின் மத்தியிலும் சந்தித்து ஆக்கமும் ஊக்கமும் அளித்த எனது அன்புக்குரிய சகோதரர் எல். சிவநாதன்பிள்ளை அவர்கட்கும் மலர் அச்சிடப்பட்டு வெளிவரும் வரையில் மிகவும் விழிப்புடனிருந்து கருமம் ஆற்றிய எமது மதிப்பிற்குரிய திரு. த. பத்மநாதன் அவர்கட்கும் அன்புச் சகோதரர் அ.ந. இராஜகோபால் அவர்கட்கும் எமது மனங்கனிவான நன்றிகள் உரியதாகும்.

இக்கும்பாபிஷேக மலரினை மிகக்குறுகிய காலத்தில் அச்சிட்டுதவிய கொழும்பு வானதி பதிப்பகத்தினர்க்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

இம்மலரிலே காணப்படும் பாமாலைகள் இவ்வாலய உத்சவ காலங்களில் பாடுவதற்கு ஏற்றன. ஏனைய கட்டுரைகள் கல்வியியலாளர்கள், தமிழ் - இந்துநாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்கும் மாணவர்கள், இந்துசமய ஆர்வலர்கள் மற்றும் ஆய்வாளர்கள் என்போர்க்குப் பெரிதும் பயன்தரக்கூடியன.

இம்மலர் விற்பனை மூலம் பெறப்படும் நிதி இவ்வாலய அபிவிருத்திப் பணிகளுக்கே பயன்படப்போகிறது என்பதனாலும் இம்மலரைச் சகலரும் பெற்று தாமும் பயனடைவதுடன் சமய அபிவிருத்திக்கும் உதவுவார்களாக.

மு. கௌரிகாந்தன்
*(மலராசிரியர்)*

உ
சிவமயம்

# புத்தளம் மன்னார் வீதி
# ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்

*- சில வரலாற்றுக் குறிப்புக்கள்.*

மு. கௌரிகாந்தன்,
ஆசிரிய ஆலோசகர் (இந்துசமயம்)
வடமேல் மாகாணம்.

புத்தளத்தில் சித்தி விநாயகர் என்ற பெயரிலே இரண்டு ஆலயங்கள் உள்ளன. முதலாவது புத்தளம் நகரிலே உள்ள மன்னார் வீதியில் அமைந்துள்ளது. மற்றையது சேனைக்குடியிருப்புக் கிராமத்திலே உள்ள அரசடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம். இவற்றிலே முதலாவதாகக் குறிப்பிட்ட ஆலய வரலாறுபற்றி இங்கு சருக்கமாக நோக்குவோம்.

இவ்வாலயம் புத்தளம் நகரிலே உள்ள சைவாலயங்களில் காலத்தால் மிகவும் முற்பட்டதென்பர். புத்தளம் எனும் நகரின் பெயருக்கும் இவ்வாலயத்திற்கும் இடையே ஒரு நெருக்கமான தொடர்பு இருந்திருக்கிறது. புத்தளத்தின் பெயர்க் காரணத்தை விளக்கவந்த திரிகோணமலை கனகசுந்தரம்பிள்ளை இராசேசுவரன் அவர்கள் தமது 'ஈழநாட்டு இடப் பெயர்களில் தமிழின் ஆளுமை எனும் கட்டுரையில்,

> ''பாம்புப் புற்றுகள் இருந்த காரணத்தால் புற்றளம், புத்தளம் ஆகியது. வெளிநாட்டார் மொழிகளில் 'பட்டாள நகர'மென்றும் 'நாகபட்டினம்' என்றும் இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. பாம்புப் புற்றுகளுடன் நாகபாம்புகள் இருந்த காரணத்தால் 'நாகபட்டினம்' என்ற பெயரும் பிற்காலத்தே புத்தளம் என்ற பெயரும் வருவதாயிற்று'' என்று குறிப்பிட்டுள்ளார்.

புத்தளத்தில் பண்டைக்காலத்திலே வாழ்ந்த இந்துக்கள் பெரிதும் புற்று-நாகவழி பாட்டுடன் தொடர்புடையவர்களாக இருந்தனர். பண்டைக் காலத்தில் புத்தளத்தின் பலவிடங்களில் பற்றைகளும் புற்றுகளும் அதிகம் காணப்பட்டன. இவற்றிலே நாகபாம்புகள் தான் அதிகம் இருந்தன. இவற்றை அழித்து வாழ அக்கால மக்களால் முடியவில்லை. ஒரு நாக பாம்பைக் கொன்றால் ஏழு நாகபாம்புகள் பாம்பைக் கொன்றவனது வீட்டிற்குச் செல்லுமாம். இந்த அச்சம் அக்காலத்தில் நாகவழி பாட்டைக் கைக்கொள்ளப் பெரிதும் காரணமாகியது.

புத்தளத்தில் உள்ள புற்றுகளில் பெரிய மலை போன்றதானதொரு புற்று இன்று மேற்படி ஆலயம் அமைந்துள்ள இடத்தில் காணப்பட்ட மிகவும் பழமை வாய்ந்த அரசமரத்தைச் சுற்றிக் காணப்பட்டதாம். இப்புற்றிலேதான் பெருந்தொகையாக நாகபாம்புகள் இருந்தன. இவை தம்மைத் தீண்டாமலிருப்பதற்காக இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் பசுக்களின் பாலை தேங்காய்ச் சிரட்டைகளில் ஊற்றி புற்றடியில் வைத்து வந்திருக்கின்றனர். குறிப்பிட்ட புற்று விநாயகர் வடிவில் அமைந்து காணப்பட்டமையினை அவதானித்த மக்கள் அப்புற்றைப் ''புற்று விநாயகர்'' என்று அழைத்தனர். நேர்த்திக்கடன் வைத்து சேவலை அறுத்து பலியிட்டு வழிபாடியற்றினர். நாளடைவிலே வருடத்தில் ஒரு தினத்தைக்குறித்து நேர்த்தி வைத்தவர்கள் எல்லோரும் சேவல், ஆடு என்பவற்றை புற்றின் முன்பாக அறுத்து வேள்வி செய்து வழிபடச் சென்றபோது புற்றின் மீது இயற்கையாகவே குருதி சிந்திக் கொண்டிருந்ததாம். பலி வேண்டித்தான் பிள்ளையார் குருதிக் கண்ணீர் வடிக்கின்றார் என்று கூறி வேள்வியைச் செய்யமுற்பட்டவேளை பெரிய யானையொன்று தோன்றி அனைவரையும் விரட்டியதாம். அவ்வேளை அங்கு தோன்றிய சடாமுடியினை உடைய முதிய பக்தர் ஒருவர் மட்டும் உரிய யானையை நோக்கிச் சென்றாராம். யானை அவரைத் தன் துதிக்கையால் தூக்கி அரசமரத்தடியில் வைத்துவிட்டு மூன்று தடவை புற்றையும் அரசமரத்தையும் வலம் வந்து யாருக்கும் எத்தீங்கும்

செய்யாது காடு நோக்கிச் சென்றதாம். இவ்வற்புதத்தை அவதானித்த மக்கள் அன்று தொடக்கம் பலியிடுதலைக் கைவிட்டு நெய்விளக்கேற்றி வழிபாடு செய்து வந்தனர். உரிய முதியவர் அரசமரத்தடியில் மரம், ஓலை என்பன கொண்டு சிறிய ஆலயம் விநாயகப் பெருமானுக்கு அமைத்து அங்கு பல வருடங்கள் தவமிருந்தாராம். தவம் மேற்கொண்டு சித்துகள் கைவரப்பெற்று மக்கள் சித்திபெற உதவிசெய்து இறுதியில் ஆலயத்திலேயே சமாதியடைந்துவிட்டாராம். சித்திகள் பலவற்றை அருளிய மையாலும் சித்துகள் பெற்ற சித்திராங்கதன் என்ற சித்தரால் பல்லாண்டுகள் வழிபடப்பட்டமையாலும் இந்த விநாயகர் சித்தி விநாயகர் என்று போற்றப்பட்டார். நாளடைவில் நாகபாம்புகளின் தொல்லையும் மக்களுக்கு இல்லாமலே போய்விட்டது.

விநாயகப் பெருமானின் அருளாற்றலைப் பலரும் அறிந்தனர். கரைத்தீவு, இலவன்குளம் முதலான இடங்களிலிருந்து லொறிகளில் தேங்காய் ஏற்றிக்கொண்டு வியாபாரம் செய்யச் செல்வோர். இவ்வாலயத்தின் அருகே தமது வண்டிகளை நிறுத்தி பெருந்தொகையான தேங்காய்களை இவ்வாலயத்தின் முன்பாக இருந்த பெரியதொரு கல்லிலே உடைத்து வணங்கிச் செல்வர். இக்கோயிலுக்கருகில் வாழ்ந்த இந்துக்கள் தேங்காயிலிருந்து நெய் தயாரித்து அணையா விளக்கேற்றினர். விளக்கு அணையாமல் தொடர்ந்து எரிய வேண்டுமென்பதற்காக உருவாக்கப்பட்ட ஆலயத்தில் காணப்படும் கல்விளக்கு பிற்காலத்தது என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடப்படவேண்டியதாகும்.

வழிப்போக்கர்கள் மட்டுமன்றி அயலிலுள்ள ஆலயங்களுக்கும் காவல் தெய்வமாக இந்த விநாயகர் விளங்கினார். முள்ளிபுரம் பகுதியில் முன்பு காணப்பட்ட திரௌபதை அம்மன் வழிபாடு செய்தவர்களும் முதலில் இந்த விநாயகரை வழிபட்ட பின்னரே அம்மனை வழிபட்டிருக்கின்றனர். இதனைவிட இவ்வாலயத்திற்கு அருகில் இன்றும் அருளாட்சிபுரியும் மாரியம்மன் ஒவ்வொரு வருடமும் நவராத்திரி இறுதி நாளன்றைக்கு சித்தி விநாயகப் பெருமான் ஆலயத்திற்குப் பவனிவந்து அதன் பின்புதான் உரிய இடத்திற்குச் சென்று அம்பு விடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மிக நீண்டகாலத்திற்குப் பின்னர் சிவகங்கை மாவட்ட காரைக்குடியைச் சேர்ந்த மெய்யப்பன் செட்டியார் என்பவர். இவ்வாலயத்தின் மகத்துவத்தைக் கேள்வியுற்று தமது தந்தையாராகிய முத்தையாச் செட்டியார் பெயரில் 1938ஆம் ஆண்டு விநாயகருக்குக் கல்லினால் ஒரு சிறிய ஆலயம் அமைத்தார் எனப்படுகிறது. இது மடாலய அமைப்பைக் கொண்டது செட்டியார் அவர்களால் ஆலயம் அமைக்கப் பட்டாலும் நித்திய, நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடைபெற்றமைக்கான ஆதாரங்களில்லை.

ஆயினும் 1950-1970 ஆண்டுக் காலப்பகுதியில் இவ்வாலயத்தின் அருகில் வசித்து வந்தவர்கள் பூசை செய்து வந்ததாக அறிகிறோம். இவர்கள் இவ்வாலயத்தின் அருகில் உள்ள குளத்தில் தினமும், மாலையில் நீராடி விநாயகப் பெருமானுக்கு விளக்கேற்றிய பின் தனது வீட்டுகளுக்கு விளக்கேற்று வார்களாம். நவராத்திரி திருவிழாக் காலத்தில் பத்து நாட்கள் மட்டும் விசேட பூஜை செய்ததாக அறிகிறோம். அந்தப பத்து நாட்களில் ஆலயத்தின் கல்விளக்கு தொடர்ந்து எரிந்த வண்ணம் இருக்குமாம். அந்த விளக்கே இங்கு காணப்படும் பழமைவாய்ந்த கல்விளக்காகும்.

1972ஆம் ஆண்டு தொடக்கம் தனப்பெரியார்களே பூசைக்கு உதவிய பெரியார்களான திரு. வீ.கே. சீவரத்தினம், திரு. மு. நடராஜ தேவர் ஆகியோர் முறையே இவற்றுக்கானக் கொடுப்பனவு பூசைக்குத் தேவையான பொருட்கள் என்பனவற்றை வழங்கியதாகத் தெரியவருகின்றது.

1972ஆம் ஆண்டுக்குப் பின்னர் வழிபாட்டு பூசைகள் நடாத்திய செல்வன் கந்தசாமி சிவபாலனைத் தொடர்ந்து இவ்வாலயத்தில் பூசைகள் நிகழ்த்திய சிவாச்சாரியார்களில் வீ. சுவாமிநாதக் குருக்கள், வரதராஜக் குருக்கள், வைத்தீஸ்வரக் குருக்கள், சு. வாமதேவ சர்மா, ஆ. சண்முகராசக் குருக்கள், சிவகுமாரக் குருக்கள் குறிப்பிடத்தக்கவர்கள். மாந்திரிகத் தொழிலுடன் தொடர்புடைய திரு. டயஸ் பாலா அவர்கள் இவ்வாலயத்தில் சில காலம் பூசை நிகழ்த்தி இருக்கின்றார்.

இவ்வாலய வரலாற்றில் வருந்தத்தக்க விடயமொன்றை இவ்விடத்தில் குறிப்பிடாமல்விட முடியாது. அது ஆலயத் தல விரிச்சமான மிகத்தொன்மைவாய்ந்த அரச மரம் 1994ம் ஆண்டு மார்கழி இனம் தெரியாதோரால் தீ இட்டு எரிக்கப்பட்டமையாகும். நாட்டின் நிலவரங்களாலும் தனிப்பட்ட காரணங்களாலும் பிரச்சினைகள் பெருகப் பெருக மக்கள் விமோசனம் வேண்டி ஆலயங்களை நாடுவது இயல்பே. இதுபோன்ற காரணங்களால் இந்து மக்களுக்கான வழிபாட்டு ஒழுங்கினை செய்து கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இவற்றின் விளைவாக 1995ம் ஆண்டு திரு. வீ.கே. சீவரெத்தினம் அவர்களின் தலைமையில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை முதல் அமைக்கப்பட்டது. அந்த வரிசையில் திருவாளர்கள் வீ. கந்தசாமி, க. செல்வராஜா, ம. சிவலிங்கம், ரா. சிவலிங்கம், பொ. சபாரெத்தினம், சீ. சந்திரன், வீ. சண்முகவேல் ஆகியோரின் முயற்சியால் 1995இல் சிவ ஸ்ரீ ஐயப்பதாசக் குருக்கள் அவர்கள் மூலம் முதல் பாலஸ்தானம் செய்தார். இதன்பின் ஆலய நிருவாகச் சபையினர், பொதுமக்கள், வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோரின் உதவியுடன் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுக்கு மூலஸ்தூபி அமைத்து முதன்முதலாக 1997ம் ஆண்டு முறைப்படி கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன்பின் தினமும், காலை, மாலை ஆகிய இரு வேலைகளும் விநாயகப் பெருமானுக்கு விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றது. 1998 முதல் வருடாந்த அலங்கார உற்சவம் ஆவணிமாத விநாயக சதுர்த்தி தீர்த்த நாளகக் கொண்டு பத்து தினங்கள் நடைபெற்று வருகின்றது. இதனைவிட ஒவ்வொரு மாதமும் வரும் விநாயக சதுர்த்தி அன்று விநாயகப் பெருமானுக்கு சிறப்பான பூசை நடைபெறுவது வளக்கமாகிவிட்டது.

கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர் இவ்வாலயத்துக்கு வருகை தந்து வழிபாடு செய்தோர் மேன்மையுறத் தொடங்கினர். தொழில் வாய்ப்பைப் பெறுவதற்காக வெளிநாடு செல்ல விரும்பியோர் இவ்வாலயம் வந்து நேர்த்தி வைத்தனர். உரிய பலனும் கிட்டியது.

1997ம் ஆண்டு மே மாதம் திரு. இலா. சிவநாதன்பிள்ளை அவர்களின் தலைமையில் புதிய நிருவாகசபை நியமிக்கப்பட்டு பொதுமக்கள் புத்தளத்து மற்றும் பிற இடங்களில் தொழில்புரியும் வர்த்தகப் பெரியோர்கள், வெளிநாடுகளில் தொழில்புரியும் அன்பர்கள் ஆகியோரின் உதவியுடன் பல இலட்ச ரூபா செலவில் ஆலயம் பிரமாண்டமான கலைப் பொலிவோடும் கட்டப்பட்டுள்ளது. அவ்வாலயத்தின் மூர்த்தித் தளங்கள் நடராஜா், அம்பாள், நவக்கிரகம், வைரவர், நாகதம்பிரான், மாரியம்மன், ஆஞ்சநேயர், வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான் ஆகிய தெய்வங்கள் புதிதாகப் பிரதிஸ்ர செய்யப்பட்டுள்ளது. அத்தோடு மணிக்கோபுரம், முன் வாசல் கோபுரம் புதுப் பொலிவோடு அமைக்கப்பட்டுள்ளது.

திருப்பணிச்சபையினர் மற்றும் விநாயக அடியார்கள் அனைவரின் முயற்சியாலும், உதவியாலும் எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் திருவருள் கடாச்சத்தினால் (2001-06-11) இவ்வாண்டு யூன் மாதம் 11ம் திகதி திங்கட்கிழமை புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளமை எங்கள் எல்லோர்க்கும் பெருமையும் சாந்தியும் தருவதாகும்.

*நன்றி:*

இக்கட்டுரையினை எழுதுவதற்குத் தேவையான தகவல்களையும் ஆலோசனைகளையும் பெருமனதோடு வழங்கிய அமரர்களான திரு. இரத்தினசிங்கம், மு. நடராஜ தேவர், சி. சிவகுருநாதன் ஆகியோருக்கும் சிவாச்சாரியார் சிவஸ்ரீ சா. வைத்தீஸ்வரக் குருக்கள் மற்றும் திருவாளர்கள். வீ. கந்தசாமி, சுப்பிரமணியன் செட்டியார், இலா. சிவநாதன்பிள்ளை, கு. லோகநாதன், க. செல்வராஜா, தி. கனகசபை, கே. பூபாலசிங்கம், மோசஸ் மரியதாஸ், அல்ஹாஜ்ஜி. ஏ.என்.எம். சாஜாஹான், க. சதாசிவம், திருமதி. லீலா ரஞ்சுதம் என்போருக்கும் எனது மனங்கனிவான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### இராமகிருஷ்ண மிசன்

## சுவாமி ஆத்மகனாநந்தா அவர்கள்

### வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

புத்தளம், மன்னார் வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்றருளிய நமது பெருமைக்கும், வழிபாட்டிற்கும் உரிய ஞானிகள், அதற்கான சிறந்த வழியாக, இறைவழிபாட்டை வகுத்துத் தந்துள்ளார். ஆனால் அந்த வழிபாடு ஒழுக்கத்தின் அடிப்படையில் அமையவேண்டும். 'மனத்துக்கண் மாசு இலாதவனே' இறைவனைக் காண தகுதியுடையவன். நேர்மை, வாய்மை, கடமையுணர்வு, தியாகம் போன்ற உயர்பண்புகளால் கட்டியெழுப்பப்படும் ஒழுக்கம், மனதை இறைவன்பால் நிலைநிறுத்த பெரிதும் உதவும். அந்நிலையில்தான் சமயத்தின் உயர்ந்த பயனாகிய அன்பு, அமைதி என்னும் தெய்வீகநிலை எய்தப்படுகிறது. 'பாமரனைப் பண்புள்ளவனாக்கி, பண்புள்ளவனை தெய்வீக நிலைக்கு உயர்த்துவதே சமயம்' என்பார் சுவாமி விவேகானந்தர். அந்த தெய்வீக நிலையை எய்த, மிகுந்த கவனத்தோடும், பொறுமையோடும், ஒழுக்கத்தை மேற்கொண்டும் இறைவழிபாட்டில் ஈடுபடுதல் அவசியம் என்பது வெளிப்படையாகிறது.

அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானது அருளாசிகளைப் பிரார்த்தித்து, கும்பாபிஷேக விழா சிறப்புடன் அமைய வாழ்த்துகிறோம்.

### தமிழ் இன்ப அன்பு வாழ்வு

காவியங்கள் பல திறந்தன. அவைகளுள் சிலவற்றில் உலகைக் காணலாம். சிலவற்றில் கடவுளைக் காணலாம். சிலவற்றில் உயிரைக் காணலாம். மூன்றையும் ஒருங்கே காட்டிடும் காவியங்கள் மிகச் சில. அச்சிலவற்றுள் பெரியபுராணம் ஒன்று. உலகுயிர் கடவுள் மூன்றும் சேர்ந்த இடத்திலேயே இன்ப அன்பு வாழ்வு நிகழும் இன்ப அன்பு அற்ற வாழ்வு வாழ்வாகாது. அது வற்றல் மரம் போன்றது. பெரிய புராணத்தில் தமிழ் இன்ப அன்பு வாழ்வு யாண்டும் பொலிதில் வெள்ளிடை.

துர்க்கா துரந்தரி கலாநிதி,

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

புத்தளம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

புத்தளம் பகுதியில் மன்னார் வீதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் விநாயகப்பெருமானுக்குக் குடமுழுக்கு விழா நடைபெறுவது குறித்து பெருமகிழ்ச்சியடைகின்றோம். இலங்கைத் திருநாட்டின் நாலாபக்கங்களிலும் விளங்குகின்ற திருக்கோயில்களில் இன்றைய காலகட்டத்தில் குடமுழுக்குவிழா எடுக்கப்படுவது பாராட்டுக்குரிய அருள் நிகழ்வாகும்.

முப்பழம் நுகரும் அற்புத விநாயகனை எமது வழிபாட்டின் முதற் தெய்வமாகப் போற்றுகிறோம். குழந்தைகளை மகிழ்விப்பது போன்று எம்பெருமானை முக்கனிகளாலும் இனிப்புப் பதார்த்தங்களினாலும் நைவேத்தியம் செய்து பெருமானிடமிருந்து பல சுவையான பேறுகளை நாம் பெற முயற்சிக்கிறோம். பெருமான் ''நண்ணார்க்கு நலமிலனாகவும் நண்ணினர்க்கு நல்லவனாகவும் அருள்பாலிக்கின்றார் என்பதை சைவ மக்கள் நன்கு உணர்வர். இந்த அனுபவம் புத்தளம் வாழ் சைவ மக்களுக்கு நன்கு ஏற்பட்டிருக்கக் கூடும். எனவே தான் குடமுழுக்கையும் தரிசித்து சிறப்பு மலரையும் வெளியிட்டு ஆனந்தமடைய இருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் வல்ல சித்தி விநாயகனுடைய பரிபூரணமான திருவருள் நன்கு கிடைக்கவேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

### இறைவனிடம் இல்லாதது நம்மிடமுள்ளது

ஞானிகளுக்கும் இறைவனுக்கும் நம் நன்றியை தெரிவிக்கும் பொருட்டு ஏதாவது காணிக்கை அளிக்க வேண்டுமெனத் தோன்றினால் அவர்களிடம் எது இல்லை நாம் கொடுக்க. எல்லாப் பொருட்களின் மூலமும் அவர்களே. யோசித்துப் பாருங்கள் அவர்களிடம் இல்லாமல் நம்மிடம் மட்டும் இருக்கும் பொருளின் நினைவு பளீரென்று தெரியும். அதுதான் அறியாமை. ஞானிகளுக்கும் இறைவனுக்கும் நம்மிடமுள்ள அறியாமையைக் காணிக்கையாகச் செலுத்தி நல்லறிவைப் பெறுவோம்.

### இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்

## திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள்

### வழங்கிய

## ஆசிச் செய்தி

புத்தளம், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் புனராவர்த்தன கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது ஆசிகளை வழங்குவதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

அவ்வக் காலங்களில் ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்து, கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்துவதன்மூலம் ஆலயத்தின் சாந்நித்தியம் மேலும் அதிகரிக்கின்றது. அத்துடன் பக்தர்களுக்கு அருளும் கருணையும் கிடைக்கின்றது.

இப்பெருங்கைங்கரியத்தை முன்னின்று நடத்துகின்ற ஆலய பரிபாலன சனையினரை மனமாரப் பாராட்டுகின்றேன்.

மகா கும்பாபிஷேகக் கிரியையோடு, இப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கும், பக்தர்களுக்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் பெருமானின் அருள் பரிபூரணமாகக் கிட்டவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

### பரிமேலழகர் உரைவளம்

நற்குணங்களாவன துறந்தாரைப் பேணலும்விருந்த அயர்தலும். வறியார் மாட்டு அருளுடைமையையும் முதலாயின. நற்செய்கைகளாவன வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பித்தலும் அட்டில் தொழில் வன்மையும் ஒப்புரவு செய்தலும் முதலாயின; வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது, முதலை அறிந்து அதற்கு இயைய அளித்தல்.

ஞானம் என்பது தெளிவு. தெளிவு என்பது வாழ்வு வாழ்வு என்பது உண்மை. உண்மை என்பது கடவுள். கடவுள் என்பது முழுமை. முழுமை என்பது ஞானம். பந்தம் பாசம் ஆசை உன்னை இழுக்கட்டும் கடவுளையே நினை. பரமாத்மா தெளிவு என்ற ஞானத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளும் வழியை தான் சொல்வேன் போய் அறி. நாயன்மார்கள் கடவுளை அனுபவித்தவர்கள். கற்பிக்கின்ற அறிவு படைத்தவர்கள். நாம் கற்கின்ற அறிவு படைத்தவர்கள். இறைவன் ஞானிகளை பிறக்க வைப்பதே இறைவனைப்பற்றி ஞானி உலகில் பிரச்சாரம் செய்ய.

உலகம் மறந்துபோன உணர்வுகளில் ஒன்று நாகரிகம். இறைவன் எட்டக்கூடிய இடத்தில் தான் இருக்கிறான். நம்பிக்கை ஏற்படும் போது மனித உடலில் அணுக்கள் மாறும் மாறுதல்கள் ஏற்படும் போது சக்தி வெளிப்படும்.

## மகா கும்பாபிஷேகப் பிரதமகுரு
## பிரதிஷ்டா கலாநிதி,
# சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்
## ஆதீன குரு ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் தேவஸ்தானம் ~ நயினை
## வழங்கிய

## ஆசியுரை

கஜாநநம் பூத கணாதி சேவிதம்
கபித்த ஜம்பூ பலசார பக்ஷிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்//

வேண்டுவார் வேண்டாதார் என்ற பாகுபாடின்றி எல்லோர்க்கும் அருள்புரிபவர். பிள்ளையாரின் அருளைச் சுலபமாக பெறமுடியும் என்பது சான்றோர் வாக்கு. பதினாறு, முப்பத்திரண்டு பேதங்கள் அவருக்கு உண்டு. பிரம்மச்சாரியாகவும், வல்லபை, சித்தி, முத்தி என்ற சக்திகளோடும் இருப்பதை விநாயக புராணம் முதலானவற்றில் காணலாம். வேதம் ஓதினாலும், திருமுறை ஓதினாலும் ஓம் என்ற பிரணவத்தைக் கூறும் மரபு உண்டு. அதனாலேயே ''பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்'' என்றும் அவரது சிறப்பை அறியலாம். யானை முகத்தோனாகிய விநாயகப் பெருமானை வழிபடத் தொடங்கும் போது ''பிரசன்ன வதனம் தியாயேத்'' என்று சிரசில் குட்டி கும்பிடுகிறோம். குட்டும்போது வலக்கையால் வலதுபக்க சிரசிலும் இடக்கையால் இடதுபக்க சிரசிலும் மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் குட்டவேண்டும். தோப்புக்கரணம் போடும் போது வலக்கையால் இடது காதையும், இடக்கையால் வலது காதையும் பிடித்து செய்தல் வேண்டும். பிரசன்ன வதனம் என்பது யானை முகம் என்று கருத்தாகும். ஒளியான திருமேனி உடையவர் என்றார் உமாபதி சிவாச்சாரியார் அங்கு சிறப்பான கருத்து சந்தோஷமான முகம் உடையவர் என்பதாகும். இத்தகு சிறப்புகளுடைய விநாயகப் பெருமானின் ஆலயம் புனருத்தாரணம் செய்வித்த தர்மகர்த்தாக்களும், திருப்பணிக்கு பேருதவி செய்த பெரியோர்களும், ஆலயக்குருவும், சிறந்த முறையில் ஆலயம் அமைத்த சிற்பியும் சிறப்புற்று விநாயகப் பெருமானின் பேரருளால் விக்னங்கள் யாவும் நீங்கப் பெற்று கும்பாபிஷேக நிகழ்ச்சிகளோடு சிறந்த கட்டுரைகளோடு வெளிவரும் மலர் சிறப்புடையதாக, வாசிப்போர் விநாயகப் பெருமானின் திருவருளால் வாக்கும் நல்ல மனமும் உண்டாக அருள்மிகு சித்தி விநாயகப் பெருமானின் திருவடிக் கமலங்களை பணிந்தேத்தி வாழ்த்தி வணங்குவோம்.

சுபமஸ்து

### வெறுப்பு

*சிந்தனையைக் கண்டவன் சிரித்துக் கொண்டேயிருக்கின்றான்.*
*சிந்தனையைக் காணாதவன் அழுது கொண்டேயிருக்கின்றான்.*
*அழாமல் சிரிக்காமல் வாழுகின்றவன் தனது வாழ்க்கையை*
*தானே வெறுத்து கொண்டிருக்கின்றான்.*

### புத்தளம் இந்து மகா சபைத் தலைவர்
# திரு. தா. முருகேசம்பிள்ளை அவர்கள்
### வழங்கிய
## வாழ்த்துச் செய்தி

*"திருவாக்கும் செய்கருமம் கைகூடும், செஞ்சொல்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்*
*காதலால் கூப்புவர் தம்கை."*

என்ற சைவ சமயக் கோட்பாட்டின்படி முழு நம்பிக்கையோடு, முன்னவனாம் தும்பிக்கையானை முதலில் வணங்குகின்றோம். கணபதியை வணங்கும் வழக்கம் பொதுவாக இந்துக்கள் அனைவருக்கும் உண்டு. சகல ஆலயங்களிலும் அவருக்கே முதல் பூசை நடைபெறும்.

சைவ சமயிகளாகிய நாம் இவரைப் பிள்ளையார் என்றும், சிவனின் மூத்த புதல்வன் என்றும் நம்பி வழிபடுகின்றோம். இந்த மூர்த்தியின் உருவம் முதலாவது - ஞானசொரூபியாகிய ஆதி அந்தமில்லா ஆண்டவனே என்று அறிவிக்கின்றது. இரண்டாவது. - எல்லா மதங்களையும் தமதாக்கிக்கொண்டு உச்சரிக்கப்படும் நாத தத்துவத்தின் பொருளாக பிரணவத்தின் ஒலிக்குரிய வடிவத்தைக் காட்டுகின்றது. மூன்றாவது - பெரிய வயிறு உலகம் முழுவதையும் தன்னுள் அடக்கிக் கருணையுடன் காக்கும் தன்மையை உணர்த்துகின்றது. நான்காவது - ஐந்து கரங்களைக் குறிக்கும் தத்துவப் பொருள் - பாசமேந்திய கை படைத்தலையும், அங்குசமேந்திய கை அழித்தலையும், ஒற்றைக்கொம்பினை ஏந்திய கை அருளலையும், குறிப்பிட்டு ஐம்பெருந்தொழில்களைக் காட்டி பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் ஐந்து மூர்த்திகளையும் சேர்த்து பிள்ளையாராகிய இவரே என அறிவிக்கின்றது.

கணபதியின் காபி பிரம்ம சொரூபமாகவும், இடப்பாகம் சக்தி வடிவமாகவும், வலப்பாகம் சூரிய சொரூபமாகவும், திருமுகம் விஷ்ணு அம்சமாகவும், முக்கண் சிவசொரூபமாகவும் விளங்குகின்றன.

எல்லாவற்றையும் பார்க்கிலும், உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் செய்தால்தான் மகா கணபதிக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அவ்வளவு பெரிய தியாகம் செய்வதற்கு தயார் என்பதற்கு அறிகுறியாகத் தான் ஈசுவரனைப் போலவே மூன்று கண்களுடைய தேங்காயைச் சிருஷ்டித்து அதனை விநாயகனுக்கு அர்ப்பணம் செய்கின்றோம்.

இறைபக்தியை வளர்க்கவே ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. இறைபக்தி மனதிற்கு அமைதியையும், நிறைவையும் அளித்து வாழ்க்கையை வளமாக்குகின்றது. ஆடம்பரத்தை விடுத்து எளிமை, தூய்மை முதலிய பண்புகளின் அடிப்படையில் இறைவழிபாட்டில் ஈடுபட்டு பக்தியை வளர்க்கவும் குடமுழுக்கு நிகழ்வுகள் சிறப்புற அமையவும் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் சித்தி விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

சுபம் -

## புத்தளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுரு

# சிவஸ்ரீ சா. வைத்தீஸ்வரக் குருக்கள்

வழங்கிய

## ஆசிச் செய்தி

கஜாநநம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாஸீதம் சோக விநாச காரணம்
நமாமி விக்நேச்வர பாத பங்கஜம்.

ஆன்மீகத்துறையில் ஆன்மீக ஈடேற்றத்துக்குரிய பல வழிமுறைகள் காலத்துக்குக்காலம் மாறிக்கொண்டு வந்த போதும் அதன் அர்த்தமும் பொருளும் மாறுபாடற்றதாகவே இருந்து வந்துள்ளது. கலியுக வரலாற்றில் ஆலய வழிபாட்டு முறையில் கூட்டுவழிபாடு சிறந்ததாக அமைந்ததன் காரணம் அறியாமை மற்றும் உண்மைப்பொருள் விளக்கமும் மனப்பக்குவமும் இன்மை காரணமாக இருளில் நீதியைத்தேடும் அசுரகுலத்தன்மை மேலோங்கிக் காணப்படுவதால், மனம் ஒருமைப்பட மறுப்பதால் உற்றுநோக்கி உள்ளம் கசிந்தும் காரண காரியங்களால் கிரியை மார்க்கத்தால் துஷ்டசிந்தனையகற்றி வரையறுப்புக்கு உட்பட்ட வேத ஆகம முறைப்படி சொல்லால், செயலால், மனதால் இறைவனை வேண்டுவது இன்றைய ஆலயவழிபாட்டு முறையில் மிகச்சிறந்ததாகும் ஞானிகள், துறவிகள், முனிவர்கள் ஆகியோருக்கு உண்டி, உறையுள் தந்து சிறப்பித்துப் போற்றுபவர்கள் கிருகஸ்தர்கள். ஆகவே லோக வாழ்க்கையில் இருந்து கிருகஸ்தர்களும் ஞானிகள், துறவிகள் அனைவரும் ஏற்ற ஈடேற்ற முறைகள் ஆகமத்தில் இருப்பதால் அம்முறைப்படி அமைந்த ஆலயத்தில் முதல்வனும் மூத்தவனுமாகிய வல்வினை அறுத்து நல்வினை அருளும் விநாயகரது மஹா கும்பாபிஷேகம் சிறப்புற அழகிய மண்டபமும் முகஸ்தூபியும் சுற்றுப்பரிவாரமூர்த்திகளும் கிரமப்படி அமைத்துத் தந்த நிர்வாகக் குழுவிற்கும் தலைவர் சிவநாதன்பிள்ளை அவர்களின் முயற்சிக்கும் பாராட்டி, பக்தகோடிகள் அனைவருக்கும் சர்வமங்களம் அருளப் பிரார்த்தித்து அம்பிகை அடிபணிந்து எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''ஓம் ஸர்வேஷாம் ஸ்வஸ்தி பவது
ஸர்வேஷாம் சாந்திர் பவது
ஸர்வேஷாம் பூர்ணம் பவது
ஸர்வேஷாம் மங்களம் பவது"

எங்கும் பரிபூரணத்துவம் நிலைக்கட்டும் எங்கும் சாந்தி நிலைக்கட்டும். திருப்தி அனைவர்கள் உள்ளத்திலும் நிறையட்டும். புனிதத்தன்மை எங்கும் பரவட்டும்.

சுபம்பவது.

### ஆண்டவனைப் பற்றுதல்

கோயில் விளக்குகளைத் துடைத்துக் கொண்டே இருந்த துணி தீவெட்டிக்குப் பயன்பட்டுவிடுகிறது. ஆண்டவனை எண்ணி உருகிக் கொண்டே இரு. உலகிற்கு பயன்பட்டுவிடுவாய்.

## புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு

# சிவஸ்ரீ இ. சிவகுமாரக்குருக்கள்

### வழங்கிய

## ஆசிச் செய்தி

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும், வெற்றி புனைந்த விழிமூன்றும் பெற்றதொரு தண்டைக்கால் வாரணனாய்ப் புத்தளம் நகரில் கோயில் கொண்டு அருள்புரியும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானது திருப்பணிகள் எனது சேவைக் காலத்தில் நிகழ்ந்துள்ளமை எனது இறை சேவைக்கும் எங்கள் வம்சத்திற்கும் இறைவன் தந்த நற்சான்று என்று உளம் நெகிழ்கின்றேன்.

இந் நகரப் பகுதிவாழும் இந்துப் பெருமக்களது அயரா நன் முயற்சியாலும், மிகச் சிறப்பாக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பரிபாலன சபைத் தலைவர் திரு. இலா. சிவநாதன்பிள்ளை அவர்களின் விடாமுயற்சியாலும் அவருடன் உறுதுணையாக இருந்த பரிபாலன சபையினராலும் ஏனைய பல பாகங்களையும் சேர்ந்த அன்பர்களது நிதியுதவிகளாலும் திருப்பணிகள் நிறைவு பெற்றுள்ளது. புதிய அர்த்த மண்டபமும், பரிவாரக் கோயில்களும் முகப்பு கோபுரமும், அலங்கார வேலைப்பாடுகளுடன் அழகுற அமைந்த ஆலயத்திலே ஓங்கார நாத ஒலிதரவந்த காண்டாமணிக் கோபுரமும் சிறப்பம்சமாகும்.

11.06.2001ம் திங்கட்கிழமை அன்று திருக்குடமுழுக்கு நடைபெற்றது. ஆஸ்திக அன்பர்களது உள்ளங்களை உவகை பெறச்செய்தது. நாடிவரும் அடியாரைத் தேடி வருவோனை வலது திருப்பாதத்தை முன்வைத்துக் காட்சிதரும் ஸ்ரீ சித்திவிநாயகனைப் பணிந்து இத்திருப்பணி சிறப்போடு நடைபெறப் பாடுபட்ட சகலருக்கும் ஐயனின் திருவருள் பூரணமாகக்கிட்டப் பிரார்த்தித்து மனமார்ந்த நல்லாசிகளையும் கூறி மகிழ்கிறேன்.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும், உருவாக்கும் ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக் காதலாற் கூப்புவர் தம்கை.

### சந்துஷ்டி

மனநிறைவு! நினைத்தது நடந்தாலும். நடக்காவிட்டாலும் நினைத்ததை அடைந்தாலும் அடையாவிட்டாலும் கவலைப்படாமல் இருக்கின்ற நிலைதான் சந்துஷ்டி.

1. விரதத்தின் விளக்கம் விளிப்புணர்வே.
2. சாதகனாக மாறு சாந்தி பெற்றிடுவாய்.
3. நல்லவர்களை நாடு நலம் பல பெறுவாய்.
4. ஞானத்தில் நினைந்தால் ஞாலத்தில் கஷ்டமில்லை.
5. சர்வம் பிரும்மமயம் ஞானம் என்பது எங்கோ உள்ள கடவுளைக் கொல்வது அல்ல.உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் கடவுளாகக் கொள்க.
6. உள்ளம் பண்பட்ட நிலம் எண்ணம் தரமான விதை இறைவன் பருவ காலம். பயன் வாழ்க்கை நிறைவு உலகம் தேவை ஆராய்ச்சி முடிவு ஞானம் என்றால் துன்பம் தூசி இன்பம் தென்றல்.
7. பற்றில்லாப் பரம்பொருளைப் பற்றினால் பக்தி தானாகவே வரும்.

## ஆலய பரிபாலனசபையின் தலைவர்
# எல். சிவநாதன்பிள்ளை அவர்கள்
## வழங்கிய
# வாழ்த்துச் செய்தி

எம் செயலால் ஆவதொன்றில்லை, எல்லாம் அவன் செயல் எனும் நன்நெறிபோல் சித்திவிநாயகப் பெருமான் நல்ல உள்ளங்களில் குடிபுகுந்து அருமையான இத்திருப்பணிகளை அற்புதமாய்ச் செய்வித்ததினால் புத்தளம் நகரில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் புதுப்பொலிவு பெற்று இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கிடைத்தமை, எல்லாம் வல்ல ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் திருவிளையாடலில் ஒன்றேயாகும்.

புதிதாக ஒரு கோயிலைக் கட்டுவதிலும் பார்க்க கட்டிய கோவில்களைப் புதுப்பித்துக் கொள்ளுதல் மிகப்பெரிய புண்ணியமாகும் என எமது சைவப் பெரியார்கள் கூறுவர். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறையாவது கோயிற்தூபிகள், கருவறைகள் மற்றும் சுதைகள் புதுப்பிக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்து சுவாமியின் மூர்த்தத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென சிவாகம விதிகள் கூறுகின்றன. ஆலயத்தை ஒரு புருஷ வடிவமாகக் கொண்டால் அதில் உள்ள கருப்பக் கிரகம் தலையாகும். அர்த்த மண்டபம் கழுத்தாகும். மகா மண்டபம் மார்பாகும். கோபுரம் பாதமாகும் என்று எமது சிவத்தமிழ்ப் பெரியவர்கள் இயம்புவர்.

இத்தகைய அமைப்பிலே இக்கோவிலைப் புதுப்பித்துக் கொள்ளக்கிடைத்தமை பெரும் பேறாகும் இப்புண்ணிய காரியத்தை முன்னின்று நடாத்த ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் அடியார்களும் தொண்டர்களும் அருள் பெற்றுள்ளனர். அவனருளாலே அவன் தாள் வணங்கக் கிடைத்த பாக்கியம் மிகப்பெரும் பேறாகும் அதைவிட அவருக்காக ஆலயம் அமைக்கக் கிடைத்தமை இப்பிறவியில் எமக்குக் கிடைத்த மிகப்பெரிய பாக்கியமாகும்.

நாம் துன்ப துயரமின்றி வாழ, திருவருளே துணையாக அமையவேண்டும். அத்திருவருளைப் புரிந்து கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானுக்கு நாமெல்லாம் ஒன்று சேர்ந்து கோவில் எழுப்பி கும்பாபிஷேகம் எடுப்பதுடன் எம் திருப்பணி நிறைவேறிவிட்டதென ஓய்ந்துவிடக்கூடாது. ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் ஆலயத்துக்கு இன்னும் எத்தனையோ திருப்பணிகள் செய்யவேண்டியிருக்கின்றன. அவையாவற்றையும் நிறைவேற்ற எம்பெருமான் எம்மைச் செயல்படுத்துவானாக. நாம் கட்டியெழுப்பிய ஆலயம் மென்மேலும் மேன்மையடையச் செயல்படுவது எமது அறக்கடமையாகக் கொள்வோம்.

எனவே எல்லாம் வல்ல சித்தி விநாயகப் பெருமான் இவ்வாலயத்தில் 11.06.2001 குடமுழுக்குப் பெற்று புத்தொளியும், புன்னகையும் காட்டி அடியாரை வரவேற்று அருள் புரிகின்றான். நாமும் அவனை எமதுள்ளத்துள் எழுந்தருள வேண்டுமென வரவேற்போம், வாழ்த்துவோம், வணங்குவோம், வரம் பெறுவோம்.

நம் கடன் பணி செய்து கிடப்பதே!

### சொர்க்கம்

சொர்க்கத்தை எட்டிப் பார்க்க வேண்டுமா வழி சொல்கின்றேன். நீ வாழுகின்ற நரகத்தைச் சுத்தப்படுத்து பார்க்கலாம். போக வேண்டும்.

## ஆலய பரிபாலன சபையின் பொருளாளர்
# K. பூபாலசிங்கம் அவர்கள்
### வழங்கிய
# வாழ்த்துச் செய்தி

*''என் கடன் பணி செய்து கிடப்பதே''*

அப்பர் சுவாமிகளின் எனும் அருள்ஞானி திருவாய் மொழிக்கு அமைய, புத்தளம் ''ஸ்ரீ சித்தி விநாயகர்'' ஆலயத்திலிருந்து எல்லோருக்கும் அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானுக்கு தொண்டு செய்யும் அடியார்களுள் நானும் ஒருவனாகத் தொண்டு செய்யும் பேறு கிடைத்தது, எல்லாம் வல்ல சித்தி விநாயகரின் நல்அருள் ஆசியே காரணமாகும்.

எம்பெருமான் ''ஸ்ரீ சித்தி விநாயகர்'' ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டிய காலப்பகுதியின் பின்னர், புத்தளம் நகரில் பல பழமை வாய்ந்த ஆலயங்கள் புதுப்பொலிவு பெறத்தொடங்கின. இவ்வாறாக அருள் கொடையாக விளங்கும் ஸ்ரீ சித்தி விநாயகரின் நல்லாசியோடும்; ஆலய பரிபாலன சபை மற்றும் ஆலய திருப்பணிச் சபையினரதும் அயராத பணியினாலும்; ஆலய வளர்ச்சிக்கு மனமுவந்து பொருள் கொடுத்த வள்ளல்களின் அறக்கொடையாலும்; ஆலயத் தலைவரின் அயராத உன்னத ஆக்கப் பணியினாலும், விநாயகப் பெருமானின் அருளோடு எதற்கும் அஞ்சாது, ஓய்வு உறக்கமின்றி பல வள்ளல்களிடம் ஒருமுறை இருமுறை அன்றி பலமுறை சென்று உதவியைப் பெற்று இன்று கும்பாபிஷேகம் காணும் ''ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்'' கட்டிட, சிற்ப கலை மற்றும் அழகிய வர்ணங்களோடு புதுப்பொலிவு பெற்று நிமிர்ந்து நிற்கின்றதென்றால் அது சித்தி விநாயகரின் அருளோடு தலைவரின் விடாமுயற்சியுமே சிறப்பாக அமைந்து காணப்படுகிறது.

மேலும், எமது ஆலய நிர்வாக சபையின் அர்ப்பணிப்புடன் பணி செய்யும் தலைவர் திருவாளர் L. சிவநாதன்பிள்ளையும், இணைச் செயலாளரான திரு. K. லோகநாதன் ஆகியோரின் பங்களிப்பும் மிகப் பொறுப்புணர்ச்சி மிக்க ஆக்கபணிக்கு மிகவும் உதவியாக அமைந்தன. இவர்களுடன் இணைந்து அடியேனும் ஒருவனாக இருந்து, தொடர்ந்தும் பணி நன்றே செய்திட எல்லாம் வல்ல விநாயகனை பணிகிறேன்.

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற முதுமொழிக்கேற்ப ஒரு ஊரிற்கு சிறப்பைப் பெற்றுத் தருவது அவ்வூரில் அமைந்துள்ள ஓர் ஆலயமாகும். இவ்வாறு சிறப்பை பெற்றுத் தரும் ஓர் ஆலயத்தினை அமைப்பதென்றால் அது மிகவும் சுலபமான காரியமன்று, மேலும் ஆலயம் அமைத்து அதற்கும், விக்கிரகங்களுக்கும் கும்பாபிஷேகம் செய்வதென்பது மிகவும் கடினமான காரியமாகும். இவ்வாறான செயல்களை செய்வது சாதாரணமானவர்களால் எப்போதும் முடியாது. இறைவனிடத்தும் பிறரிடத்தும் அன்பாகவும் பண்பாகவும் பழகுபவர்களாலேயே இக்காரியங்களை நிறைவேற்ற முடியும்.

இவ்வாறாக இக் கைங்கரியத்தினை முன்நின்று 'முயற்சி திருவினை ஆக்கும்' என்ற முதுமொழிக் கேற்ப விடாமுயற்சியோடு ஆலய வளர்ச்சிக்கு தொடர்ந்து உதவிய பெருந்தகை மாமனிதன் திருவாளர், இலா. சிவநாதன்பிள்ளை அவர்களினதும் அவர்தம் பாரியாரினதும் அன்பும், நல்ல பண்பும், இறை பணிக்கு தம்மை அர்ப்பணித்ததே காரணமாகும்.

இவ்வாறாக ஆலய திருப்பணிக்கு தேவையான பணம், பொருள் போன்றவற்றை சேகரித்து இறைவனுக்கு சேவை செய்யும் நோக்கோடு அயராது உழைத்த தலைவர் அவர்களுக்கும், ஆலய வளர்ச்சிக்காக பொருளாகவும், பணமாகவும் கொடுத்து மீண்டும் கேட்டுக் கொடுத்துதவிய அடியார்களுக்கும், திரு. நடராசதேவர் ஐயா அவர்களுக்கும், திரு. சிவகுருநாதன் ஐயா அவர்களிற்கும் விநாயகப் பெருமான் மிகச் சிறந்த முத்திப்பேற்றைக் கொடுத்து அருளவேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகரை வேண்டுகிறேன்.

மேலும், இவ் ஆலயத்தின் வளர்ச்சிக்கு அன்றாடம் சேவை புரியும் ஆலய குருக்கள் ஐயா அவர்களுக்கும், இவ் ஆலயத்தினை புதுப் பொலிவுடன் விளங்கச் செய்து ஆலய கும்பாபிஷேகத்தினை குறிப்பிட்ட இந்த நாளில் செய்வதற்கு ஆலய புனருத்தாரண வேலைகளை மிக அழகாக வடிவமைத்து உதவிய கலைஞர் திரு. சந்திரன் ஆசாரி ஐயா அவர்களுக்கும் அவர்தம் சக உதவிக் கலைஞர்களுக்கும் இம் மகா கும்பாபிஷேக நன்நாளில் நன்றியை கூறி, எல்லோருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகரின் அருள் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

''சுபம்''

*''கடமையை செய் பயனை எதிர் பாராதே''*

*''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்''*

நான் என்பதற்கு இலக்காயிருப்பது எது? உடலா, தசையா, ரத்தமா, எலும்பா? மனம் புத்தி முதலிய அந்தக் காரணமா? நான் என்பது வெங்காயம் போன்றது. சருகுகளை ஒவ்வொன்றாக நீக்கிய பிறகு வெங்காயத்தில் எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை. கருவி கரணங்களை நீக்கிய பிறகு நான் என்பதற்கு இலக்காக ஒன்றுமில்லை.

காட்சிக் கெளியான்காண்
கண்டாலும் காணாக்காண்
மாட்சிமனம் வைத்தார்க்கு
மாணிக்கத் துள்ளொளி காண்

வாழ்வை இனிதாக்குவது அன்பு கஷ்டங்களை எல்லாம் மீளச்செய்வது அன்பு. குடும்ப வாழ்க்கையை மேம்படுத்துவது அன்பு. உலக வாழ்க்கையைச் சுவைக்கச் செய்வது அன்பு. அழகற்றதற்கு அழகூட்டுவது அன்பு. அன்பு மறைந்தவிடம் நரகம். மனமே நீ அன்பில் ஊறிவளர்க.

## சிந்தனைக்கு சாதனை இன்றிச் சாதனம் இல்லை

பக்தி இன்றி உள்ளத்திற் துறவு ஏற்படாது. மணிவாசகர் பாட்டுக்களை படித்துப் பார்த்தால் இது தெரியும். அவர் அறியாத வேதாந்த தத்துவம் இல்லை அவர் அழுது அழுது பாடியிருக்கிறார்.

பகவானை பெற்ற தாயாக தகப்பனாக அதைவிட நெருங்கிய உறவினனாக மாணிக்கவாசகரைப் போல் நாமும் உருகி அன்பு செலுத்த வேண்டும். செலுத்தினால் ஓரளவு அறிவு பெறுவோம். ஆசைகளை அகற்றும் சக்தி ஓரளவு பெறுவோம் பக்தி இன்றி வெறும் படிப்பினால் துறவு நிலை உண்டாகாது.

### சைவப் பெரியார்
# செல்லத்துரை சத்தியமூர்த்தி அவர்கள்
### வழங்கிய

## வாழ்த்துச் செய்தி

வேதாகமங்களின் கிரியை முறைகளை பூரணமாக நெறிதவறாமல் செய்யக்கூடிய வைபவங்கள், கும்பாபிஷேகம், மகோற்சவம், மகாயாகம் போன்றவை ஆகும். அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் இந்த சிறந்த ஆலயத்தில் இருந்து புத்தளம் நகர்வாழ் மக்கள் அனைவர்க்கும் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து ஸ்ரீ சித்தி விநாயகர், வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானையும், ஏனைய பரிவாரமூர்த்திகளையும் சிறந்த முறையில் ஸ்தாபனம் செய்து அஸ்டபந்தன கும்பாபிஷேக வைபவம் உலக ஷேமத்திற்காகவும், எல்லோருக்கும் வளமான வாழ்வு கிடைக்க வேண்டியும் நடைபெற இருக்கும் கும்பாபிஷேகம் இறையருளால் கைகூடியமை மனதில் பெரும் சந்தோஷத்தையளிக்கின்றது. இக்குடமுழுக்கு வைபவத்தில் அரும்பாடுபட்டு அயராது உழைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும், மற்றும் சமயத் தொண்டாற்றியோருக்கும், எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் இகபரசுக, சௌபாக்கிய வாழ்விற்கு வரமளிக்க வேண்டும் என்று எம்பெருமானின் கிருபையோடு ஆசிகள் பல வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

### பக்தி தான் தலைசிறந்தது

முக்திக்கு உதவும் சாதனங்களுள் பக்திதான் தலைசிறந்தது. தன்னுடைய உண்மை நிலையில் நாட்டமே பக்தியெனப்படும்.

எவரையும் குறைசொல்லாதே ஒரு பூச்சியையும் கூடகுற்றம் சொல்லாதே. சக்தி வளர வேண்டுமென்று நீ இறைவனைப் பிரார்த்திப்பது போலவே பிறரைக் குற்றம் சொல்லாமல் இருக்கவேண்டுமென்றும் பிரார்த்தனை பண்ணிக் கொள்வாயாக.

உங்கள் சாத்திரங்களை கங்கையில் எரித்துவிட்டு பாமர ஏழை மக்களுக்கு முதலில் உண்ண உணவும் உடுக்க உடையும் சம்பாதிப்பது எப்படியென்றும் கற்றுத் தாருங்கள். அதற்கு பிறகு நேரம் கிடைத்தபோது சாத்திரங்களை எடுத்து வைத்து கொண்டு அவர்களுக்கு படிந்து கொடு. அவர்களது உலக வாழ்க்கைக்கான தேவைகள் தீர்க்கப்பட்டாலொழிய நீங்கள் கூறும் ஆன்மீக கருத்துக்களை அவர்கள் காது கொடுத்து கூட கேட்கமாட்டார்கள்.

தேவையானதை வைத்துத் தேவையில்லாததை விட்டுவிடும் இயற்கையான அறிவு சகல ஜீவராசிகளிடத்திலும் இயல்பாக அமைந்திருக்கின்றது. மனிதனில் அது விவேகம் அல்லது பகுத்தறிவு என்ற சிறப்பான குணத்துடன் இருந்தும் பேராசையில் அது அந்நியப்படவில்லை.

# சிறுதெய்வ வழிபாட்டின் வரலாற்றுப் பின்னணி ஒரு நோக்கு

- மா. நாகராஜா,
அதிபர், இந்து தமிழ் ம. வி.
புத்தளம்.

மனதிகுல வரலாறு வர்க்க போராட்டங்களின் வரலாறாகவே அமைந்துள்ளது. சமுதாயத்தில் இரு வர்க்கங்கள் எப்போதும் பிளவுண்டு ஒன்றையொன்று எதிர்த்தும், சார்ந்தும் வரலாற்றை நகர்த்தி சென்றுள்ளன. ஆன்மீகம் சார்ந்த சமயங்களும் இந்த இரு பிரிவினர்களுக்கு உரிய முறையிலேயே வளர்ச்சியடைந்துள்ளன.

இந்து சமயமும் இந்த முரண்பாட்டிற்கு விதி விலக்கல்ல தேவர்களும், அரக்கர்களும் இந்த முரண்பாட்டின் இரு துருவங்கள். ஆரியர்களின் வருகையுடன் உருவாகிய ஆண் ஆதிக்க தெய்வங்கள் தேவர்களுக்குரிய கடவுளர்களாக மாற்றப்பட்டார்கள். இறைவனை வணங்குவதற்கான வழிபாட்டு முறைகள், சடங்குகள், விழாக்கள் எல்லாம் தேவர்களுக்கு மட்டுமாக உருவாக்கப்பட்டது. நாடோடிகளாக இருந்த ஆரியர்கள் இந்தியாவிற்கு வருகை தந்த பின்னர், அவர்களின் பல்வேறு சமூகக் குலங்களுக்கு தலைவர்களாக இருந்தவர்கள் பின்னாளில் தேவர்களாக உருவாகினார்கள். தேவர்குல தலைவனாக இந்திரன் விளங்கினான்.

சிந்து வெளியில் நாகரீகம் வளர்ச்சியடைந்திருந்த பொழுது சிவன் தான் சமுதாயத்தின் தலைவனாகவும், வழிபாட்டு தெய்வமாகவும் இருந்தான். ஆரியர்களின் வருகையினால், சிவன் புறக்கணிக்கப்பட்டு பிரம்மன் முதன்மையாக்கப்பட்டான். ஆரியர்களுக்கு முன்பு இப்பிரமன் சிவனுக்கு அடுத்த நிலையில் படைத்தலுக்குரியவனாக இருந்தான். வேதங்கள் எனப்படுவனவும் இக்காலத்தில் தோற்றம் பெறத் தொடங்கின. இந்த வேதங்கள் சிந்து வெளி நாகரீகத்தில் குறிப்படக்கூடிய அம்சங் களையும் உள்வாங்கி ஆரியர்களின் வரலாற்றையும் சிறப்பையும் வெளிப்படுத்தின. இதனால்தான் வேதங்களில் சிவனுக்குரிய பங்கும் இடமும் புறக்கணிக்கப்பட்டன.

அரக்கர்குல வரலாறு என்பது இந்தியாவில் சுதேசிகளாக இருந்து புறக்கணிக்கப்பட்டு அழிக்கப் பட்டவர்களின் வரலாறு ஆகும். சைவர்களின் முழு முதல் தெய்வம் சிவன் மட்டும்தான். பூதகணங்கள் சூழ்ந்த தலைவன் அவன்தான். பின்னாளில் இந்த பூதகணங்களுக்குரிய தலைவனாக கணபதி வருகிறான். திராவிடர்களின் அழகு, இளமை என்பவற்றின் வெளிப்பாட்டு கடவுளாக முருகன் தோன்றினான்.

ஆதிகால சமுதாயத்தில் ஆண், பெண் சமூகப்பிரிவில் பெண் தலைமை குடும்பம் என்ற நிறுவன அமைப்பிற்குள் கட்டுப்பட்ட போது சமுதாயத்தின் அங்கமான குடும்பம் அதன் பொறுப்பினை ஏற்ற பெண். சமுதாயத்தின் இயங்கும் ஆற்றலாக உருவெடுத்த பொழுது சிவனின் இயக்கமான சக்தியானது பெண்ணாக உருவெடுத்தாள். சிவன் சமுதாயத்தலைவன் என்ற நிலையிலிருந்து பிரபஞ்சம் முழுமைக்குமான தெய்வமாக உயர்ந்த பொழுது அந்த பிரபஞ்சத்தின் உட்கரு இயக்கமாக சக்தியானவளே இயக்கமானாள்.

தமிழர்களின் சமூகம் ஆண்-பெண் சமத்துவமாக இருந்தமையினை சிவ+சக்தி தத்துவம் சுட்டிக்காட்டி நிற்கின்றது. இந்த சக்தியானவள் அடக்குமுறை, பலாத்காரம், பெண் அடிமை போன்ற கொடூரமான வதைகள் பெண் சமூகத்தின் மீது கட்டவிழ்த்த போது சக்தியானவள் பாதிப்புற்ற சமூகத்தின் காவல் தெய்வமாக சிறு தெய்வமாக அவதாரம் எடுத்தாள்.

கிராமங்களின் எளிமையான வாழ்வின் பாதுகாப்பு தெய்வமாக அதிகளவில் பெண் தெய்வங்களே உள்ளன. மிகவும் சாதாரணமான வழிபாட்டு முறைகள், நேர்த்திகள், விரதங்கள் என்பன நேர்முகமாகவே சிறு தெய்வங்கள் மீது தொடர்புபடுத்தப்பட்டன. மந்திரங்கள், அர்ச்சனைகள் என்ற நிலையும் இதற்குள் பிராமணர் குலத்தின் மூலம் கடவுளுடன் தொடர்பு கொள்ளும் ஆதிக்க சக்திகளின் செயல்களுக்கு சாவுமணி அடிக்கப்பட்டது. இதனால்தான் சிறு தெய்வ வழிபாட்டுமுறை அநாகரீகமுறை எனவும் இழிசனர்முறை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

உழைத்து, உதிரம் சிந்தும் இந்த அடக்குமுறையான மக்கள் சக்தியானவளிடம் தங்களினால் காணிக்கையாக வழங்கக்கூடிய அனைத்தும் அவை சற்று முரட்டுத்தனமானதாக இருப்பினும்கூட ஆழ்ந்த பக்தி, அன்பின் வெளிப்படாகவே துலங்குகின்றன. குடும்பத்தில் செல்லமாக இருக்கக்கூடிய ஆடு, கோழி போன்றன இரத்தபலியாக வழங்கப்பட்டது. தங்களின் உடல்களின் மீது செதில் பாய்ச்சி காவடி எடுப்பது, தீ மிதிப்பு, மாவிளக்கு ஏற்றல், பொங்கல், கற்பூரச்சட்டி ஏந்துதல் போன்றன எல்லாமே மனவைராக்கியம்மிக்க மக்களின் ஆழ்ந்த பக்தியின் பிரதிபலிப்பாகும்.

பெண் தெய்வங்கள் எல்லாம் கல்லாக, மரமாக, புற்றாக, மண்ணாக எல்லாவகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வழிபாட்டு தெய்வமாக இருந்தன. சிந்தனா ரீதியான தத்துவ விளக்கம் இந்த சிறு தெய்வங்களுக்கு கிடையாது. மாறாக உணர்வு ரீதியில் உளக்கிளர்ச்சி மூலம் அனுபவ ரீதியிலான தரிசனமாக இத்தெய்வ வழிபாடு விளங்குகின்றது.

சக்தி வழிபாடுகள் தாய் வளிச்சமூகத்தின் பிரதிபலிப்பாக இருப்பதாலும், சைவசமயத்தின் செய்நெறி போக்கிற்கு அடிப்படையாகவும், தென்படுவதாலும் சிறு தெய்வ வழிபாடுகள், பல்வேறுமட்ட சமூகபிளவுகளிடையே ஒருமைப்பாட்டு தெய்வமாக அமைவதுடன் சக்தி வாய்ந்த வழிபாடாகவும் விளங்கமுடியும்.

தமிழர்களின் தொன்மையானது சமத்துவம் நிறைந்த சமுதாயத்தையும், தாய்தான் முதன்மை யானவளாக இருந்தமையும் கால நகர்வில் சமுதாய தலைமை சிவனுக்கு வழங்கப்பட்டதையும் வெளிப்படுத்துகின்றது. ''சக்தி இல்லையேல் சிவன் இல்லை'' என்பது சத்தியானவளின் முக்கியத்து வத்தையும், சிவன் இல்லையேல் சக்தி இல்லை என்பது, சிவனின் முழுமைக்குள் சக்தி அடங்கிவிட்டாள் என்பதையும் புலப்படுத்துகின்றது. ஆண் ஆதிக்கம் கொண்ட சமூக இருப்பில் மேல்குடிமக்களின் இறைவனாக சிவன் உருவெடுக்க சக்தியானவள் பல தெய்வங்களில் காவல் தெய்வமாக பரிணமித்து இறைவியானாள்.

இலௌகீக வாழ்வில் உழைத்து சுரண்டப்படும் மக்களின் துயர்களையும் தெய்வங்கள் இந்த சக்தியின் சிறு தேவதைகளாக காட்டப்படும் சிறு தெய்வங்கள்தான். இந்த மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்கான தலைமைதாங்கும் தாய்மை தெய்வமாகும்.

**பெண்மை**

குளத்திலுள்ள நீர். ஆலமரத்து நிழல். பரவக்கல் இட்டவீடு. அம்புபோல் கூர்மையான கண். கவர்ச்சி வாய்ந்த பெண்ணின் யௌவனம். இந்த ஐந்தும் குளிர்காலத்தில் குளிர்ச்சி தரும்.

உ
கணபதி துணை

# புத்தளம் மன்னார் வீதியிற் கோயில் கொண்டருளிய ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான்

# ஊஞ்சற் பதிகம்

- பண்டிதர் ச. சுப்பிரமணியம்
ஆவரங்கால்

## காப்பு

உயிரா வணஞ்செய் தொப்பித்தார் இடையூறுறாமற் சென்றுறவே
அயிரா வண்ணம் அணுகுதுணையாகி அழைக்கும் அம்மானே
அயிரா வணநின் அடிக்கணிய அணியூஞ்சற்பா அணிசிறக்க
உயிராய் உணர்வாம் அருளொளியும் உனதாள் உறவும் உதவுளத்தே.

## ஊஞ்சற் பதிகம்

1. திருமறைகால், சேரங்கம் விட்டமாகச்
சிவநூல்கள் வடம், பீடம் புராணம் சிரார்
மருமலரார் அணைவாய்மந் திரமதாக,
மனம்நிறைய மதியூஞ்சல் மகிழ்வாய் வைகி
வரமறையின் முதல்வனுமை மருங்கில் வாழ்த்த
மயிலவனும் தம்பியரும் வணங்கி ஏத்தப்
பெருகருளாம் மதம்பிலிற்றும் பிறைநேர் கோட்டுப்
பிள்ளையார் பிரியமுடன் ஆடீர் ஊஞ்சல்.

2. மதிகவிகை கொளங்கங்கை கவரி வீசக்,
காலவனே ஆலவட்டம் கனல்கா ளாஞ்சி,
விதிசுருதி கீதவிசை விஞ்சை வேந்தர்,
சதிபிழையா தரம்பையர்கள் பரதம் சார,
அதிகவினார் அரங்குறைவார் அங்கை கூப்ப,
அலர்மாரி அமரர்களும் பொழிந்தே ஆர்த்தார்
கதிதருநின் கழலணையும் கருணை காட்டிக்
கணநாத விக்கினேச ஆடீர் ஊஞ்சல்.

3. ஆதார மூலமெழுந் ததிர மேல்போய்
அதீதவா தாரத்தே அமுத ஆடல்
ஆதார மாய்வழங்கும் அமிர்த நாதா
அநாதியாய் அநந்தனுமாய் அறமே தானாம்
சீதார அரிஅயனும் தெளியான் சேயே
திக்கனைத்தும் தெளியவெளி ஒளியாம் தேசா
வேதா கமவிளக்கே விநோதா சித்தி
விக்கினேச நலம்விளைய ஆடீர் ஊஞ்சல்.

4. காமரங்கால் கார்கூரை விதான மாகக்
கடிமலரார் கொடிகள்தோ ரணங்க ளாகச்
சாமனரயோ டாலவட்டம் தருக்கள் தாங்கும்,
சார்பறவை பல்லியமும் தழையப் பண்ணும்
பூமரங்கள் மலர்மாரி பொழிந்து போற்றும்
பொற்பதியில் கற்பகக்கா போலும் கோயில்
தாமரங்கா மகிழ்ந்தமரும் தயாப ரேசா
சாந்தரே கணாதீச அடீர் ஊஞ்சல்.

5. கன்றுபிடி களிறுடன்சேர் கனிவாம் காட்சி
காட்டியருள் கணேசரெனும் கருணா மூர்த்தி
என்றுமடி தஞ்சமென எண்ணி ஏத்தும்
எந்தமிழர் இடுக்கண்தீர்த் தாட்கொள் எந்தாய்
மன்றுள் நடமாடிபால் வாய்ந்த மைந்தா
மால்சாபம் மாற்றுதிரு வரத ராஜா
வென்றடியார் குலம்விளங்க விருத்தி செய்யும்
விருப்புடைய விக்கினராஜ ஆடீர் ஊஞ்சல்.

6. கோடீசர் போற்குடிகள் அரிதாம் சூழல்
குஞ்சரரே குளிர்ந்துள்ளம் கோயில் கொண்டீர்
மாடீர மனமாந்தர் மாபுள் வந்தே
கூடார வாரங்கள் குறையா தோங்கும்
தேடீர நீர்த்திரையும் மணிபொன் சேர்க்கும்
தேசவளம் கானவளம் சேர்வாய் மல்கும்
காடேகா நலங்கிளரக் கிருபை தந்தே
கேசவனார் மருமகனே ஆடீர் ஊஞ்சல்.

7. காவலனாம் கண்ணபிரான் காப்பாம் கானும்
கண்ணுறங்கும் கனைகடலும் இருசார் காண
மேவலுறு மன்னார்புத் தளஞ்செல் வீதி
விரும்பியுறை அன்னைகலை விளங்கும் மாரி
ஆவலுற அணைந்துதிரு வானைக் காவில்
ஆளவரும் கயமுனியாம் கணபதீசா
நாவலனே நால்வாயா அருளை நல்கி
நாடுய்ய நயம்வளர ஆடீர் ஊஞ்சல்.

8. வரமுறலால் வலிசெய்தெவ் வுலகும் ஆண்ட
மறம்மிக்க கயாசுரனை மாய்க்க முன்னே
துருவுரு உருவாக்கத்துணிகோ டேவித்
தோற்றமற ஆருவெனச் சுமக்க ஊர்வாய்

திருமுறைகள் நம்பிதனக் குபதே சித்தாய்
சேரர் ஆரூரர்முன் ஔவை சேரத்
தருமுறை செய் தான்தோன்றித்தந்தி நம்பா
சட்குண விக்கினேசுரரே ஆடீர் ஊஞ்சல்.

9. கரியொடரி கலந்துறவு காண வந்த
கடும்புலிமான் கையிணைந்து கலந்து சேர்ந்த
எரிபகைமை இலாதெவரும் இணைந்தேத் துற்றார்
எங்கனவு நனவாக இணங்க வைப்பீர்
பரிவார மூர்த்திகளும் பாங்கே உற்றார்
பரிவொடெலாம் பாலிக்கும் பகவன் நீயே
பெரியவிழா குடமுழுக்கும் பேண நின்றாய்
பெரியவிநா யகப்பெருமாள் ஆடீர் ஊஞ்சல்.

10. சென்னிநதித் திரையாட மதிசேர்ந்தாட
செவிசேர் குண்டலமார்பில் தெரியல் யாட
அந்நியமில் சித்திபுத்தி அணைந்தே யாட
அரவமணி மாலையவர் மாலை ஆட
துன்னுமணங் குறுதொண்டர் சூழ்ந்தே ஆட
தொல்கணமும் சுரர்குழுவும் துதியோ டாட
கன்னிவிலெம் உளங்கனிய அருளு டாட
கற்பக விக்கினேசுரரே ஆடீர் ஊஞ்சல்.

## வாழிவிருத்தம்

வானுறை பொழிகவற்றா வளஞ்சுரந் தருள்க வையம்
ஊனுறை உயிர்கள் ஒன்றும் குறையிலா தொன்றி வாழ்க
கானுறு புத்த எஞ்சேர் கணேசரின் கருணை காக்க
தேனுறு சுவைசேர் வாழ்விற் தேசுடன் தேசம் வாழ்க.

## எச்சரிக்கை

1. ஓரக்கரித் துள்ளேஒளிரும் உருவே - எச்சரிக்கை
    ஒருங்கக் கரதி தொலிக்குளுறை கருவே - எச்சரிக்கை
சேரக் கொடை நீள் செங்கையில் திருவே - எச்சரிக்கை
    செய்யும் தொழிற் சீருள்ளுறை தருவாய் - எச்சரிக்கை

2. பாடுங்கவிப் பயனாய் மிளிர் பண்ணே - எச்சரிக்கை
    பணிசெய்பவர் படர்தீர்களை கண்ணே - எச்சரிக்கை
நேடும்மன நேயர்உளத் துறவா - எச்சரிக்கை
    நெறியாளரை நிலைபேறுசெய் அறவா - எச்சரிக்கை

3. தாயாம் உமை பாலாபரஞ் சோதி - எச்சரிக்கை
    மாயாமயக் கறமாற்றிடும் ஆதி - எச்சரிக்கை
மாவெம்பவம் அறமாற்றிடும் மருந்தே - எச்சரிக்கை
    வாயாவரு வாழ்விற்பெறு விருந்தே - எச்சரிக்கை

## பராக்கு

1. ஐங்கரநீ ஆறுமுகம் மெய்யே - பராக்கு
    ஐந்தொழிலும் ஆற்றியருள் செய்வாய் - பராக்கு
அஞ்சுகனி றாண்டடக்கும் வாகா - பராக்கு
    அஞ்சுமுகத் தபயஞ்செய்தி யாகா - பராக்கு

2. தீதொழிய நலந்திருத்தும் சித்தா - பராக்கு
    தேயமலம் வீடுதரும் முத்தா - பராக்கு
ஆபொழியும் ஐந்தமரும் அழகா - பராக்கு
    அத்திவிடுத் தாருவையூர் குழகா - பராக்கு

3. பத்தர்குழு பயின்றுமலி மறுகா - பராக்கு
    பாட்டுடனே ஆட்டொழியா துறுமே - பராக்கு
சித்தரொடு சீலருடன் செறிவார் - பராக்கு
    சீரியரல் பூரியர்முன் பிறிவார் - பராக்கு

## மங்களம்

1. அம்மையப்பர் தாமவர்க்கு மங்களம் - அவர்
    மைந்தர்மயில் வாகனர்க்கு மங்களம்
எம்மையும்காப் பேற்றவர்க்கு மங்களம் - என்றும்
    மும்மைபணி முயல்பவர்க்கு மங்களம்

2. கருதுலக் காரணர்க்கு மங்களம் - எம்மைப்
    பேணுபெரு வயிறருக்கு மங்களம்
சர்வபரி பூரணர்க்கு மங்களம் - சாந்தி
    தந்தருள் யாபரர்க்கு மங்களம்

3. புத்தளவிக்கி னேசுரர்க்கு மங்களம் - பத்தி
    பூணுமுல கெங்குமுற மங்களம்
எத்திசையும் எழுகசுப மங்களம் - சுமுகா
    ஏதிலருள் ஈகசுப மங்களம்

மங்களம் சுபமங்களம்.

# சித்தி விநாயகர் பதிகம்

- கே. பசுபதிப்பிள்ளை, ஜே.பி.
அதிபர்,
நாயக்கர்சேனை,
இந்து வித்தியாலயம்

முதல் மகனே முகவாசல் முன்மூலமே
இதழ் குரவு கமழும் நற்குஞ்சரமே
ஆதல் கற்றுணர் கலைபல உணர்த்தும்
கூனல் துதிக்கர புத்தள பிரஞ்ஞனே.

பொன்பரப்பி சரித யெல்லையிலே புகழ்பூத்திடும்
முன்பரப்பும் நீலாடை ஆழியாம் நிறைபூத்திடும்
கோண்டம்பரப்பு படர்கொடி யாட்டம் பக்தர்பூத்திடும்
உன்பதம்பரப்பி பூர்வ புத்தளம் நிதம்பூத்திடும்.

ஆதிக்கருவாய் பச்சோலை பந்தர் தனிலமர்ந்து
பதிமாந்தர் மனம்கோணா நேசமாய் நிறைத்து
விதியென அழுவோர் வினைச்சுமை தீர்த்து
சோதி திரம்வாழ சுதை தானளித்து.

விண்மண் நிகர்கண்ட நீண்ட முதல்வனாய்
கண்கருத்து குளிர்கண்ட அண்ட காட்சியாய்
பண்பரத நலம்கண்ட ஆணர் வித்தகனாய்
எண்ணுவோர் உளம்கண்டு ஆகாகுறை நீத்தாய்.

அளங்கள் புடைசூழ் ஆழிகள் ஆர்ப்பறிக்கும்
களகளம் செய்புல் விலங்கு இனங்கள்
நளம் மல்லிசேர் நிலநீர் புஷ்பங்கள்
வளம் கொழிக்கும் இத்தளம் நாளுமே.

வளரும் தானாகஉமிரி தில்லை கண்டல்
களங்கள் நிரைவிதம் விதப்பண்ணை இனங்கள்
தளமண் மணல்தரை செம்மைசேர் உவர்
விளைநில தானியக் களஞ்சியம் கொண்டோனே.

ஆழிகள் அணைக்கும் சேயளங்கள் நதிசங்கம
கழிமுகங்கள் வண்ண வண்ணபாடு மச்சங்கள்
கோழி வேந்தன் குலதமிழ் ஓம்ஒலிகள்
வாழிநீ கோடி சித்தர்கள் வணங்கிடவே.

புல்பூண்டு பாசியுடன் வீரம்செரி விருட்சங்கள்
நில்லா தெக்கனியும் தெங்கு தொங்குகள்
பல்லாண்டு முன்பாரத கதையோவிய சிற்பியே
சொல்லா நின்சொத் துடையே தூலமே.

நெய்தேன் விளைநில விருந்தோம்பு புலன்
மெய்ஞான ஒளிவினை நின்நில மோங்கும்
உய்ய பக்தர்கூட்டம் நாளுமலை மோதும்
தூய சதுர்த்தி சித்தமான விநாயகனே.

சித்தி விநாயகனே சீரும் சிறப்புறவே
முத்தி தரநல்கி முன்னே வீற்றிருப்பாய்
பத்தி தருமுக பூதகண நாயகனே
சக்தி மிகுசித்தி முத்திதரு மணவாளனே.

## அருள் மொழிகள்

1. பலவீனம் துயரத்தை கொடுக்கும்
2. தீய எண்ணம் உடலை வருத்தும் நோய்க்கிருமி.
3. மேலான சிந்தனைகளின் சாரத்தையே நாம் கடவுள் என்கிறோம்.
4. அன்பு எதையும் சிறுமைப் படுத்துவது இல்லை.
5. பிறந்தவை அனைத்திலும் சமயமே உயர்ந்த குழந்தை.
6. சமயம் என்பது இந்த உலகத்தை பற்றியது. அல்ல அது இதயத்தை தூய்மையாக்கிக் கொள்வதாகும். அதனால் கிடைக்கும் பயன் முக்கியமல்ல.
7. மனிதன் என்னும் நிலையில் நமக்குக் கடவுள் தேவை. கடவுள் என்னும் நிலையில் நமக்கு எதுவும் தேவையில்லை.
8. துறவியின் காவி உடை சுதந்திரத்தின் அடையாளம்.
9. ஆன்மீக உணர்வைக் கூறும் போதுதான் ஒருவரை நாம் தீர்க்க தரிசி என்கிறோம்.

உ

கணபதி துணை

## புத்தளம் மன்னார் வீதியில் கோயில் கொண்டருளிய ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் மீது பாடப்பட்ட பாமாலை

- திரு. சி. சிவமூர்த்தி,
பாலாவி.

# நன்மை எல்லாம் தரும் புத்தளப் பிள்ளையார்

தும்பிக்கை நாயகன் துணைஇருப்பான்
துதிப்பவர் மனதில் நிறைந்திருப்பான் !!
நம்பிக்கையுடனே நாம் தொழுதால்
நன்மை எல்லாம் அவன் அருள்வான் !! (தும்)

வேழ முகத்துடனே வீற்றிருந்து
வேண்டும் வரம் தந்து காத்திடுவான் !!
ஒருபிடி மஞ்சளின் உள்ளிருந்து
ஓங்கார தத்துவத்தை நமக்களிப்பான் !! (தும்)

அரசமரத்தடி ஆறுகுளம் கரையில்
அமர்ந்திருந்து அருள் கொடுப்பான் !!
ஆசி பெறவே பெண்கள் சுற்றிவந்தால்
அன்னையாகும் நிலை தருவான் !! (தும்)

பிள்ளையார் பிள்ளையார் என்றுசொல்லி
பிரியமுடனே வணங்கி வந்தால் !!
தொல்லைகள் நீங்கும் துயர் போகும்
தூண்டிவிட்ட விளக்காய் வாழ்வுவரும் !! (தும்)

புத்தளப் பதிதன்னில் வீற்றிருந்து
எத்தள மக்களையும் இவன்காப்பான் !!
அத்தளம் சென்று வணங்கிவந்தால்
கைத்தளம் தந்து நமைகாப்பான் !! (தும்)

சுபம்.

உ

# புகழ் வளர்க்கும் பிள்ளையார்

- சி. சிவமூர்த்தி,
பாலாவி.

புற்றுத்தளம் வீற்றிருக்கும்
புத்தளத்துப் பிள்ளையார்
பூரிப்புடன் கொலுவிருந்து
புகழ் வளர்க்கும் பிள்ளையார்
தப்புச் செய்தால் தலையில் குட்டி
தடுத்தாளும் பிள்ளையார்
தர்மம் செய்தால் நன்மை செய்யும்
தங்கமான பிள்ளையார். (புற்று)

ஆற்றோரம் அரசமரம்
அமர்ந்திருக்கும் பிள்ளையார்
அன்பருக்கு அடியவர்க்கு
அருள்சுரக்கும் பிள்ளையார்
சுழியொன்று போட்டுவிட்டால்
சுகமான பிள்ளையார்
சுற்றி சுற்றி வலம் வந்தால்
சுகம் தரும் பிள்ளையார். (புற்று)

அறுகம்புல் மாலை என்றால்
அதில் இருக்கும் பிள்ளையார்
அரைத்து வைத்த மஞ்சளிலும்
அருள் சுரக்கும் பிள்ளையார்
ஓம் என்ற பிரணவத்தின்
உட்பொருளாம் பிள்ளையார்
ஓங்கார வடிவெடுத்து
உலகை ஆளும் பிள்ளையார். (புற்று)

நம்பி வரும் பக்தர் தம்மை
நலம் காக்கும் பிள்ளையார்
அம்மை அப்பனை வந்தேவலம்
பழம் பெற்ற பிள்ளையார்
சொல்லும் செயலும் நிலைத்திடவே
துணைநிற்கும் பிள்ளையார்
அல்லும் பகலும் தொழுதிருந்தால்
அன்பு கொள்ளும் பிள்ளையார். (புற்று)

# பாரதி கண்ட விநாயகர்

- பேராசிரியர் சி. தில்லைநாதன்
தலைவர், தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மனிதவாழ்வில் பெற்றிருந்தளவு முக்கியத்துவத்தை இன்றும் எமது வாழ்விலே சமயம் பெறுகிறது என்றால், அதற்குக் காலத்துக்கேற்ற வகையிலே சமயத்தின் பண்பினையும் பயனையும் புலவர் பெருமக்கள் காட்டி வந்தமையும் ஒரு காரணமாகும்.

மக்களாட்சி மலர்ந்த வேளையிலே தோன்றித் தமிழ் கவிதை வரலாற்றிலே புதுயுகத்தைத் தோற்றுவித்த பாரதி - விடுதலை கூடிய மக்கள் யுகத்தை வாழ்த்தி வரவேற்ற பாரதி - இஷ்ட தெய்வங்களுக்குப் பாமாலை சூட்டும் முன்னையோர் பக்திமரபினையொட்டி அனேகமாக இந்துக்கள் வழிபடும் எல்லாத் தெய்வங்களையுமே பாடியிருக்கின்றான். ஆயினும், இவ்வுலகம் பொய்யென்னும் கருத்தினை வலியுறுத்தி ஆன்மீக ஈடேற்றத்தை மட்டும் வேண்டும் வகையில் அவனது பாடல்கள் அமையவில்லை.

வறுமையிலும் துன்பத்திலும் குழப்பத்திலும் வாடிய மக்கள், சோற்றுக்கும் துணிக்கும் உலகியல் வாழ்வு நலம் பெறவும் உதவுமொரு நம்பிக்கை ஒளியாக இறைவனை நோக்கிய காலகட்டத்திலே தோன்றிய பாரதி, பொதுமக்கட் சார்பாக எழுந்துநின்று சமூகநல உணர்வோடு இறைவனை வேண்டுகின்றான். தெய்வபக்தியினாலே,

''சித்தந் தெளியும் - இங்கு
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்''

என்றும்,

''பக்தி யுடையார் காரியத்திற்
பதறார், மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல்
மெல்லச் செய்து பயனடைவார்''

எனவும் நம்பிய பாரதி, விநாயகர், பராசக்தி, முருகன், கலைமகள், திருமால், திருமகள் ஆகிய தெய்வங்களை 'ஆறுதுணை' எனக் கொண்டான்.

விநாயகரைப் போற்றித் 'தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்ய' முனைந்து, 'விநாயகர் நான்மணி மாலை'யினைப் பாடினான் பாரதி. நான்கு மணிகளைத் தொடுப்பது போல, முறையே வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் ஆகிய நால்வகைப் பாவகைகள் மாறிமாறி வர, அந்தாதித் தொடையாகச் சிவப்பிரகாச சுவாமிகளின் 'நால்வர் நான்மணிமாலை' முதலிய பிரபந்தங்களைப் பின்பற்றி இந்த நான்மணி மாலையினை நாற்பது பாடல்களில் இயற்றியுள்ளான் பாரதி. யாப்பமைதியினால் ஒருமைபெற்ற இவ்வகைப் பிரபந்தங்கள், பல புலவர்களினாலே திரும்பத் திரும்ப ஆளப்பட்டுத் தேய்வுகண்டு நின்றனவெனினும், பாரதி கையிலே புதுப்பொலிவும் தெளிவும் செறிவும் அர்த்தமும் பெற்று நிற்பதை அவதானிக்கவியலும்.

பாரதியின் விநாயகர் நான் மணிமாலை,

''ஏழையர்க் கெல்லாம் இரங்கும் பிள்ளை
வாழும் பிள்ளை மணக்குளப் பிள்ளை.''

என்று புதுவை மணக்குளப் பிள்ளையார்மீது பாடப்பட்டதென்றாலும் பொதுப்பட விநாயகர் பெருமைகளையும் பாரதியின் அபிலாசைகளையும் காட்டுவதாகும். பரம்பொருளைக் கணபதியாகப் பரவும் காணபத்திய முறையிலே அமைந்துள்ளது இப் பிரபந்தம்.

''விநாயக தேவனாய் வேலுடைக் குமரனாய்
நாரா யணனாய் நதிச்சடை முடியனாய்ப்
பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி
அல்லா! யெஹோவா! எனத்தொழு தன்புறும்
தேவருந் தானாய்த் திருமகள் பாரதி
உமையெனுந் தேவியர் உகந்தவான் பொருளாய்
உலகெலாங் காக்கும் ஒருவன்.''
என்று பாராட்டுகிறான் பாரதி.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருட்களை வேண்டி, சலனமில்லா மனமும் இருளற்ற மதியும் செல்வமும் தன்னையாளுந் திறனும் பொருந்திய கரவு, வஞ்சனை, கவலை நீங்கிய நூறு வயதுடைய பெருவாழ்வினை வேண்டி விநாயகரைப் பாடுகின்றான் பாரதி. தன்னைக் கட்டுதல், விநாயகரைப் போற்றுதல் ஆகியவற்றுடன், பிறர்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல் ஆகியவற்றையும் தன் கடமையாகக் கொண்ட இந்நூற்றாண்டின் மக்கள் கவி பாரதி,

''நாட்டினைத் துயரின்றி நன்கமைத் திடுவதும்
உள்ளமெனு நாட்டை ஒருபிழை யின்றி
ஆள்வதும் பேரொளி ஞாயிறே யனைய
சுடர்தரு மதியொடு துயரின்றி வாழ்தலும்
நோக்கமாகக் கொண்டு நின்பதம் நோக்கினேன்.''
என்று தன் உள்நோக்கினை வெளியிடுகிறான். தன் சுய துயரினைப் போக்குவதும், மதியினைப் பெருக்கி உள்ளத்தைத் தூய்மையாக்கி ஆள்வதும் மட்டுமல்ல அவனது குறிக்கோள். நாட்டினைத் துயரின்றி நன்கமைக்கும் பரந்த நோக்கமும் விநாயகரை அவன் வேண்டக் காரணமாகும்.

''பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்
மண்மீ துள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புடன் இணங்கிவாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா!''
என்று பரந்த மனம் படைக்கப் பெற்ற பாரதி தான் பிரதிநிதித்துவப் படுத்திய மக்கள் சார்பான தனது வேண்டுகோளை, இதுவரை வந்த எந்தக் கவிஞனும் வெளியிடாத வகையிலே துணிவோடும் தெளிவோடும் நம்பிக்கையோடும் விநாயகர்முன் சமர்ப்பிக்கின்றான். அவனொத்த விசால மனதுடன் இறைவன் பணி செய்வதே இக்காலத்துக்கேற்றதாகும். எல்லோரும் இன்புற்றிருக்கும் நினைப்புடன், கவலையும் துயரும் அச்சமும் சூழ்ந்த கலியினை வென்று புதுயுகத்தினைக் காணத் துடித்தெழுந்த பாரதி, தனது விநாயகர் நான்மணிமாலையினைப் பின்வருமாறு முடிக்கின்றான்:

''கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதம்நான் கொண்டனன்; வெற்றி
தருஞ்சுடர் விநாயகன் தாளினை வாழியே!''

# நீதிநூல்கள் கூறும் கல்விச் சிந்தனைகள்

- பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
கொழும்புப் பல்கலைக்கழகம்.

இறைவனைப் பல்வேறு முறைகளில் - ஞானியாக, நண்பனாக, காதலனாக, வழிகாட்டியாக துதித்துப்பாடும் பக்திப்பாடல்களின் அடிநாதமாக ஒழுக்கவிழுமியங்கள் விளங்கினாலும் அவ்வொழுக்கங் களையும் நெறிசார்ந்த வாழ்க்கைக்கான விழுமியங்களையும் வலியுறுத்தும் நீதிநூல்கள் தமிழில் ஏராளம் உண்டு. சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து எழுந்த நீதிநூல்களில் அக்காலத்தில் கல்வி பற்றிச் சீரிய சிந்தனையாளர்கள் உருவாக்கியிருந்த பல சிந்தனைகள் விரவிக் காணப்படுகின்றன.

கல்வியின் பெருமையையும் கல்லாமையின் சிறுமையையும் கேள்விச் செல்வத்தின் பெருமையை அறிவுடைமையின் பயன்பாட்டையும் விளக்கும் 40 ஈரடி வெண்பாக்களைக் குறள் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. வள்ளுவர் கல்லாமையைப் பற்றிப்பாடும் குறட்பாக்கள் உண்மையில் கல்வியின் பயனை வலியுறுத்துவதாகவே உள்ளன.

கல்லாதவர்களும் மிகச் சிறந்தவர்கள் என்று பெயர் பெற இடமுண்டு, கற்றவர்கள் கூடியிருக்கின்ற அவையின் கண்ணே ஒரு வார்த்தையும் பேசாமல், கூறாமல் இருந்துவிட்டால் கல்லாதவர்களும் மிகச் சிறந்தவர்களாகிவிடுவர் என்கிறார் வள்ளுவர். அறியாமையால் பீடிக்கப்பட்ட ஒருவர் கற்றவர்கள் பேசுவதைக் கேட்டுப் பயன்பெறுவதை விட்டு விட்டுத் தமது அறியாமையைக் காட்ட முனையக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் குறட்பா (403) பின்வருமாறு:

*கல்லாதவரும் நனிநல்லர், கற்றார்முன்*
*சொல்லாதிருக்கப் பெறின்.*

கல்வியறிவு போதிய அளவு இல்லாதவர்கள் சில சந்தர்ப்பங்களில் தாமும் ஏராளம் விபரம் அறிந்தவர் போன்று பலவற்றைக் கூறமுயலுவர், ஆனால் இவ்வாறான நடிப்பு கற்றவர்களுடன் உரையாடும் போது அவர்களையே காட்டிக் கொடுத்துவிடும். எனவே கற்றறிவு குறைந்தவர்கள் கற்றவர் போல நடிக்க முயல்வதைத் தவிர்க்க என வலியுறுத்தும் குறட்பா (405) பின்வருமாறு:

*கல்லாத ஒருவன் தகைமை, தலைப்பெய்து*
*சொல்லாடச் சோர்வு பெறும்.*

அறிவு என்றால் என்ன என்பது பற்றி பல நூறு ஆண்டுகளாக அறிஞர்கள் வாதிட்டு வருகின்றனர். பாரம்பரிய மேலைநாட்டுச் சிந்தனையிலும் கீழைநாட்டில், குறிப்பாக சீனநாட்டுக் கொன்பியூசிய சிந்தனையில் எதனை, எவ்வாறு, எப்படிக் கூறவேண்டும் என்பதை உணர்த்துவதே அறிவு எனக் கொள்ளப்பட்டது. ஒரு விடயத்தை எவ்வாறு சொல்ல வேண்டும் என்பதையே அறிவு குறித்தது. ஜெர்மன் நாட்டறிஞர் டூர்க்ஹைம் (Durkhims) ஒருவன் தான் வாழும் சமூகத்தின் பண்புகள், விழுமியங்கள், கலாசாரம் என்பவற்றைக் கற்றுணர்ந்து, அச்சமூகத்தில் பயனுள்ள உறுப்பினனாய் வாழ உதவுவது கல்வி என்றார். இப்பின்னைய கருத்து இன்றளவும் 'கல்வியின் சமூகமயமாக்கப் பணி' என ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

இப்பின்புலத்தில் திருவள்ளுவர் கூறும் ஒரு வரையறையை நோக்குவோம். உலக மக்களின் போக்கு எப்படி உள்ளது என்பதை அறிதல் வேண்டும், உலகமானது தன்னுடைய பன்னெடுங்கால அனுபவ வாயிலாக சில வாழ்க்கை மரபுகளையும் விழுமியங்களையும் ஒழுக்க நெறிகளையும்

உருவாக்கியுள்ளது. அவை எப்போதுமே மனித வாழ்க்கையின் உறுதிப்பாட்டிற்கும் தொடர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கின. எனவே ஒருவன் உலக மக்களின் நடத்தைப் பாங்குகள் எவ்வாறு உள்ளன என்பதை கற்றறிந்து அவற்றுக்கேற்ப ஒழுகுதலே அறிவு எனப்படும் என்கிறார் வள்ளுவர். இக்கருத்தைச் செவ்வனே விளக்கும் குறட்பா (426) பின்வருமாறு:

*எவ்வது உறைவது உலகம், உலகத்தோடு*
*அவ்வது உறைவது அறிவு.*

மேலைநாட்டுச் சிந்தனையின்படி அறிவு என்பது எதனை, எவ்வாறு, எப்படிக் கூறுவது என்பதைக் (ability to know what to say and to say it well) கருதும் என முன்னர் கண்டோம். இதனையே 'எண் பொருளவாகச் செலச் சொல்லித் தான் பிறர்வாய் நுண் பொருள் காண்பது அறிவு' என வள்ளுவர் விளக்குகின்றார். அறிவை இவ்விடத்து அவர் இரண்டாகப் பாகுபடுத்துகின்றார்.

தான் சொல்லுகின்ற கருத்தை பிறர் எளிதில் புரிந்து கொள்ளுமாறு விளக்கமாகச் சொல்வது அறிவு என்பது முதலாவது கருத்து. அறிவு என்பது சிறந்த தொடர்பாடல் திறனைக் குறிக்கின்றது என்ற உட்பொருள் இதில் தெரிகின்றது.

வள்ளுவர் அறிவு பற்றி மேலதிகமாக மற்றொரு கருத்தையும் இக்குறளில் முன்வைக்கின்றார். தான் கூறுவதைத் தெளிவாகக் கூறுவது மட்டுமன்றி பிறர் கூறும் கருத்துக்களின் நுட்பத்தையும் கண்டு கொள்வது அறிவு என்ற கருத்தும் இக்குறளில் (424) எடுத்துரைக்கப்படுகின்றது. இவ்விரண்டாவது கருத்தை மேலும் சிறப்பாகவும் நுணுக்கமாகவும் இதற்குமுன்னைய குறளில் வள்ளுவர் பாடியுள்ளார். நாம் நாள்தோறும் பலருடைய உரைகளையும் விளக்கங்களையும் வியாக்கியானங்களையும் கேட்கிறோம். கேட்பவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளாது அவர்களின் கருத்துக்களில் உள்ள உண்மைப் பொருள் என்னவென்பதை ஓர்ந்து காண்பதே அறிவாகும் என்பது வள்ளுவர் கருத்து:

***எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்***
***அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.***

எனக் கூறும் வள்ளுவர் கேட்கப்படுகின்ற அனைத்து விடயங்களும் கருத்துக்களும் நுணுகி (critically), தர்க்கரீதியாக ஆராய்ந்த பின்னரே ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். இதற்கு உதவுதே அறிவு என அவர் வரையறை காணுகின்றார். அறிவு என்பது ஒருவன் ஏராளமான தகவல்களைத் தெரிந்து வைத்திருப்பதைக் குறிக்காது. அத்தகவல் பற்றிய விடய அறிவு மட்டும் அறிவாகாது. அண்மைக்கால அறிஞர் பலர் (உ+ம்: Bloom) அறிவைப் பற்றிய வேறுபல விளக்கங்களையும் தருகின்றன. அறிவு என்பது பகுப்பாய்வு (analysis), தகவல்களையும் கருத்துக்களையும் மதிப்பீடு செய்தல் (evaluation) கிரகித்தற் திறன், தொகுத்தற் திறன் (synthesis) என்பவற்றையும் கருதும் என விளக்குவர்.

ஒருவன் பாடசாலையில் முறையாகக் குறிப்பிட்ட ஆண்டுகள் கற்றுத் தேர்கின்றான். இத்தகைய முறையான கல்வி படியாதோர், அவ்வாய்ப்புக்கிட்டாதோரின் நிலைமை என்ன? அவர்கள் கற்பதற்கும் வழியுண்டு. இன்று பாடசாலைக்கு அப்பாற்பட்ட கல்வி ஏற்பாடுகள் முறைசாராக் கல்வி என்றும் நாளாந்த வாழ்க்கையில் பெறப்படும் அனுபவக் கல்வியை முறையில் கல்வி என்கின்றோம். பாடசாலைக்கு அப்பாற்பட்ட முறையில் கல்வியை எவ்வாறு பெறமுடியும் எனத் திருவள்ளுவர் சிந்தித்துப் பார்த்தார். நூல்களைப் படிக்கவில்லையாயினும் கற்றவர்களிடம் கேட்டறியும் திறன் ஒருவனிடம் இருக்க வேண்டியது அவசியமானது. அதற்குப் புதியனவற்றை அறியும் ஆர்வம், துருவி ஆராயும் உணர்வு என்பன அவசியம். இப்படிப்பட்டவன் கேள்விச் செல்வத்தைக் கொண்டவனாயின் - பிறரிடம் கேட்டறிவதைத் தனது கற்றல் முறையாகப் பின்பற்றுபனாயின் அவன் இத்திறனைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் அவனுடைய தளர்ச்சியான காலத்தில் அக்கேள்விச் செல்வம் ஊன்றுகோல் போலத் துணைபுரியும் என்பார் வள்ளுவர்.

*கற்றலனாயினும் கேட்க அஃது ஒருவற்கு*
*ஒற்கத்தின் ஊற்றாந்துணை. (குறள் -414)*

மேலும் மனிதனின் கற்றல் புலன்களுல் செவி முக்கியமானது. பண்டைக்காலச் செய்திகள், இலக்கியங்கள், வரலாறு என்பன நூல் வடிவிலன்றி செவிவழியாகவே பேணப்பட்டு வந்ததாகப் பல ஆய்வாளர்கள் கூறுவர். இவை வாய்மொழியாகப் பேணப்பட செவிப்புலனின் உதவி முக்கியமானது. இத்தகைய ஆற்றல் வாய்ந்த செவி கேள்வி அறிவினைக் கேட்டுக் கேட்டு அதனால் துளைக்கப்பட வேண்டியது. அவ்வாறு துளைக்கப்படாத செவி, ஓசைகளைக் கேட்கும் திறனைப் பெற்றிருந்தாலும் அச்செவி செவிட்டுச் செவியே என்பார் வள்ளுவர்.

*கேட்பினுங் கேளாத்தகையவே கேள்வியால்*
*தோட்கப்படாத செவி. (குறள் -418)*

மற்றொரு அறநூலாக நாலடியாரிலும் பழந்தமிழர் கல்விச் சிந்தனைகளின் பல அம்சங்களைக் காணமுடிகின்றது.

உலகிலேயே கல்வியைத் தவிர வேறொரு மருந்து எதுவுமில்லை. புலன்களில் ஏற்படக் கூடிய மயக்கத்தைத் தவிர்க்கச் சரியான மருந்து கல்வியே! கல்வியானது தற்போதைய வாழ்நாளிலேயே (இம்மை) பலனைத் தரவல்லது. கல்வியை மற்றவர் பெறுவதால் அது ஒன்றும் குறைந்துவிடப் போவதுமில்லை. ஒருவனுடைய வாழ்நாளில் அவன் பெற்ற கல்வி அழிந்து விடுவதில்லை என்கிறது நாலடியார் (132).

*இம்மை பயக்குமால், ஈயக் குறைவின்றால்*
*தம்மை விளக்குமால் தாம் உணராக் கேடின்றால்*
*எம்மை உலகத்தும் யாம் காணோம் கல்விபோல்*
*மம்மர் அறுக்கும் மருந்து.*

அறம்பாடும் ஔவையாரும் தமது ஆத்திசூடியில் இளமையில் கல், எண்ணெழுத்து இகழேல், பேதமையகற்று, நூல் பல கல், ஓதுவதொழியேல் என கல்வியின் பயனை சமூகத்திற்குத் தொடர்ந்து வலியுறுத்தார்.

இவ்வாறு தமிழிலக்கியங்களினூடாகப் பழங்காலத் தமிழர்களின் கல்விமுறை அரிய சிந்தனைகளை மட்டுமன்றி பழங்காலக் கல்வி ஏற்பாடுகள் பற்றியும் அறிய முடிகின்றது. இத்துறைகளில் மேலும் ஆய்வுகள் தேவை. அவை கல்வி பற்றிய தமிழரின் சுதேச சிந்தனை எவ்வாறு நவீன வாழ்க்கை முறைக்குப் பொருந்துவன என்பதை எடுத்துக் காட்டுவதாய் அமைதல் வேண்டும்.

**சிந்தனை செய்**

மதிகெட்டவனே! பொருள் சேர்ப்பதில் ஆசையைவிட்டடொழி. வீணான ஆசைகளின்றி விலகிய நல்ல எண்ணங்களை மனதில் சிந்தனைசெய். உன்னுடைய நிலைக்கேற்ற கருமங்களைச் செய்வதால் கிடைக்கக்கூடிய பொருளைக் கொண்டு மனதைச் சந்தோஷப்படுத்திக் கொள்.

# வரத பண்டிதரின் இலக்கிய சமய நூல்கள்

- கலாநிதி துரை. மனோகரன்
முதுநிலை விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு கி.பி. 14ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ச்சியான முறையில் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. யாழ்ப்பாண மன்னர் காலத்தில், அவர்களது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தில் இந்துமதமே முக்கிய மதமாக விளங்கியது. இதனால் இயல்பாகவே இந்துமதச் சார்பு கொண்ட இலக்கியங்கள் தோன்றக்கூடிய வாய்ப்புகள் இருந்தன. ஆனால், யாழ்ப்பாண மன்னரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அரசியல் ஆதிக்கம் பெற்ற போர்த்துக்கீசரின் காலத்தில் புதிய மதமான கத்தோலிக்கம் பரவத் தொடங்கியது. அவர்கள் காலத்தில் இந்துமதம் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியது. அவர்களைத் தொடர்ந்து அரசியல் ஆதிக்கம் பெற்ற ஒல்லாந்தர், புரொட்டஸ்தாந்தரைத் தவிர்ந்த பிற சமயத்தவர் பகிரங்கமாகத் தமது சமய வழிபாடுகளை நிகழ்த்தக்கூடாது என உத்தரவு பிறப்பித்திருந்தனர். புரொட்டஸ்தாந்து சார்பான மதமாற்ற முயற்சிகளும் அதிக அளவில் இடம்பெற்றன. ஆயினும், ஒல்லாந்தர் காலத்தில் இந்துசமய இலக்கியங்களின் தோற்றத்துக்குத் தடையிருக்கவில்லை. போர்த்துக்கீசரால் இடிக்கப்பட்ட சில இந்துக் கோயிலகள் ஒல்லாந்தர் காலத்தில் திரும்பக் கட்டப்படக்கூடிய வாய்ப்பும், வேறு பல இந்துக்கோயில்கள் புதிதாகத் தோன்றக்கூடிய நிலையும் அக்காலத்தில் இருந்தன. அதனால், அக்காலகட்டத்தில் இந்துமதச் சார்பு கொண்ட நூல்களும் இலக்கியங்களும் தோன்றும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஒல்லாந்தர் காலத்தில் தோன்றிய இந்துமதச் சார்பான நூல்கள் திட்டமிட்ட பிரசார நோக்கை அடிப்படையாகக் கொண்டு விளங்குவதைக் காணலாம். அந்நியர் ஆட்சிக்காலத்தில் தமது சமய நடவடிக்கைகள் தடுக்கப்பட்டபோது, இந்துமதத்தவர் மத்தியில் வீறுகொண்டெழுந்த சமயப் பேரார்வம், அக்காலப் புலவர்கள் சமயச்சார்பான நூல்களை எழுதத் தூண்டியது எனலாம். போர்த்துக்கீசர் ஆட்சியில் இந்துக்கோயில்கள் அழிக்கப்பட்ட நிலை, இந்துக்களின் மனங்களை மிகவும் பாதித்தது. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் மதவழிபாட்டுச் சுதந்திரம் பெரிதாக இல்லாதபோதிலும், போர்த்துக்கீசர் ஆட்சியைவிட ஓரளவு சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்பு ஏற்பட்டது. இந்நிலை, பெரும்பாலான இந்துசமய நூல்களும், இந்துமதம் சார்ந்த இலக்கியங்களும் தோன்றுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்தது. நீண்ட காலமாக வளர்ந்துவந்திருந்த இந்துசமயத்துக்குப் போட்டியாகப் புதிய மதங்களான கத்தோலிக்கமும், புரொட்டஸ்தாந்தமும் வேரூன்றத்தொடங்கிய சூழ்நிலையில், தமது தலங்களின் சிறப்புக்களையும், தமது சமய உண்மைகளையும், தத்துவங்களையும், வழிபாட்டு அம்சங்களையும், தமது பக்தியுணர்வையும் புலப்படுத்த வேண்டிய தேவை இந்துக்களுக்கு இயல்பாக ஏற்பட்டது. இதனையே சிறப்பாக ஒல்லாந்தர் கால இலக்கியவாதிகளின் நூல்களிற் காணமுடிகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் கணபதி ஐயர், நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், இணுவைச் சின்னத்தம்பிப் புலவர், வரதபண்டிதர், மாதகல் மயில்வாகனப் புலவர், வீரக்கோன் முதலியார், காரைதீவு மே. சுப்பையர், சுதுமலை விநாயகர், கூழங்கைத் தம்பிரான் முதலியோர் பல்வேறு இந்துசமயச் சார்பான இலக்கியங்களைப் படைத்தனர். இவர்கள் பெரும்பாலும் தல சம்பந்தமான நூல்களை இயற்றினர். கணபதி ஐயர் வட்டுநகர் பத்திரகாளியம்மை பதிகம், வட்டுநகர் பத்திரகாளியம்மை ஊஞ்சல் ஆகியவற்றைப் படைத்தார். நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் மறைசையந்தாதி, கலவளையந்தாதி, பறாளை விநாயகர் பள்ளு ஆகிய தலச் சிறப்புக் கூறும் நூல்களை இயற்றினார். இணுவைச் சின்னத்தம்பிப் புலவர் இணுவில் சிவகாமியம்மை மீது பதிகம், சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்,

சிவகாமியம்மை திருவூஞ்சல், சிறை நீக்கிய பதிகம் முதலியவற்றோடு, சிவகாமியம்மை மீது சில தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். வரதபண்டிதர் கண்ணியவளை குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது, கணேசவிற்கோட்ட விநாயகர் ஊஞ்சல் முதலியவற்றைப் படைத்தார். மாதகல் மயில்வாகனப் புலவர் புலியூர் யமக அந்தாதியையும், வீரக்கோன் முதலியார் வெருகல் சித்திரவேலாயுதர் காதல் என்ற நூலையும் இயற்றினர். காரைதீவு மே. சுப்பையர் நல்லை நாயக நான்மணிமாலையையும், சுதுமலை விநாயகர் கதிரைமலைக் குறவஞ்சியையும், கூழங்கைத் தம்பிரான் நல்லைக் கலிவெண்பாவையும், சித்திவிநாயகர் திருவிரட்டை மணிமாலையையும் எழுதினார். இவற்றுள் மறைசையந்தாதி, புலியூர் யமகவந்தாதி என்பன தமிழ்நாட்டுத் தலங்களைப் போற்றுபவையாக விளங்குகின்றன. வரதபண்டிதர் விரத மகிமை பற்றிப் பாடுவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். என்பதை, அவர் இயற்றிய பிள்ளையார் கதை, சிவராத்தரி புராணம், ஏகதாசி புராணம் ஆகியவை உணர்த்துகின்றன.

இவர்களுள் வரதபண்டிதர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகப் பொதுவாகக் கருதப்படுகின்றார். யாழ்ப்பாணத்தில் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், வரதகவிராயர், வரதராச கவிராசர், வரதராச பண்டிதர் என்னும் பெயர்களாலும் குறிப்பிடப்படுகின்றார். பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் இவர் பற்றிக் குறிப்பிடும்போது, ''இவ்வரத பண்டிதர் அச்சுவேலியில் விவாகம் செய்து அங்கே இருந்தபோதே பிள்ளையார் கதையைப் பாடினார் என்றும் இவர் இருந்து இறந்த வளவு 'புலவர் வளவு' என்று இந்த நாள் வரைக்கும் அழைக்கப்பட்டு வருகிறது என்றும் அப்பகுதியில் ஒருவர் சொல்லக் கேட்டோம்'' என்று கூறியுள்ளார். அந்தணர் பரம்பரையைச் சேர்ந்த இவரின் குடும்பத்தவர்கள் பரம்பரை பரம்பரையாக வைத்தியத்துறையில் ஈடுபட்டவர்கள். அதனாலேயே வரதபண்டிதரினால் அமுதாகரம் என்னும் வைத்திய நூலையும் இயற்றமுடிந்தது எனலாம். இயல், இசை, நாடகத்துறைகளில் தேர்ச்சி பெற்ற வரதபண்டிதர், சோதிடம், வைத்தியம், வாகடம் என்பன வற்றையும் கற்றுணர்ந்துள்ளார். ஒல்லாந்தர் காலத்துப் பிரபல தமிழ்ப் புலமையாளரான கூழங்கைத் தம்பிரானின் மாணவரான இவர், இலக்கியம், சமயம், வைத்தியம் தொடர்பான நூல்களை இயற்றியுள்ளார்.

வரதபண்டிதரின் குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது, காங்கேசன்துறையைச் சேர்ந்த கண்ணிய வளையிற் கோயில் கொண்டுள்ள குருநாதசுவாமியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூலாக விளங்குகிறது. இந்நூலில் தலைவி மலர், அன்னம், குயில், வண்டு, மேகம், தென்றல், பூவை ஆகியவற்றைத் தான் தூதுவிட விரும்பவில்லையெனத் தெரிவித்து, கிளியைப் பாராட்டி அதுவே தனக்காகத் தலைவனிடம் தூது போகவேண்டுமென வேண்டிக்கொள்கிறாள். கிளியிடம் அவள் தூதுரைக்கும்போது, தூது சென்ற பிறரைப் பற்றியும் தெரிவிப்பதைக் காணலாம். சுந்தரருக்காக சிவபெருமான் பரவையிடம் தூது சென்றமை, பாண்டவருக்காகக் கண்ணன் துரியோதனனிடத்தில் தூது சென்றமை, இராமனுக்காக அனுமான் இராவணனிடத்தில் தூது சென்றமை, இந்திரனுக்காக நளன் தமயந்தியிடம் தூது சென்றமை பற்றித் தெரிவிக்கின்றாள். குருநாதசுவாமி கோயில் கொண்டிருக்கும் கண்ணியவளைக்கு அண்மையில் உள்ள ஊர்களின் பெயர்களும் நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளன. தெல்லிப்பளை, மாவிட்டபுரம், பளை, வீமன்காமம், காங்கேசன்துறை, கட்டுவன், மயிலிட்டி, வசாவிளான், பலாலி, வறுத்தலைவிளான், தையிட்டி, கோயிற்கடவை, ஊர்காவில், கரண்டாக்குளம், பிடாகத்தனை, கன்னார்க்குளம், முலலை, மாம்பிராய் ஆகிய ஊர்களில் வாழ்வோருக்குப் பொருளும், உணவும் உதவி, நோய் தீர்த்து, கேட்ட வரம் நல்கும் கிருபாசமுத்திரமாகக் கோயிலில் வீற்றிருக்கும் தெய்வமான குருநாதசுவாமி விளங்குகிறார் என்பது நூலில் எடுத்துக்காட்டப்படுகின்றது.

சிலப்பதிகாரத்துக் கதையமைப்பு இந்நூலில் மாற்றம் பெற்று, இத்தூதுப் பிரபந்தத்துடன் தொடர்பு படுத்திக் கூறப்பட்டுள்ளது. குருநாதசுவாமியின் பவனிச் சிறப்பும், அவன்மீது தனக்கேற்பட்ட காதலும், தூதுரைக்கும் முறையும், தூதுரைக்கப்படும் வேளையும் தலைவியினால் கிளியிடம் கூறப்பட்டு, அவளிடமிருந்து மாலை வாங்கிவருமாறும் தெரிவிக்கப்படுகிறது. இந்நூலிலிருந்து ஒரு பகுதி பின்வருமாறு:

*''முன்னதிலே நின்று முதல்வன் குருநாதன்*
*சந்நிதி வாச றனிலணுகி - யன்னவர்தான்*

*மஞ்சன மாடி மணிப்பொற் கலன்பூட்டி*
*யஞ்சுவிதப் போசனங்க ளார்ந்தருளிக் - கஞ்சனநேர்*

*நோக்கிக் களிகூர்ந்து நுண்ணிடையா ராட்கொண்டு*
*வாக்கின் மனத்தின் மகிழ்ச்சியுண்டாய் - நீக்கமின்றி*

*நாற்றிசையி லுள்ள நரருக் கருள்புரிந்து*
*வீற்றிருக்குஞ் சந்தோஷ வேளைகண்டு - போற்றிசெய்து*

*நீர்வாழி யீங்குன் றிருப்பதையும் வாழியுன்றன்*
*பேர்வாழி யென்று பெரிதேத்திச் - சீர்வாழு*

*நின்பவனி கண்டொருபெ ண்ணினை நினைந்துநெஞ்சி*
*லன்பவன லிட்டமெழு காயினா - ளின்பமலர்*

*மஞ்சரிகள் சூடாள் வரிவிழிக்கு மைதீட்டாள்*
*விஞ்சுமணிப் பொற்பூண் விதம்பூணாள் - வஞ்சியரோ*

*பம்மனைபந் தாடா ளன்ன மிவைதொடாள்*
*தம்மனைமார் தங்களொடு தார்கட்டாள் - செம்மனையிற்*

*கண்டுயிலா ளென்றெனது காதலெல்லாங் காதிலுற*
*விண்டுவிண்டு நன்றா விரித்தெடுத்துப் - பண்டிங்*

*இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்*
*குறுதி பயப்பதார் தூதென் - றறிவிற்*

*றிருவள் ளுவருரைத்த செய்யுட் - பயனைப்*
*பெருககினைந் தச்சமறப் பேசி - முழுகுமலர்ச்*

*சோலைப் பசுங்கிளியே சொல்லுங் குருநாதர்*
*மாலைதனை நீவாங்கி வா.''*

வரதபண்டிதரின் இலக்கிய ஆளுமையைக் குருநாதசுவாமி கிள்ளைவிடுதூதில் தரிசிக்கமுடிகிறது.

வரதபண்டிதரின் பிள்ளையார் கதை, சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம் ஆகியவை விரதங்களின் மகிமையைப் பேசுகின்றன. பிள்ளையார் கதை காப்பு, கதை, நூற்பயன் ஆகிய அம்சங்களைக் கொண்டு பிள்ளையாரின் (விநாயகரின்) விரத மகிமையைக் கூறுகின்றது. இந்நூலின் ஆரம்பத்தில் பிள்ளையாரின் திருவவதாரம் எடுத்துக்கூறப்படுகின்றது. பிள்ளையார் விரதம் அனுட்டிப்பதால் ஏற்படும் நன்மைகள், அது அனுட்டிக்கப்படும் முறைபற்றிய விடயங்கள் நூலில் விரிவாகக் கூறப்படுகின்றன. பிள்ளையாரை வழிபட்டோர் பெற்ற பயன்கள் கண்ணன் வாயிலாகச் சொல்லப்படுகின்றன. இந்நூலின் இறுதியிற் கூறப்படும் இலக்கணசுந்தரி என்பவளின் கதை, பொதுமக்களை மிகவும் கவர்ந்த பகுதியாக விளங்குகிறது. பிள்ளையார் கதையின் முதற் காப்புச் செய்யுள் பின்வருமாறு அமைந்துள்ளது.

*''கரும்பு மிளநீரும் காரெள்ளுந் தேனும்*
*விரும்பு மவல்பலவு மேன்மே - லருந்திக்*
*குணமுடைய ராயிருந்து குற்றங்க ளீர்க்குங்*
*கணபதியே யிக்கதைக்குக் காப்பு.''*

இச்செய்யுள் எவரையும் கவரும் வண்ணம் அமைந்துள்ளது.

வரதபண்டிதரின் நூல்களில் அளவாற் பெரியது சிவராத்திரி புராணமாகும். எழுநூற்றுப் பதினான்கு செய்யுட்களைக் கொண்ட இந்நூலுக்கு நூற்சிறப்புப் பாயிரங்களை மாதகல் மயில்வாகனப் புலவர், நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் ஆகியோர் பாடியுள்ளனர். சிவராத்திரியின் மகிமையைச் சிறப்பாக உணர்த்தும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. சிதம்பரத்தைச் சார்ந்த அறிஞர்களின் வேண்டுகோளுக்கு ஏற்பத் தாம் இந்நூலைப் பாடியதாக வரதபண்டிதர் தற்சிறப்புப் பாயிரத்திற் கூறுகின்றார். சிவராத்திரியுற்பவச் சருக்கம் முதல் சாலிகோத்திரச் சருக்கம் வரையிலான ஒன்பது சருக்கங்களை இந்நூல் கொண்டுள்ளது. நைமிசாரணியத்தில் வாழும் முனிவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கச் சூதமுனிவர் சிவராத்திரி விரதத்தின் தோற்றம், அதை நோற்கும் முறை, இவ்விரதத்தாற் பயன்பெற்றவர்களின் கதைகள் ஆகியவை நூலில் விபரிக்கப்படுகின்றன. வரதபண்டிதரின் புலமைத்திறத்தைப் பின்வரும் பாடல் இனங்காட்டுகின்றது.

*''கயமலர் துவைத்துக் கரைதவழ் பணிவங்*
*கான்றிடத் தோன்றுநித் திலத்தை*
*முயன்மதிப் பிள்ளை யெனப்பகற் காவி*
*முகைமுறுக் குடைந்துதே னொழுக்கும்*
*வயன்மருங் கெழுந்த கரும்பினைக் கவரி*
*முறித்திடத் தெறித்தவெண் மணிமுத்*
*தயன்முதிர்ந் திடுசூற் றவளைமேற் படநொந்*
*தாங்கது பொறுத்திடா தரற்றும்.''*

வரதபண்டிதரின் அழகியல் உணர்வினுக்கு இப்பாடல் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

திருமாலுக்குரிய விரதமாகிய ஏகாதசி பற்றிக் கூறும் புராணமாக ஏகாதசி விரதத்தைக் கணிக்கும் முறைகளும், அவ்விரதத்தின் பெருமையும், அவ்விரதத்தை நோற்கும் மரபும் கூறப்படுகின்றன. ஏகாதசி புராணம் காலநிர்ணயச் சருக்கம், உருக்குமாங்கதச் சருக்கம், வீமேகாதசிச் சருக்கம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. இந்நூலிலும் வரதபண்டிதரின் சமய அறிவையும், கற்பனைச் சிறப்பையும் காட்டத்தக்க பல செய்யுள்கள் உள்ளன.

ஒல்லாந்தர் காலத்திற் சிறந்த புலமையும், பேரறிவும் பெற்றுத் திகழ்ந்தவர்களுள் ஒருவராகச் சுன்னாகம் அ. வரதபண்டிதர் விளங்கினார் என்பதை, அவர் ஆக்கிய நூல்கள் உணர்த்துகின்றன. ஒல்லாந்தர் காலத்து இலக்கியப் போக்கினையும், சமயநிலையினையும் அறிந்துகொள்வதற்கு அவரது நூல்கள் பெரிதும் பயன்படுகின்றன.

### நோயும் அகங்காரமும்

தாமரையிலே மேலுள்ள தண்ணீர் மிகவும் சஞ்சலமானது. அதே மாதிரிதான் (உடலில்) உயிரும் அதிசயக்கும்படி சஞ்சலமானது. உலகனைத்தும் நோயாலும் அகங்காரத்தாலும் பீடிக்கப்பட்டுத் துன்பப்படுவதால் கொல்லப்படுகிறதென்பதை அறிவாயாக.

# கல்வியின் இறுதி நோக்கம் நல் ஒழுக்கமுள்ள ஒரு சமூகத்தை கட்டி எழுப்புவதாகும்

- அல்ஹாஜ். எம். எச். எம். மஹ்ரூப் மரைக்கார்
மேலதிக கல்விப் பணிப்பாளர்,
(வடமேல் மாகாணம்)

கல்வி என்பது தனிமனிதனது வளர்ச்சியுடன் மாத்திரம் தொடர்புடையது என்ற நிலைமாறி அது சமூகத்துடன், சமூக வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஒரு செயல்முறை என்ற கருத்து இன்று எல்லோராலும் உணரப்பட்டுள்ளது.

தனிமனிதனுக்கும் சமூகத்திற்கிடையேயும், சமூகத்துக்கும் தனிமனிதனுக்குமிடையேயும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்று உலகில் நல் ஒழுக்கமும் ஒத்துழைப்பு மனப்பான்மையும் போதிய அளவு பெருகவில்லை. சகிப்புத் தன்மை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல் போன்ற விழுமியங்கள் குறைந்து வருகின்றன. தனக்காக மட்டும் வாழும் பண்பை மனிதன் வளர்த்துச் செல்கிறான். சமூகத்தைபற்றிய தனிமனிதனது அக்கறை குறைந்து வருகிறது.

உலகில் எல்லாப் பகுதிகளிலும் காணப்படும் அமைதியின்மைக்கு முக்கியமான காரணம் சமயப் பற்றின்மையேயாகும். நம் நாட்டிலும்கூட குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் சமயப்பற்று குறைந்து பிளவுபட்டு, பிரிவினைவாதத்தை ஏற்படுத்தி சமூகத்தில் பதற்றநிலையை தோற்றுவித்துள்ளது. மத அனுஸ்டானங்களில் பல்வேறு அடிப்படைவாதக் கருத்துக்கள் புகுத்தப்பட்டு அமைதி, சமாதானம் என்பவற்றிற்குப் பதிலாக போராட்டம், மதவெறி என்பன தலை தூக்கியுள்ளன. சமய பாடம் பாடசாலைக் கல்வியினூடாக சரியான அறக்கருத்துக்களை மாணவர்கள் மனதிலே விதைத்து அதன் மூலம் புதியதொரு சமுதாயத்தை, சமூக அமைதியை, சமாதானத்தை ஏற்படுத்துவது கல்வி அமைச்சின் பாரிய பொறுப்பாகிவிட்டது. சமாதானக் கல்வி என்ற புதிய பரிணாமம் கலைத்திட்டத்தில் தற்பொழுது வளர்ச்சி பெற்றுள்ளதுடன் புதிய கல்வி புனரமைப்பின் ஒன்பது தேசிய குறிக்கோள்களிலும் ஐந்து அடிப்படைதகைமைகளிலும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கற்றலுக்கான நான்கு பெருந்தூண்களான அறிவுக்காக கற்றல், செய்திறனுக்காக கற்றல், வாழ்வதற்காகக் கற்றல், ஒன்றுபட்டு சமாதானமாக வாழக்கற்றல் எனபவற்றிலும் இது உள்ளடக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

''மனிதனின் உளம், உடல், ஆன்மா ஆகியவற்றின் இயற்கைப் பேறுகளை வெளிக் கொணர்ந்து விளக்கம் பெறச்செய்வதே கல்வியின் நோக்கம்'' என்று மகாத்மாகாந்தி அவர்கள் விளக்கியுள்ளார்கள். இப்பணியை ஓரளவு சமயக் கல்வி எல்லாக்காலத்திலும், எல்லா நாடுகளிலும் எல்லா சமூக அமைப்புக்களிலும் சிறப்பாக செய்துவந்துள்ளதை நாம் மறுக்கமுடியாது. உலகில் எல்லா நாடுகளிலும் மிகத்தொன்மை வாய்ந்த கல்விமுறை சமயக்கல்வி முறையே என்பதையும் இங்கு குறிப்பிடுவது சாலப்பொருத்தமாகும்.

## கல்வியின் நோக்கங்கள்

கல்வியின் முழுமையான நோக்கம் நல்ல பிரசைகளை உருவாக்குவதாகும். கல்வியின் ஊடாக மாணவர்கள் பல்வேறு அனுபவங்களைப் பெறுகின்றனர். இவ்வாறு பெற்ற அனுபவங்களே அவர்களது நடத்தையை மாற்றியமைப்பதுடன் சிறந்த பொருத்தப்பாட்டினைப் பெறவும் உதவுகிறது. கல்வியின் இறுதியான நோக்கை அடைவதற்கு பல்வேறு குறிக்கோள்களை பல்வேறு நிலைகளில் அடைவது அத்யாவசியமாகும். இக்குறிக்கோள்களின் மூலம் பெறும் அனுபவங்களின் தொடர்ச்சியான வளர்ச்சியை கல்வியின் இறுதி இலக்கிற்கு இட்டுச் செல்கிறது எனலாம்.

கல்வியின் உடனடியான நோக்கம் மாணவரின் நடத்தை முறையைப் பாதிக்கக் கூடிய பயனுள்ள சில அனுபவங்களை அவர்கட்கு அளிப்பது. மனித சமூகத்தின் பண்டைய பண்பாட்டுக் கூறுகளை அவர்கட்கு அறிமுகப்படுத்தி அவற்றினின்றும் பயன்பெற அவர்கட்கு உதவுவது. பாடல்கள், செயற்பாடுகள் என்பன இவற்றை அடைய அவர்கட்கு உதவுகின்றன. ஆனால் எத்தகைய அனுபவங்களை மாணவர்கள் பெறவேண்டும். அதன்மூலம் எத்தகைய மாற்றங்களை அவர்களிடையே தோற்றுவிக்கவேண்டும் என்பதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தனது வாழ்க்கையை வளமாக்கக்கூடிய வருமானத்தைப் பெற்றுத்தரும் ஒரு தொழிலை நடாத்த தேவைப்படும் அறிவு, திறன், பயிற்சி என்பவற்றை கல்வியின் மூலம் அளிப்பது ஒரு முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது. இந்நோக்கத்தை சிலர் ஏற்றுக் கொள்வதில்லை. இது மாணவரை சுயநலக்காரர்களாகவும், சடப்பொருள் மனப்பான்மையினைத் தோற்றுவித்து ஆன்மீக பண்பைக் குறைத்துவிடும் என்று சிலர் கருதுகின்றனர். எனவே இந்நோக்கத்தில் ஒருபுறம் நன்மையும் மறுபுறம் பாரிய குறைபாடுகளும் காணப்படுகின்றன.

இதனைவிட அறிவு நோக்கத்திற்காக கற்றல் நடைபெறுவதென்பது இன்னொரு முக்கியவிடயமாகும். இது தொழில் நோக்கைவிடவேறுபட்டது. அதற்கு எதிரானது தொழில் நோக்கம் கல்வியின் நடைமுறைப் பயனை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டது. ஆனால் அறிவு நோக்கம் கல்வியினை ஒரு குறிக்கோள் நிலையினின்றும் நோக்குவதாகும். இதில் கடனடிப் பயன் இல்லையென்றாலும் மனிதனை மதிப்புள்ளவனாக ஆக்குவது இந்த நோக்கமேயாகும்.

இந்நோக்குடன் நெருங்கிய தொடர்புடைய இன்னொரு நோக்கு பண்பாட்டு நோக்கமாகும். மனித நாகரிக வரலாற்றில் அவன் உருவாக்கிய பண்பாடு மிகமேலானதாகும். இது மனித வாழ்வில் எழுந்துள்ள சிந்தனைகள், செயல்கள், பழக்கவழக்கம், நம்பிக்கை என்பவற்றுடன் தொடர்புடையது. அதனை சிதைவுறாது பாதுகாப்பதும், வளர்ப்பதும், அடுத்த தலைமுறையினருக்கு சிதைவு படாமல் வழங்குவதும் கல்வியின் நோக்கமாகும்.

பெஸ்டலாசி போன்ற கல்வியியலாளர்களின் கருத்துப்படி கல்வியின் நோக்கம் ஒரு பிள்ளையின் எல்லாத் திறன்களையும், உள ஆற்றல்களையும் (POWERS AND FACULTIES) விரும்பத்தக்க முறையில் வளரச் செய்தல் என்பதாகும். இதனை ஒன்றிணைந்த ஆளுமை வளர்ச்சி என்றும் குறிப்பிடலாம். இது ஒரு பிள்ளையிடம் முடங்கிக் கிடக்கும் சகல ஆற்றல்களையும் வெளிக்கொணர்ந்து கல்வியின் மூலம் துலங்கச் செய்தலாகும்.

கல்வியின் இறுதியானதும் முக்கியமானதுமான நோக்கம் மாணவர்களிடம் நல் ஒழுக்கத்தினையும், அறப்பண்புகளையும் வளரச் செய்தலாகும். பல்வேறு உயிர் இனங்களில் மனிதப் பிறவியிடம் மாத்திரமே ஒழுக்கப் பண்புகள் காணப்படுகின்றன. இவற்றைப் புடம்போட்டு வளரச் செய்வதற்கு சமயக் கருத்துக்களும் சமய செயற்பாடுகளும் பெரிதும் உதவுகின்றன. அரிஸ்டாட்டில், ஹேபார்ட் போன்ற தொன்மைக் கல்வியியலாளர்கள் இந்நோக்கத்தை சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளனர். பண்டைய இந்தியக் குருகுல கல்வி முறையில் ஒழுக்கத்தினையும் ஆன்மீகப் பண்புகளையும் வளர்ப்பதே முக்கிய நோக்கமாகக் கருதப்பட்டது. மனிதனிடம் இயற்கையாகக் காணப்படும் பண்படாத நடத்தை முறைகளை உயர்ந்த இலட்சியங்களுக்குட்பரத்தி அவற்றை அடக்கி ஆள்வதே ஒழுக்கமாகும்.

நல்ல ஒழுக்கமுள்ள மனிதன் அறிவாற்றல்களினால் பெறும் மகிழ்ச்சி அனுபவங்களை தன்புலன்களினால் பெறும் மகிழ்ச்சி அனுபவங்களைவிட உயர்ந்ததாக மதித்து நடப்பான். நுண்ணறிவுமிக்க (1Q) ஆனால் நல் ஒழுக்க குறைவான தலைவர்களால் சமூகத்திற்கு தீமையே ஏற்படுகிறது. இதற்கு வரலாற்றில் நிறைய ஆதாரங்கள் உள்ளன. காரணம் சமூக நலனுக்குப் பதிலாக தம் சுயநலத்திலேயே இவர்கள் கூடுதலாக அக்கறைகாட்டுவார்கள்.

நல் ஒழுக்கம் பிறப்பின் மூலம் உருவாகுவதொன்றல்ல. பிறப்பிலே குழந்தைகள் நல் ஒழுக்கமுள்ளவர்களாகவோ தீய ஒழுக்கமுள்ளவர்களாகவோ பிறப்பதில்லை. அனுபவம், கல்வி, பயிற்சி என்பவற்றின் விளைவாகத் தான் ஒருவனிடம் ஒழுக்கம் வளர்ச்சி பெறுகின்றன. குழந்தைகள் தொடர்ச்சியாகப் பல அனுபவங்களைப் பெறுவதினின்றும் ஒழுக்கம் சிறிது சிறிதாக வளர்ச்சி பெறுகின்றது. நல்லறிவு, மனவுறுதி, பயிற்சிகள் ஆகியவற்றைச் சார்ந்து அவ்வொழுக்கங்கள் வளர்ச்சி பெறுகின்றன. இவை குழந்தைகளிடம் பல்வேறு கவர்ச்சிகள் வளர்ச்சி பெறுவதினால் அவன் அடையும் முளுமையான ஆளுமையைச் சார்ந்ததாகும்.

இன்று உலகில் காணப்படும் போட்டி, பூசல்கள், போராட்டம் யாவற்றிற்கும் காரணம் ஒழுக்க மின்மையேயாகும். நல் ஒழுக்கமில்லாத ஒருவன் மேதையாயினும் அவனை சமூகம் விரும்புவதில்லை மாணவர்களிடம் இன்று பெருகிவரும் பதற்றநிலை, துர்நடத்தை என்பவற்றிற்கும் ஒழுக்கமின்மையே காரணமாகும். எனவே கல்வியின் மூலம் அறிவு வளர்ச்சியைவிட ஒழுக்க வளர்ச்சியே அதிகமுக்கியத்துவம் வாய்ந்ததாகும். நல் ஒழுக்கம் என்பது இருபிரிவுகளைக் கொண்டது. ஒன்று தனிமனிதனைச் சார்ந்தது மற்றது சமூகத்தைச் சார்ந்தது இவையிரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையது எனலாம்.

எல்லாக் குழந்தைகளும் இயற்கையாகவே பிறக்கின்றன. அவர்களது பெற்றோர்களே அவர்களை யூதர்களாகவும், கிறித்தவர்களாகவும், வணங்குபவர்களாகவும் மாற்றுகின்றனர் என்கிறது நபிமொழி பிள்ளையின் ஆரம்ப நடத்தை, அதன் இயல் பூக்கங்கள் (INSTINCTS) மனவெழுச்சிகள் (EMOTIONS) என்பவற்றால் உந்தப்பட்டு எழுவதாகும். பிள்ளை வளர்ச்சியுற்று அதன் அனுபவங்கள் விரிவடைவதன் விளைவாக இயல் பூக்கங்களும் அதனோடு இணைந்து காணப்படும் மனவெழுச்சிகளும் பல்வேறு கருத்துக்கள், பொருட்கள், நிலையங்கள் ஆகியவற்றினைச்சுற்றி ஒழுங்கமைக்கப்பட்டு பற்றுக்களாக (SENTIMENTS) உருவாகுகின்றன. இப்பற்றுக்களில் உண்மை, நேர்மை, நன்னடத்தை போன்ற பல அறப்பற்றுக்கள் காணப்படுகின்றன. இந்த அறப்பற்றுக்களே பிள்ளையை நல் ஒழுக்கத்தின் பால் இட்டுச் செல்வனவாகும்.

எனவே ஒரு பிள்ளையின் ஒழுக்க வளர்ச்சி அதன் அறிவு வளர்ச்சி மனவெழுச்சி வளர்ச்சி, சமூக வளர்ச்சி என்பற்றுடன் பின்னிப்பிணைந்ததாகும். அப்பிள்ளையின் குடும்பப் பெற்றோர், வாழ்க்கைச் சூழல் அதனது பரம்பரை என்பனவும்கூட அதனது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

பண்புள்ள குடும்ப செல்வாக்கு, சிறப்பான பாடசாலைச் சூழல், பாடசாலையின் உயர்வான மரபுகள் (TRADITIONS) என்பனவும் மாணவரது ஒழுக்க வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றன. மாணவப் பருவத்தில் நல் ஒழுக்கத்தினை கட்டி எழுப்புவதற்காக பல்வேறு ஏற்பாடுகள் இன்று கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அறநெறிக்கல்வி, விழுமியக்கல்வி, இதனோடு இணைந்து சமயக்கல்வி என்பன இன்று புதிய கல்வி புனரமைப்பில் விதந்துரைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தவிர ஏனைய பாடங்களின் ஊடாகவும் அறப்பற்றுக்களைத் வளர்வதற்கான அடித்தள மிடப்பட்டுள்ளது. புதிய கல்விப் புனரமைப்பின் ஊடாக மாணவர்களது உடல் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும், ஆன்மீக வளர்ச்சிக்குமிடையே சமநிலை பேணப்பட வேண்டும் என்பது இன்று அமுலாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் கல்வியின் இறுதி இலக்காக நல் ஒழுக்கமுள்ள ஒரு சமூகத்தைக்கட்டி எழுப்புவதற்காக ஏற்பாடுகள் புதிய கல்வித்திட்டத்தில் ஆணித்தரமாக உட்புகுத்தப்பட்டுள்ளன.

*'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப்படும்'* என்பதற்கிணங்க கல்வியின் ஊடாக நாம் ஒரு புதியதொரு சமூகத்தைக்கட்டி எழுப்புவோமாக.

# விநாயகர் வழிபாடு

- கலைஞர் கே. நாகேந்திரன்

''கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்'' எனும் அருள்வாக்குக்கு அமைய ஆலயம் என்பது ஊருக்கு மிகவும் முக்கியமானது உடலுக்கு உயிர் எவ்வளவு முக்கியமோ அதைவிட மேலானது ஆலயம். ஆன்மாக்கள் ஒன்றுபட்டு லயப்படும் இடம் ஆலயம். ஆன்மாக்களுக்கு கன்மவினை அறுத்து மலநீக்கத்தை உண்டுபண்ணி மோட்சத்தை கொடுப்பதே ஆலயத்தின் முக்கிய நோக்காகும். உடல் அழிந்தாலும் ஆன்மாக்கள் அழிவதில்லை. அந்த வகையில் ஆலயம் நமக்கு மிகவும் முக்கியமானது.

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' எனும் ஔவையாரின் கொன்றை வேந்தனின் அருள்மொழிக் கமைய ஆலயம் சென்று இறை அருளைப் பெற்றாலே இடரெல்லாம் பறந்தோடும் என்கின்றனர் சைவப் பெரியார்கள்.

இந்த வகையில் நாம் கணபதியை நோக்கினால் முக்கணன் முதல் தொழும் நாயகன், பூதகணங்களின் தலைவன் வினைகளை தீர்க்கும் விக்ன விநாயகன், தொந்திக் கணபதி, பாலகணபதி எனும் பல நாமக்களுக்கு அதிபதியான ஸ்ரீ சித்தி விநாயகன் கழலடி தொழுவதால் வினையெல்லாம் வினாசமாகும். அவனது பாதார்விந்தங்களை சரணடைவோருக்கு துன்பமும் பனியாய் மறைந்துவிடும்.

*''வேழமுகத்து விநாயகனைத் தொழ*
*வாழ்வு மிகுந்துவரும் வெள்ளைக்*
*கொம்பன் விநாயகனைத் தொழ*
*துள்ளி ஓடும் தொடர்ந்து வினைகளே''*

எனும் விநாயகர் துதிக்கமைய எக்கருமம் தொடங்கினாலும் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்தால் அக்கருமம் வெற்றிகரமாக நிறைவுபெறும் எனச் சைவ மக்கள் நம்பினர். அதனாலேயே ''நம்பிக்கை உண்டேல் தும்பிக்கை துதி செய்யும்'' எனும் முதுமொழி இன்னும் எம்மிடையே நிலவி வருகிறது. எந்த ஒரு காரியத்தை ஆரம்பிக்கவோ அல்லது எந்தவொரு தொழிலை ஆரம்பிக்கவோ விநாயகர் திருநாமத்தை முதலில் ஓதிய பின்பே ஏனைய கருமங்களைச் செய்வர்.

விநாயகர் வழிபாடு புராண காலங்களுக்கு முற்பட்டது என்பது ஆய்வாளர்களின் கருத்து.

கணபதி நாதம்விந்தின் தோற்றமேயாகும். நாதம் சிவம், விந்து சக்தி சிவமும் சக்தியும் இணைந்து தோன்றும் உருவமே விநாயகரது தோற்றம். இதனாலேயே ''வல்லபாம்பிகா சமேத விக்கினேஸ்வராய நம'' என்று சிறப்பாக துதிக்கப்படுகின்றார்.

விநாயகப் பெருமானை சாணத்தில், சந்தணத்தில், மஞ்சளில் அமைத்து, எழுந்தருளி இருக்குமாறு செய்து, அறுகம் புல்லினால் அர்ச்சித்து, வேண்டும் வரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

திருமுறைகளிலும், சைவசித்தாந்தங்களிலும், புராணங்களிலும் மறைஞான நூல்களிலும் விநாயகனின் பெருமையும் அருளையும் அறிந்து கூறப்பட்டிருக்கின்றது.

விநாயக விரதங்களான விநாயகர் சதுர்த்தி, பிள்ளையார் பெருங்கதை என்பன சிறந்த விரதங்களாக கருதப்படுகின்றன.

இந்த வகையில் புத்தளத்தில் அமர்ந்தருள்பாலிக்கும் ஸ்ரீ சித்தி விநாயகர் தற்போது அடியார்களினதும் பரிபாலன சபையினரின் முயற்சியுடனும் இவ்வாலயம் மீண்டும் புதிதாக கட்டப்பட்டு மிளிர்ந்ததைக் கண்டு ஆனந்தம் அடைகின்றனர். மேன்மேலும் இக்கோயில் மேன்மை அடைய அடியார்களின் பணியும் இறை அருளும் அவசியமே. ஸ்ரீ சித்தி விநாயகர் அருள் பெற்று சகல ஐஸ்வரியங்களுடன் வாழ்வு மிளிர அவன் பதம் பணிவோம். நாட்டில் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் பெற ஸ்ரீ சித்தி விநாயகன் பதம் பணிவோம்.

# "சாத்தனும் அரிகர புத்திரனும்"

வ. மகேஸ்வரன்,
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஐயனார் என்கிற தெய்வ வழிபாடானது இன்று இந்துக்களிடையேயும், இலங்கையிற் பௌத்தர் களிடையேயும் பெரிதுஞ் செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகின்றது. தமிழகத்தில் ஐயப்பனுக்கு விரதம் அனுட்டித்து, சபரிமலைக்கு யாத்திரை செல்கின்ற ஐயப்பசாமிகளினது அளவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இலங்கையில் ஐயனார் என்ற கிராமியத் தெய்வ வழிபாட்டிற்குப் புறம்பாகத் தலைநகரத்தில் ஐயப்பனுக்கு ஆலயம் அமைத்தல், சாஸ்தா பீடங்கள் அமைத்தல், பதினெட்டாம் படிப்பூசை என்பன ஏட்டிக்குப் போட்டியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்தகையதொரு சூழலில் ஐயனார் வழிபாடு பற்றிய ஒரு பின்னோக்கிய பார்வையாக இக்கட்டுரை அமைகின்றது.

ஐயனாருக்குச் 'சாதவாகனன், கோழிக் கோடியோன், சாத்தன், வெள்ளையானை வாகனன், காரி, செண்டாயுதன், கடனிறவண்ணன், பூரணை கேள்வன், புட்கலை மணாளன், ஆரியன், அறத்தைக் காப்போன், (தர்ம சாஸ்தா) யோகி, அரிகர புத்திரன்'[1] எனப் பல பெயர்கள் வழங்கிய போதும் 'அரிகர புத்திரன்' 'தர்மசாஸ்தா' என்ற பெயரும் முக்கியம் பெற்றுக் காணப்படுகின்றன. இவையிரண்டுமே புராண சம்பந்தமுடையவை. தர்மசாஸ்தா என்பது அவனுடன் தொடர்புடைய பிற்காலத்துக்குரிய கதை மரபில் காரணப்பெயராய் அமைந்தது. ஆயின் ''அரிகர புத்திரன்'' எனும் பெயர் சமய முக்கியம் பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. இன்றைய தேதியில் ஐயனார் என்ற தெய்வத்துக்குரிய மேல்நிலையாக்க அந்தஸ்த்தை நிலைநிறுத்தும் பெயராக அது விளங்குகின்றது. சிவனுக்கும் திருமாலுக்கும் மகனாகப் பிறந்தமையாலேயே இப்பெயர் வழங்கப்பட்டது.

சிவனும் திருமாலும் இந்துமதத்தின் மும்மூர்த்திகளுள் இருவர், இவர்களை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமய மரபுகள் உண்டு. எனினும் இவ்விருவரது கூட்டின் மூலமாக பிறந்தவர் ஐயனார் என்ற கதை இந்துக்களிடையே மிகவும் வலிமை பெற்ற கருத்தியலாக விளங்குகின்றது. இதற்குக் கந்த புராணத்தில் ஒரு கதை ஆதாரமாக அமைகின்றது. பாற்கடலில் கடைந்த அமுதத்தைப் பங்கிட மோகினி வடிவமெடுத்த திருமாலும் சிவனும் நாவலந்தீவிற் தேங்கு மரத்தடியிற் கூடியபோது,

> 'கருங்கடல் போல இருண்ட மேனியும், செவ்வானம்
> போன்ற சடையும், செண்டாயுதந்தாங்கிய திருக்கரமும்
> எவரும் போற்றுதற்குரிய வீரமும் கொண்டவராய்
> ஞானிகளாற் போற்றப்படும் பெருமையும், அடியார்களைக்
> காக்கும் கருணையும் வாய்ந்த ஐயனார் பிறந்தார்'[2]

எனக் கந்தபுராணம் மகாசாத்தப்படலாம் கூறும்.

பாத்மபுராணம் இன்னோர் கதையைக் கூறுகின்றது. பத்மாசுரனை அழிக்க மோகினி வடிவங்கொண்ட திருமாலும், தாருகாவனத்து ரிஷிகளின் அகந்தையை அழிக்கப் பிட்சாடன வடிவங்கொண்ட சிவனும் கூடிய காலத்துப் பிறந்தவரே அரிகர புத்தரனாவார் என அது கூறுகின்றது. மகிசி என்ற அரக்கியை அழிப்பதற்காகச் சிவனும் திருமாலுங்கூடிப் பெற்ற பிள்ளையே சாஸ்தா என்றும், இவன் சிவனது கட்டளைக்கு இணங்கப் பூவுலகில் பந்தள நாட்டு மன்னனான ராஜசேகரனுக்கு வளர்ப்பு மகனாக மணிகண்டன் என்னும் நாமத்தோடு வளர்ந்து தாயின் நோய் தீர்க்கப் புலிப்பால் தேடச் சென்று, மகிசியையும் அழித்து பின் இந்திரனைப் புலிவாகனமாக்கி அரண்மனை செல்ல, சாஸ்தாவே தனது

புதல்வனாக வந்தவன் என உணர்ந்த அரசன் வணங்கிப் பின் சாஸ்தாவினது விருப்பத்தின்படியே மலையில் ஆலயம் அமைத்து வழிபாடு செய்தான். அதுவே சபரிமலை ஐயப்ப வழிபாடாகியது என்றும் ஒரு கதை வழங்கப்படுகிறது.[3] இக்கதையே இன்றைய சபரிமலை வழிபாட்டின் பிரதான இடத்தைப் பெற்றுள்ளது.

மேற்குறித்த புராணக்கதை மரபுகள் யாவும் மிகவும் பிற்பட்ட காலத்தவையாகவேயுள்ளன. ஆகவே இந்தத் தெய்வ வழிபாடு தொடர்பான வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்ப்பது ஆய்விற்கு உதவியாக அமையும்.

> 'சாதவாகனர் காலத்தில் சாத்தன் என்ற தெய்வம் வீரவணக்கத்தின் அடிப்படையாகத் தோன்றியது என்று தெரிகின்றது. இந்த தெய்வம் பழங்குடி மக்களின் தெய்வமாக இருந்து, பழங்குடி மக்களின் தாய்த் தெய்வத்தின் மகனாகவுங் கருதப்பட்டது. இந்தத் தெய்வத்தைப் பௌத்தரும், சமணரும் தங்களுடைய தெய்வமாக ஆக்கினர். பின்னர் சைவரும் சாதாவாகனனைத் தங்களுடைய தெய்வமாக ஆக்கிப் புராணங்கள் படைத்தனர். சிவனைத் தந்தையாக்கி, காளியையும், பார்வதியையும் காமாட்சியையும் தாயாக்கினர். சிவபெருமானின் மகன்களில் குமரன், விநாயகன் ஆகியோருடன் சாத்தனும் மகனாக்கப்பட்டான்.[4]

என பி.எல்.சாமி குறிப்பிடுவதை நுணுக்கமாக ஆராய்ந்தால் இத் தெய்வ வழிபாடானது மனிதப் பண்பாட்டு வரலாற்றுடன் எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதனை அனுமானிக்க முடியும். சங்ககாலத்தில் உறையூருக்குக் கிழக்கேயிருந்த பிடவூரில் 'அறப்பெயர்ச் சாத்தன்' என்ற தெய்வம் இருந்ததைப் புறநானூற்றில் இருந்து அறியலாம்.[5] மேலும் அக்காலத்தில் பலருக்குச் 'சாத்தன்' என்ற பெயர் வழக்கில் இருந்துள்ளது. (கடவுள் பெயரைப் பிள்ளைகட்கு இடுவது இன்றுவரை நிலவும் வழக்கமாக உள்ளது). சிலப்பதிகாரத்தில் 'பாசாண்ட சாத்தன்' கோட்டம், 'புறம்பணையான் கோட்டம்' என இரு கோட்டங்கள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. இவற்றுக்கு உரை கூறியவர்கள் பாசாண்டசாத்தனைச் சாத்தன் எனும் ஐயன் என்றும் புறம்பணையான் கோட்டம் என்பது சாதவாகனன் அல்லது மாசாத்தன் கோயில் என்றும் குறிப்பிடுகின்றனர். ஆனால், மேற்கூறப்பட்ட சாத்தன் வழிபாடுகள் யாவும் சைவ அல்லது வைதீக மதத்துக்குரியனவல்ல என்றும் அவை பௌத்த சமய மதங்களுக்குரிய வழிபாடுகளே என்றும் அறிஞர் கூறுவர்.[6]

தேவார காலத்தில் சாத்தன் சிவனது மகனுள் ஒருவனாகக் கருதப்பட்டான்.

*பார்த்தனுக்கருளும் வைத்தார்*
*பாம்பரையாடவைத்தார்*
*சாத்தனை மகனா வைத்தார்*
*சாமுண்டி சாமவேதம்*
*கூத்தொடும்பாட வைத்தார்*
*கோளரா மதிய நல்ல*
*தீர்த்தருள் சடையுள் வைத்தார்*
*திருப்பயற்றூரனாரே....*

என்று அப்பர் சாத்தனைச் சிவனது மகனாகப் பாடுவதை அவதானிக்கலாம். பல்லவர் காலத்தவர் எனக் கருதப்படும் திருமங்கையாழ்வார் தமது சிறிய திருமடலிலே,

*............. அறிவழிந்து*
*தீராவுடம்போடு பேதுறுவேன் கண்டிரங்கி*
*ஏரார் செழுப்புழுதிக் காப்பிட்டு, செங்குறிஞ்சித்*

*தாரார் நறுமாலைச் சாத்தற்கு, தான் பின்னும்*
*நேராதனவொன்று நேர்ந்தாள், அதனாலும்*
*தீராதென் சிந்தைநோய், தீராதென் பேதுறவு*
*வாராது மாமை.........*

எனக் குறிப்பிடுகின்றார். பெண்களுக்கு ஏற்பட்ட காதல்நோய் தீரச் சாத்தனுக்கு நேர்த்தி வைத்தபோதும் சிவந்த குறிஞ்சிமாலை சூடியவனான சாத்தனாலும் அந்த நோயைத் தீர்க்க முடியவில்லை என்று தலைவி கூறுவதாக இக் கூற்றுக் காணப்படுகின்றது.

மேற்குறித்த இருவரது பாடல்களையும் நோக்குகின்றபோது அப்பர் சாத்தனைச் சிவனது மகனாக அங்கீகரித்துப் பாடுகின்ற தன்மையினையும் திருமங்கை மன்னன் சாத்தனைக் கிராமிய நிலையில் வைத்துப் பாடுகின்ற தன்மையையுங் காணமுடிகின்றது. சைவ வைஷ்ணவ மதங்கள் சாத்தன் எனுந் தெய்வத்தை உள்வாங்கியபோதும் நோக்குநிலையில் வேறுபாடுடையனவாகக் காணப்பட்டன என்பது இதன்மூலம் புலனாகின்றது.

சோழர் காலத்தில் சாத்தன் எனும் தெய்வத்துக்கு இரு நிலைகள் இருந்ததாகத் தெரிகிறது. ஒன்று சைவ ஆலயங்களில் பரிவார மூர்த்திகளுடன் ஒரு மூர்த்தியாக இடம்பிடித்தமை, மற்றையது அவனுக்கெனத் தனிக்கோயில்கள் இருந்தமை. சோழர் ஆட்சியின் அடிமட்ட நிர்வாக அமைப்பில் இடம்பெற்ற ஊர், சபை, நாடுகளில் உள்ள கோயில்களை ஆட்சி செய்த குழுக்கள் அவ்வவ் ஆலயங்களின் மூலவரது பெயராலேயே அழைக்கப்பட்டன. அந்தவகையில் 'சாத்தகணத்தார்' என்ற ஆட்சிக் குழுமம் நிலைபெற்றதைக் கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகின்றது.[7] திருக்கைலாயத்தில் சிவன்முன் பாடி சேரமான் பெருமான் அரங்கேற்றிய 'திருக்கைலாய ஞான உலா'வைக் கேட்ட மாசாத்தன் அதனைப் பிடவூரில் வெளிப்படுத்தினார் என்று பெரிய புராணம் கூறுகின்றது. எனவே சாத்தன் வழிபாடு சோழர் காலத்தில் ஓரளவு செல்வாக்குப் பெற்றதாகக் காணப்படுகின்றது.

சாத்தன் வழிபாடு பாண்டியநாட்டுடன் தொடர்புடைய கதை மரபின் வளர்ச்சியூடாக கேரளாவில் பெருஞ் செல்வாக்குப் பெற்றுத் திகழத் தமிழ்நாட்டில் சாத்தன் வழிபாடு கிராமிய நிலையில் அல்லது பெருந்தெய்வங்களது ஆலயங்களின் பரிவாரத் தெய்வம் என்ற நிலையுடன் மட்டுமே நின்றுவிட்டது. விசயநகர நாயக்க மன்னரது ஆட்சிக் காலத்தின் பிற்கூற்றிலே எழுந்த பள்ளுப் பிரபந்தங்களில் சாத்தன் எனப்படும் தெய்வம் உழவர்களால் கிராமிய மட்டத்தில் வணங்கப்பட்டதை அறியமுடிகின்றது.

*திங்கள்மும் மாரியுல கெங்கும் பெய்யவே*
*தெய்வத்தைப் போற்றிவந்தாற்*
*கைதருங் காண்*

*பொங்கலு மிட்டுத்தேங் காயும் கரும்பும்*
*பூலா வுடையாருக்குச்*
*சாலக் கொடுங்கள்*

*குங்குமத்தோடுசந் தணமுங் கலந்து*
*குமுக்கா வுடையா ரய்யர்*
*தமக்குச் சாத்தும்*

*கங்கணங் கட்டியே ஏழுசெங்கடாயும்*
*கரையடிச் சாத்தா முன்னே*
*விரைய வெட்டும்.*[8]

உடையார் ஐயன், கரையடிச்சாத்தா, பூலாவுடையார் முதலிய கிராம தேவதைகளுடன் சாத்தாவும் இடம்பெறுவதை அவதானிக்கலாம். ஆனால் இந்தச் சாத்தாவுக்கு மரபுக்கு மாறாகக் கடா வெட்டிப் பலியிடுதல் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பான்மையாகச் சாத்தனுக்கு சைவ உணவே படைப்பது மரபு. இம்மரபு எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பாகப் பல்வேறு கருத்து நிலைகள் அறிஞரிடையே உண்டு. மேலும் பள்ளர்களுக்குச் 'சாத்தன்' என்ற பெயரும் இருந்ததாக முக்கூடற்பள்ளு மூலம் அறியமுடிகின்றது.[9]

திருச்செந்தூர்ப் புராணத்தில் சாத்தன் அரிகரப் புத்திரப் பிள்ளையார் என்ற பெயரில் மேல் நிலையாக்கம் பெற்றுப் பரிவார மூர்த்திகளுள் ஒருவராகிவிட்டார்.

*அரிய பூரணை புட்கலையாமிரு*
*தெரிவை மார்முலைச் செங்களபத்தொளி*
*விரவு சுந்தர மேருவொப் பாம்புயக்*
*குரிசி றண்டை குரைகழல் போற்றுவோம்*

என அது அவரை விபரிக்கின்றது.[11] இவ்விடத்தில் மகாசாத்தர் மேல்நிலையாக்கப்பட்ட தெய்வங்களுக்குரிய குணாம்சமுடையவராகி 'மாமேரு' மலையை ஒத்த புயங்களையுடையவராகி, தண்டைகள் ஒலிக்கின்ற திருவடிகளுடன், புட்கலை, பூரணை என்னும் இரு தேவியர் சமேதரமாக வீற்றிருக்கின்ற உயர் நிலையை அவதானிக்க முடிகின்றது. சாத்தன் வழிபாடு இன்று பெருந்தெய்வ மரபுடையதாக கேரளாவில் மட்டுமே விளங்குகின்றது. அங்கு சபரிமலையில் ஐயப்பனாகவும், காந்த மலையில் ஜோதியாகவும் குளத்துப்புழையில் பாலகனாகவும், ஆரியங்காவில் அப்பனாகவும் அச்சன் கோயிலில் அரசனாகவும் வீற்றிருந்து அருள்புரிகின்றனர். அவற்றுள்ளும் சபரிமலை ஐயப்பனே மிகவும் பிரபலம் பெற்ற தெய்வமாக விளங்குகின்றார். தமிழ்நாட்டில் ஆங்காங்கே ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தபோதும் பெருங்கோயில்களில் பரிவாரத் தெய்வநிலை பெற்றிருந்த போதும் கிராமிய வழிபாடே முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. ஆயின் தமிழ்நாட்டில் ஐயப்ப பக்தர்களின் அளவுமிக வேகமாக வளர்ந்து வருவதையும் மனங்கொள்ள வேண்டும்.

இலங்கையின் வட, கிழக்குப் பாகங்களிலும் வடமேல் பகுதிகளிலும் வன்னிப் பிராந்தியத்திலும் ஐயனார் வழிபாடு இடம்பெற்று வருகின்றது. சிங்கள மக்களிடையேயும் இவ்வழிபாடு நிலவிவருகின்றது. இங்கு ஐயனார், ஐயனாயக்க என்றே அழைக்கப்படுகின்றார். பௌத்த மக்கள் ஐயனாயக்க தேவரைக் கானத்தில் வதியும் தெய்வமாகக் கொள்வர்...... வடமத்திய மாகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் பிரசித்தி பெற்றுள்ள ஐயனாயக்க தேவர் சிங்கள மக்களால் வழிப்போக்கரது தெய்வமாக வழிபடப் படுகின்றார். யாத்திரைக்கோ, வேட்டைக்கோ செல்பவர்கள் இவரை வழிபட்டுச் செல்வர். புதிய குளம் கட்டியவுடனும் அறுவடை முடிந்த பின்னரும் இவருக்கு விழாவெடுப்பர். அவ்விழா முட்டிமங்கல்ய விழா எனப்படும். இரகசியமான இடமென்று கொள்ளப்படும் ஒரு குளக்கரைக்குச் சென்று புதிய சிவப்புப் பானைக்குள்ளே ஏற்றிய தீபங்களை வைத்து நிவேதனஞ் செய்து ஐயனாயக்க தேவரை வழிபடுவதே இவ்விழாவின் முக்கிய அம்சமாகும்.[11]

யாழ்ப்பாண மாவட்டத்திலே பல ஐயனார் ஆலயங்கள் இன்று மேல்நிலையாக்கம் பெற்றுவிட்டன. அவ்வாலயங்கள் பலவற்றில் ஆகம விதிமுறைப்படியான பூசைகளும், விழாக்களும், வழிபாட்டு முறைகளும் இடம்பெறுகின்றன. இன்னொரு வகையில் இவ்வழிபாடு மேல்நிலையாக்கத்தால் மாற்றமுற்றதை ஈழத்துச் சிதம்பர புராணத்தின் வாயிலாக அறியமுடிகின்றது. இன்று புகழுடன் விளங்கும் ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் சிவன் கோயிலில் ஆரம்பத்தில் ஐயனார் வழிபாடே இருந்து வந்துள்ளது. பின்னர் அம்பலவி முருகர் என்பவரது முயற்சியால் அவ்வாலயத்திற்குப் பக்கத்திலேயே சிவாலயங் கட்டிக் குடமுழுக்குச் செய்யப்பட்டது. அதன்பின்னர், ஐயனாரது பெயர் படிப்படியாகக் குறைந்துபோக இன்று ஈழத்துச் சிதம்பரம் அல்லது காரைநகர் சிவன்கோயில் என்றழைப்பதே மரபாகிவிட்டது. எனினும், ஐயனார் வழிபாடு அங்கு இன்னமும் வழக்கிலுண்டு.

சாத்தன் வழிபாடு தொடர்பான கருத்துநிலைகள் இன்னமும் விரிவுபெற வேண்டியுள்ளன. அவ்வழிபாட்டின் மூலமாக சமண, பௌத்த மதங்களைக் குறிப்பிட்டபோதும் அதற்கு எதிரான வாதங்களும் முன்வைக்கப்படாமலில்லை. அத்துடன் எவ்வகையில் இது கேரள மாநிலத்தில் பெருஞ்சிறப்புப் பெற்றதென்பதும் ஆய்வுக்குரியதே. அத்துடன் ஐயப்பன் நோன்பு, உடை, சபரிமலை யாத்திரை முதலியனவும் 'சாமியே சரணம்' என்ற வழிபாட்டு மந்திரமும் பொதுவான இந்துமத வழிபாட்டிலிருந்து சற்று மாறுபட்டவையாகக் காணப்படுகின்றன. மேலும் இலங்கையில் சிங்கள மக்களிடையே இவ்வழிபாடு எந்த முறைமையில் செல்வாக்குப் பெற்றது என்பதும் அதனுடைய சமய பண்பாட்டு உள்ளடக்கம் என்னவென்பதும் ஆய்வுக்குரியதே. தென்னகத்தில் உள்ள பல பகுதிகளில் நிலவி வருகின்ற சாத்தன் அல்லது ஐயனார் வழிபாடு சமூகவியல் அடிப்படையில் மேலும் ஆய்வுகளுக்கு உட்படும் போது, இவ்வினாக்களுக்கு விடை காண்பது சுலபமாகலாம்.

*அடிக்குறிப்புகள்*

1. பிங்கல நிகண்டு - ப-27.
2. கந்த புராணம் - மகா சாத்தப்படலம்.
3. இந்துக் கலைக் களஞ்சியம் - பாகம்-2 ப-157.
4. பி.எல்.சாமி (1974), ஆராய்ச்சி சாத்தன் வழிபாடு - ப-160
5. புறநானூறு பாடல் 395.
6. பி.எல்.சாமி மு.கு. கட்டுரை - ப-158
7. மா.பாலசுப்பிரமணியம் சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு - ப-247.
8. முக்கூடற்பள்ளு பாடல் - 33
9. முக்கூடற்பள்ளு பாடல் - 115
10. திருச்செந்தூர்ப் புராணம், கடவுள் வாழ்த்து - பாடல்-8
11. சி.தில்லைநாதன் (1997), ஐயனார் வழிபாடு
    பேராசிரியர் தில்லைநாதன் மணிவிழா மலர் - ப-46.

**ஆசை**

அங்கம் தளர்ந்துவிட்டது. தலை நரைத்துவிட்டது. வாய் பல் இல்லாததாக ஆகிவிட்டது. கிழவன் கோலை ஊன்றிக் கொண்டு நடக்கிறான் என்றாலும் அவனுடைய மாமிச பிண்டத்தை ஆசைவிடவில்லை.

**பற்று**

குழந்தையாயிருக்கும் பொழுது விளையாட்டில் பற்று. யௌவனத்தில் பருவப் பெண்ணிடம் பற்று. வயது முதிர்ந்த பொழுது கவலை. பரப்பிரம்மத்திடம் பற்றுக் கொண்டவன் எவனுமில்லை.

# சைவ சமயிகள் என்போர் யாவர்?

குமாரசாமி சோமசுந்தரம்

ஒரு நல்ல சைவ சமயியிடம் காணக்கூடிய இலட்சணங்கள் யாவை? இது பலரின் மனத்தையும் உறுத்துகின்ற ஒருவினா. இதற்கு முழுமையான விடையைக்குறுகிய நேரத்திற்குள் தருவது இயலாத காரியம். ஒரு சில இலட்சணங்களையாதல் இங்கு பார்ப்போம். சிவபெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்று அவரை வழிபாடு செய்பவர்கள்; அவரினால் அருளப்பெற்ற வேத ஆகமங்கள் மற்றும் தோத்திர சாத்திரநூல்கள் என்பவற்றை ஓதி உணர்ந்து வாழ்க்கையில் கைக் கொள்பவர்கள்; சிவசின்னங்களைத் தரிப்பவர்கள்; திருவைந்தெழுத்து ஓதுபவர்கள்; அன்பு நெறியில் நிற்பவர்கள் சைவர்கள் ஆவர்.

## சைவப் பண்புகள்

சைவன் சமநோக்குக் கொண்டவன். எந்த உயிரையும், எந்தப் பொருளையும் பேராசை கொண்டு நச்சாமலும், பகைமைபூண்டு வெறுக்காமலும் இருப்பவன் எவனோ அவன் சமநோக்குள்ளவன். இன்பத்தைக் கண்டு துள்ளிக்குதிக்காமலும், துன்பத்தைக் கண்டு துவண்டு வீழ்ந்து விடாமலும் இருத்தல் சமநோக்கின் இலட்சணம். நன்மை, தீமை - இரண்டையும் சமமாக நோக்குபவனே மகாஞானி.

சத்தியம், அஹிம்சை - இவ்விரண்டையும் சைவ சமயி விரதமாகக் கொள்வான். கருணையே சைவ சமயியின் வடிவம். அவனிடம் அன்பு, இரக்கம், தயை என்னும் குணங்கள் குடிகொண்டிருக்கும். எந்தப் பிராணியிடத்தும், எவரிடத்தும் பகைமையோ, வெறுப்புணர்வோ, பொறாமையோ, கோபமோ இருக்கமாட்டாது. சமநோக்குள்ளவனாய் எல்லோருக்கும் தமர், பிறர் என்ற பேதமின்றி, உதவி செய்வதையே உழைப்பாக்கிக் கொண்டிருப்பான். நீதி, நடுநிலைமை, நேர்மை எனபன சைவ சமயியின் அணிகலன்கள்.

சைவ சமயி, ஆசைகளுக்கு இடங்கொடுக்கமாட்டான். சிற்றின்பங்களினால் கவரப்படமாட்டான். காமத்திற்கு என்றுமே அடிபணியமாட்டான். ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பும் பண்பு, ஒரு சைவ சமயியின் மேலான இலட்சணமாகும். விளையாட்டிற்குத்...னிலும் பொய் பேசாமை; மாதா, பிதா, குரு, தெய்வம், பெரியோர்களை மதித்து மரியாதை செய்தல்; மனம், மொழி, மெய்த் தூய்மையுடைமை; உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை என்பன சைவ சமயியின் விசேட இலட்சணங்கள் ஆகும். பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் என்பதை வாழ்க்கைக் கடமையாகவே கொள்பவன், சைவன்.

கொல்லா அறம், சைவ சமயியின் தலையாய அறம். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலால், அவன் சைவன். கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகிய இரண்டையும் விரதமாகக் காப்பவன் சைவன். மது மற்றும் போதைப் பொருள்களையும் பாவித்துக்கொண்டு, புலால் உணவையும் உண்டு கொண்டு, திருடுதல் மற்றும் பல்வேறு ஊழல்களிலும் ஈடுபட்டுக்கொண்டு அதேவேளை, சைவன் என்று தம்மை வெளிப்படுத்திக் கொள்ளல் என்பது தன்னையும் ஏமாற்றிப் பிறரையும் ஏமாற்றுங் கொடுஞ் செயலாகும். இதைவிட மகாபாவ காரியம் வேறெதுவும் இருக்கமுடியாது. சைவம் என்பது ஒழுக்கத்திலேயே தங்கியுள்ளது என்பதை நினைவிற் கொள்ளுதல் அவசியமாகும்.

சைவன் புலனடக்கத்தோடு வாழ்பவன். புலன்களுக்கு அவன் எசமானன். புலன்கள் அவனுக்கு எசமானனாக இருக்க அவன் அனுமதிக்கமாட்டான். அவன் எல்லோர்க்கும் இனியன். வாழ்க்கை தூயதாய் அமைந்திருக்கும். அவன் உட்கொள்ளும் உணவு அளவாக இருக்கும். அவன் வாழ்வதற்காக உண்பவனே ஒழிய உண்பதற்காக வாழ்வதில்லை. அவன் மனத்தை அலட்டிக்கொள்வதில்லை. அதனால் அவன் என்றும் மனஅமைதியோடிருப்பான்.

சைவன், இயம, நியமங்களைப் பேணுவதில் கண்ணுங்கருத்துமாயிருப்பான். அஹிம்சை, சத்தியம், கள்ளாமை, தொடர்பின்மை, நாணம், வெளவாமை, கடவுள் நம்பிக்கை, பிரம்மச்சரியம், மௌனம், உறுதி, சகிப்பு, அஞ்சாமை என்பன இயமம் ஆகும். அகப்புறத்தூய்மை, ஜெபம், தவம், அக்கினிகாரியம், சிரத்தை, விருந்தினரைப் பேணல், கடவுள் வழிபாடு, தலயாத்திரை, பரோபகாரம், மனத்திருப்தி, ஆசிரியருக்குப் பணிவிடை செய்தல் என்பன நியமம் ஆகும். சைவநெறி நிற்போர் இந்த இயம, நியமங்களை அனுசரித்து ஒழுகுவர்.

ஒரு சிறந்த சமயி, சமம், தமம், தைரியம், தானம், தவம், வீரம், சத்தியம் என்பவற்றை மேற்கொள்வர். கடவுளிடம் கருத்தைச் செலுத்துதல் சமம். புலன்களை அடக்குதல் தமம். துன்பங்களைப் பொறுத்தல் திதிக்ஷை; நாவை அடக்குதல் தைரியம்; எவரிடமும் பகை கொள்ளாமலும், பிறர்தன்னைக் கண்டு அஞ்சச் செய்யாமலும் இருப்பது தானம். ஆசையை விட்டுவிடுதல் தவம். ஆசாபாசங்களை வெல்லுதல் வீரம். பரம்பொருளைக் கண்டு மகிழ்வது சத்தியம்.

சைவசமயி, இத்தகைய சைவ இலட்சணங்களை உடையவனாய் இருத்தல் இன்றியமையாததாகும்.

## சமய ஆசார, ஒழுக்கம்

சைவ ஆசார, அனுட்டானங்கள் என்பன சைவ சமய சாதனைகள் ஆகும். அவை நடைமுறையில் அனுட்டிக்கப்பட வேண்டியன. ஆனால் தற்காலத்தில் சைவமக்கள் ஆசார, அனுட்டானங்களுக்கு அத்துணை முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை. அவையெல்லாம் இக்காலத்து நவ நாகரிகத்திற்கு ஒவ்வாதவை என்று எண்ணுகிறார்கள் போலும், நம் முன்னோர்கள் எதையும் காரண மில்லாமல், செய்யுமாட்டார்கள். பயனற்றவற்றிலும் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். அவர்கள் சமய ஆசாரங்கள், ஒழுக்கங்களில் மிக இறுக்கமாக இருந்தமையினால்தான், விஞ்ஞான வசதிகள், மருத்துவ வசதிகள் மிகக்குறைவாக இருந்த பழைய காலங்களில் உடல் ஆரோக்கியத்துடனும், மனஅமைதியுடனும் எம்மைக்காட்டிலும், சிறப்பாக வாழக்கூடியதாக இருந்தது. மனிதர்கள் சமூகத்தில் நல்லுறவு பேணிச் சுற்றம் காத்து, நல்லிணக்கத்துடன் வாழ்ந்தார்கள். வாழ்வில் மகிழ்ச்சியும், நிம்மதியும், திருப்தியும் மேலோங்கியிருந்தன. சூது, வாது, பொய், புரளி, ஊழல், திருட்டு என்பவற்றில் ஈடுபடப் பயந்தார்கள். நற்செய்கை, நற்கருமங்களையே விரும்பி ஆற்றினார்கள்.

கடவுட் பயப்பாடு, சமூகப் பயப்பாடு ஆகிய இரண்டும் மனிதர்களிடம் இருக்கும் போதுதான், தீவினைகளைச் செய்ய அஞ்சுவார்கள். தெய்வதண்டனைக்குப் பயந்தும் சமூகம் தூற்றுமே என்பதற்கு அஞ்சியும் தான் கெட்ட நடத்தைகளிலும், கூடாஒழுக்கங்களிலும் இருந்து மனிதர்கள் விலகியிருக்கின்றனர். கடவுளுக்கும் சமூகத்திற்கும் மதிப்புக்கொடுக்காமல், தன்னிச்சையாகக் கருமங்களை ஆற்றத் துணிபவர்கள், பழிபாவங்களுக்கு அஞ்சுவதில்லை. இன்றைய சமூகங்களில், கற்றவர்கள், கல்லாதவர்கள் என்ற வேறுபாடின்றிக் கொடுஞ்செயல்களிலும், கூடா நடத்தைகளிலும் ஈடுபடுதலுக்குக் காரணம், சமய ஆசார அனுட்டானங்கள், சமய ஒழுக்கங்கள் என்பன பெரிதும் அலட்சியப்படுத்தப்படுதலேயாகும். சமயம் என்பது ஒழுக்கம்.

நம் முன்னோர்களின் சமய வாழ்க்கை ஆசார சீலங்களுடன் கூடியதாக விளங்கியது. அதுவே ஆன்மிக வாழ்வாகவும் மலர்ச்சி பெற்றது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலே ஆன்மிக வாழ்வு. அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்து, பல்தேய்த்து, நீராடி, தூய ஆடைதரித்து, நெற்றியில் திருநீறிட்டு பொட்டுவைத்து, கடவுள் வழிபாடு செய்த பிறகே உணவு மற்றும் பானம் என்பனவற்றை அருந்துவார்கள். வெளியே போய் வந்தால், கைகால்களையும் முகத்தையும் கழுவிய பின்னரே வீட்டிற்குள் செல்வது வழக்கம். பிறப்பு, இறப்பு வீடுகளுக்குச் சென்று வந்தால் குளித்து முழுகிய பிறகே வீட்டிற்குள் செல்வார்கள். இவையாவும் சமய ஆசார அனுட்டானங்களினூடாக ஏற்படுத்தப்பட்ட சுகாதாரப் பழக்கவழக்கங்கள்.

ஒவ்வொரு வீட்டிற்கும் விடியற்காலையில் மகாலட்சுமி வருகை தருவாளாம். அதனால் வீட்டையும், முற்றத்தையும் கூட்டிப் பெருக்கி, வாயிலில் சாணம் அல்லது மஞ்சட் தண்ணீர் தெளித்து, சுத்தஞ்செய்து, மாக்கோலம் போட்டு வீட்டுக்குள்ளே தீபம் ஏற்றி; தாமும் நீராடிப் பூமுடித்து, மஞ்சள் குங்குமம் இட்டு மகாலாட்சுமியைப் பெண்கள் வரவேற்கத் தயாராவார்கள். இப்படியான ஆசாரமுள்ள சைவக் குடும்பங்களில் மகாலட்சுமி நிச்சயமாகக் கொலுவீற்றிருப்பாள். மகாலட்சுமி உறையும் இடங்களில் எல்லாவகைச் செல்வங்களும் காணப்படும். மகிழ்ச்சி, செழிப்பு, ஐசுவரியம், பரிமளிப்பு, தெய்வீகம் யாவும் பொலியும்.

இன்று அநேகமானவர்கள் சூரியன் உதித்தும் வெகு நேரத்திற்குப் பின்னரே படுக்கையைவிட்டு எழுந்திருக்கிறார்கள். படுக்கையில் இருந்து கொண்டே கோப்பியோ, தேநீரோ அருந்துகிறார்கள். அதுவரை பல்தீட்டி வாய் கொப்பளிப்பது கிடையாது. அதன்பின் காலை உணவு உண்கிறார்கள். அதன்பின் குளிக்கிறார்கள். உடுத்த ஆடையையே உடுக்கிறார்கள். கடவுள் சிந்தனை, வழிபாட்டிற்கு நேரம் கிடையாது. அவசர அவசரமாகத் தொழில்த் தலங்களுக்கு விரைகிறார்கள். இவ்வாறு எல்லாமே அடிதலைமாறிய வாழ்க்கை முறையாகவே காணப்படுகிறது. இந்த நிலையில் உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம் எப்படி இருக்கும். குடும்பத்தில் விடிவு எவ்வாறு ஏற்படும்? இதுபற்றிச் சைவமக்களாகிய நாம் ஆற அமர இருந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குடும்பத்தில் பெரியவர்கள் எப்படி நடந்துகொள்கிறார்களோ, குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோரும் அப்படித்தான் நடந்து கொள்வார்கள். அப்பா, அம்மா மற்றும் பெரியவர்கள் சைவ ஆசாரங்களையும் ஒழுக்கங்களையும் பேணி வந்தால், நிச்சயமாக பிள்ளைகளும் ஆசார சீலர்களாக வளர்வார்கள். குடும்பத்தில் பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படா. நிம்மதியும் சாந்தமும் குடும்பங்களில் நிலவும்.

ஆசார அனுட்டானங்களுடன் வாழ்வது நாகரீகக் குறைவு, பிறர் பழிப்புக்குரியது எனறு எண்ணி மனம்போன போக்கில், அடிதலைமாறிய நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதால்தான் இத்துணை அவலங்களை எதிர்நோக்குகிறோம்.

## ஆலய வழிபாடு

சைவர்கள் யாவரும் தினந்தோறும் திருக்கோயிலுக்குச் சென்று, சிரத்தையோடு விதிப்படி சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஆலயம் செல்ல இயலாதவர்கள், புண்ணிய காலங்களிலேனும் தவறாமல் சென்று தரிசனம் செய்ய வேண்டும்.

ஆலய தரிசனம் செய்ய விரும்புவோர் ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து, அநுட்டானம் முடித்துக் கொண்டு ஆலயத்திற்குப் போதல் வேண்டும். ஆசௌசம் உள்ளவர்கள், ஆசௌசம் அல்லது தொடக்கு கழியும்வரை ஆலயத்தினுள் பிரவேசிக்கக் கூடாது.

ஆலயத்திற்குச் சுவாமி தரிசனம் செய்யப்போகும் போது வெறுங்கையோடு போகக்கூடாது. தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை முதலியவற்றை ஒரு பாத்திரத்திலே வைத்து, மேலே உயர்த்தப்பட்ட கையில் அதனை ஏந்திக் கொண்டு செல்லுதலே முறையாகும். அருச்சனைப் பொருட்களை அரைக்குக் கீழே தாங்கிப் போகக்கூடாது. இவ்வாறு பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றைக் கொண்டு செல்வதற்கு வசதி இல்லாதவர்கள் பூக்கள், பத்திரங்களைக் கொண்டு சென்று சுவாமியை வணங்குதல் வேண்டும்.

திருக்கோயிலுக்குச் சமீபத்திலுள்ள குளம், கிணறு முதலிய நீர்நிலை ஒன்றில் கை, கால்களை அலம்பி, அதன்பின்னரே உட்செல்ல வேண்டும். ஆண்கள் மேல்சட்டை, தலைப்பாகை, செருப்பு

முதலியவற்றை அணிந்து கொண்டு ஆலயத்தினுட் பிரவேசிக்கக் கூடாது. எவருமே செருப்பு முதலிய பாதரிட்சைகளை அணிந்து உட்செல்லல் ஆகாது.

முதலில் திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக் கொண்டு ஆலயத்தினுள்ளே பிரவேசித்து, பலிபீடத்துக்கு இப்பால் வீழ்ந்து வணங்குதல் வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் பண்ணல் வேண்டும். மாறிச் செய்யக் கூடாது. சிரசிலே இரண்டு கைகளையும் குவித்து வணங்குதலான திரயாங்க நமஸ்காரத்தை ஆண், பெண் இருசாராரும் பண்ணலாம்.

நமஸ்காரம் பண்ணுமிடத்து மேற்கேயாயினும் தெற்கேயாயினும் கால் நீட்டல் வேண்டும். கிழக்கேயாயினும் வடக்கேயாயினும் கால் நீட்டலாகாது. சுவாமி விக்கிரகங்களை நோக்கியும் கால் நீட்டக்கூடாது. சுவாமி தரிசனம் செய்யும்போது பிறருக்கு இடைஞ்சலாக நிறகக்கூடாது.

நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு, கடவுளை நினைத்துக் கொண்டு, இருகரங்களையும் இதயத்திலே குவித்த வண்ணம், மெல்ல மெல்ல நடந்து, சுவாமியைச் சுற்றிப் பிரதட்சிணம் செய்தல் வேண்டும்.

சிவபெருமானை மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினைந்து, இருபத்தொரு தரமாயினும் பிரதட்சிணம் பண்ணல் வேண்டும்.

சுற்றிவரும் போது மூலஸ்தானத் தூபி நிழல் பிரகாரத்தில் படர்ந்திருந்தால், அதில் மிதிக்காமல் விலகிச் செல்லுதல் முறையாகும். அவ்வாறு விலக்கிச் செல்ல முடியாதிருப்பின், அந்த நிழலில் மூன்று கூறுகளை நீக்கி எஞ்சிய இரண்டு கூறுகளுக்கூடாகச் செல்லலாம். உற்சவம் நடைபெறும் போது, நிழல் இருப்பினும், நீக்காது நடக்கலாம்.

சுவாமிக்கு அபிஷேகம் நடந்து கொண்டிருக்கும் போது, உள் வீதியிலே பிரதட்சிணம், நமஸ்காரம் முதலானவை செய்தல் ஆகாது.

பிரதட்சிணம் செய்த பின்னர், சந்நிதானத்திலே வீழ்ந்து வணங்கி, எழுந்து, கும்பிட்டுக் கொண்டு உள்ளே போய், சுவாமியைத் தரிசித்து மனத்திலே தியானித்து, சிரசிலும் இருதயத்திலும் கைகுவித்து அஞ்சலி செய்து, மனங்கசிந்துருக, உரோமஞ்சிலிர்ப்ப, கண்ணீர்மல்க, தேவாரத் திருமுறைகளிலிருந்து பஞ்சபுராணம் பாராயணம் செய்தல் வேண்டும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்பவையே பஞ்சபுராணம் ஆகும். அதன்பின், அர்ச்சகரைக் கொண்டு கடவுளுக்கு அர்ச்சனை செய்வித்தல் இடம்பெறும்.

சுவாமி தரிசனம் முடிந்ததும், அவருக்குப் புறங்காட்டாது, பலிபீடகத்திற்கு இப்பால் வந்து மூன்று தரம் நமஸ்கரித்து, எழுந்து வடக்கு நோக்கி அமர்ந்து, வீட்டுக்குப் போதல் வேண்டும்.

**அநுக்கிரகம்**
நீ ஒவ்வொரு வினாடியும் உயிருடன் இருப்பதற்கு இறைவன் அளிக்கின்ற வாய்ப்பு.

**கடவுள்**
உன்னிடம் இயக்கமாய் இருக்கின்ற நிலையே அவன் கடவுள்.

**பாவம்**
மனிதன் இனிமேல் செய்ய இருக்கின்ற சுயநலத்தின் எதிரொலி.

# குருநாகலையில் சைவம்

எஸ். ரமேஷ்,
ஆசிரியர்; ஊடகவியலாளர்,
குருநாகல்.

வடமேல் மாகாணம் இலங்கையின் வரலாற்றுடன் தொடர்புடையது. விஜயன் குவேனியைச் சந்தித்த இடம் வடமேல் மாகாணப் பகுதியென மகாவம்சம் கூறுகின்றது. அதுமட்டுமல்லாமல் பிற்காலத்தில் பாண்டிய மன்னர்களின் பரிபாலனத்தின் கீழ் இப்பகுதி வளமாகியமை மட்டுமல்லாது பண்டைய இலங்கையின் மேற்குத் திசை அமைந்த முன்னேஸ்வரம் இங்கு சைவம் மேலோங்கி இருந்தமைக்கு இன்னும் சான்றாக உள்ளது.

வெள்ளையர்கள் இலங்கை முழுவதையும் 1815 இன் பின் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து வடமேல் மாகாணத் தலைநகராக குருநாகல் மாநகரை தெரிவு செய்தனர்.

அனுராதபுரம், பொலநறுவை, தலைநகர்களாக இருந்த பின் வரலாற்றில் உருவாகிய மூன்று இராசதானிகளான குருநாகல், யாப்பஹுவ, தம்பதெனிய குருநாகல் மாவட்டத்தில் அமைந்திருப்பது அதன் பெருமைக்கு புகழைச் சேர்க்கின்றது. குருநாகல் 44 ஆண்டுகள் பண்டைய இலங்கையின் தலைநகராக விளங்கியுள்ளது. ஹஸ்திசைவபுரம் என்ற பெயரில் வரலாற்றிலே இடம் பெற்றுள்ள குருநாகலில் சைவம் சிறப்புற்றிருந்தது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

பண்டைய குருநாகலில் பலருக்கு ''சிவ'' எனும் பெயர் இருந்துள்ளமை பலராலும் அறியப்பட்ட தொன்று. இங்கு உள்ள ஆமை உருவில் அமைந்த பாறைக் குன்றில் சிவனொளிபாத அடிச்சுவட்டைப் போன்றதொரு அமைப்பு காணப்படுவது சைவம் இங்கு சிறந்து விளங்கியமை புலனாகின்றது.

யாப்பஹுவ இராசதானியாக இருந்த காலப்பகுதியில் மாளிகைக்கு அண்மையில் சிவாலயம் ஒன்று இருந்தமைக்கு இன்று அது சிதைவடைந்த நிலையில் காணப்படுவது சான்றாக உள்ளது. அப்போதைய மன்னனின் மனைவியர் பலர் தென்னிந்தியப் பெண்கள். அவர்கள் தங்கள் உறவினர்களுடன் வந்தனர். எனவே இங்கு சைவம் சிறந்தோங்கியது. இன்றும் அங்கு தமிழ்ப் பெயர்கள் காணப்படுகின்றது. அத்துடன் இங்கு அகழ்வாராய்ச்சிகளின்போது கிடைத்த தகவல்களின் மூலம் மன்னன் தன் தமிழ் சேனாதிபதிகளுக்கு வழங்கிய அன்பளிப்பு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குருநாகலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த நான்காம் பராக்கிரமபாகு காலத்தில் பண்டைய தமிழ் நூலான ''சரசோதிமாலை'' இங்கு வைத்தே எழுதப்பட்டது. அத்துடன் இன்றைய குருநாகல் மாவட்டத்தின் ஹெட்டிப்பொலை எனக் குறிப்பிடப்படும் பகுதி பண்டைய வரலாற்றில் பாண்டுவாசுபுரம் (பண்டுவஸ்நுவர) எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. இங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில சிவமுத்திரையும், பண்டைய தமிழ் எழுத்துகளும் காணப்படுவது சைவம் செழித்தமைக்கு சான்று பகர்கின்றது.

வரலாற்றுப் புகழ்மிக்க குருநாகல் இராமாயணத்துடனும் தொடர்புபட்டது. இங்கு பிரதான சந்தியாக திகழும் வாரியப்பொலை நகரில் இராவணனின் புஷ்பக விமானம் நிறுத்து வைக்கப்பட்டிருந்த இடமாகையால் இந்தப் பெயர் உருவாகியது எனக் கூறப்படுகின்றது. (வா-காற்று, ரிய-ஊர்தி, பொல-நிறுத்துமிடம்.) காற்றில் செல்லும் ஊர்தி நிறுத்துமிடம் என்பதையே வாரியப்பொலை எனும் சிங்கள நாமத்தின் தமிழ் வடிவமாகும்.

போர்க்களத்தில் அடிபட்டு வீழ்ந்திருந்த இலக்குவன் உயிர் காக்க, அனுமன் சஞ்ஜீவி மலையை பெயர்த்துக்கொண்டு வருகையில் சிறு பகுதி இங்கு வீழ்ந்ததாகவும், அதுவே இன்று இங்கு காணப்படும் ''தொலுகந்தை" எனவும் கூறப்படுகின்றது. இன்று இங்கு அரிய பல மூலிகைகள் காணப்படுவது இக்கதையில் உண்மை உண்டு என்பதை உணர்த்தி நிற்கின்றது.

சிவ பக்தனான இராவணனுடன் தொடர்புடையது என்பதால் இப்பகுதியில் சைவம் சிறப்பாக காணப்பட்டமைக்கு எவ்வித ஐயமுமில்லை.

இங்கு உள்ள கண்ணகி கோவிலில் ஆண்டுதோறும் விழா நடைபெறுவது வழக்கம். பண்டைய மன்னர்கள் இந்த விழாவை இங்கு ஆரம்பித்து வைத்துள்ளனர். கற்பிற் சிறந்த கண்ணகி வழிபாடும் இங்கு சிறப்புற்று விளங்கியமையால் சைவம் ஒரு குறையும் இல்லாமல் அக்காலத்தில் வளர்ந்துள்ளது.

பண்டைய இலங்கையின் குருநாகல் பகுதியில் சைவம் செழிப்புற்று இருந்தமைக்கு இன்னொரு சான்று கண்டி இராச்சியத்தின் கீழ் அது இருந்தமை. இலங்கையின் மன்னராட்சி முடிவுக்கு வந்த 1815 காலப்பகுதியில் கண்டியை ஆண்ட மன்னன் நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த சைவன் என்பது யாமறிந்த உண்மை. அவனுடைய உறவினர்கள் எல்லோரும் சைவமக்களே. மன்னன் கைது செய்யப்பட்ட பின் அவர்களுடைய உறவினர்கள் குருநாகல் பகுதியில் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். அவர்கள் சைவத்திற்கு செய்த சேவைகள் அளப்பரியன. குருநாகல் நீர்கொழும்பு வீதியில் அவர்களால் உருவாக்கப்பட்ட அம்மன் ஆலயம் இன்றும் காணப்படுவது குருநாகலில் சைவம் செழிப்புற்றிருந்தமைக்கு சான்றாக விளங்குகின்றது. அவர்களுடைய பரம்பரையினர் இன்றும் சைவமரபை போற்றி வாழ்பவர்களாக இருப்பது சைவத்தின்பால் அவர்கள் கொண்ட பற்றுதலைக் காட்டுகின்றது.

ஐரோப்பியர் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளில் தங்கள் மதத்தை பரப்பிச் சென்றனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தருக்கு கட்டுப்படாத குருநாகல் 1815இன் பின் ஆங்கிலேயர் வசமாகியது. அவர்கள் தங்கள் மதத்தை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் பலரை மதம் மாற்றினார். ஆனால் குருநாகல் வாழ் சைவமக்கள் மதம் மாறவில்லை. அதனாலேயே சைவம் இன்னும் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் பரம்பரையினர் இங்கு சைவத்திற்கு பணியாற்றியதைத் தொடர்ந்து குருநாகல் பகுதியில் இப்பணியை மேற்கொண்டவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது இலங்கைக்கு வியாபார நோக்கோடு வந்த நாட்டுக்கோட்டை செட்டிமார்களே! தாங்கள் சென்ற இடமெல்லாம் சைவப்பணிபுரிந்த செட்டிமார்கள் குருநாகல் மாநகரிலும் அதைச் செய்யப் பின்னிற்கவில்லை.

குருநாகல் நகரில் குமரக் கடவுளுக்கு குன்றின் மேல் கோவிலெழுப்பிய அவர்கள் தொடர்ந்து வருமானம் கருதி அயலில் உள்ள காணிகள் மூலம் கிடைப்பதற்கும் வழியமைத்தனர். அத்துடன் பிரசாவுரிமைச் சட்டம் காரணமாக அவர்கள் வெளியேறும் வரை தொடர்ந்து சைவப்பணி புரிந்து வந்தனர். தாங்கள் செல்கையில் உள்ளூர் வியாபாரிகளிடம் பரிபாலனத்தை கையளித்துச் சென்ற அவர்கள் நோக்கம் தற்காலத்தில் ஈடேறவில்லை என்பதும் கவலைக்குரிய விடயம். காரணம் ஆலயங்களையும் வர்த்தக நிலையங்களாக நினைத்துச் சிலர் செயற்பட்டமை ஆகும்.

கால மாற்றம் காரணமாகவும், செட்டிமார்களின் பின் சிவப்பணி புரிந்தவர்கள் ஒழுங்காக அதைச் செய்யாத காரணத்தாலும் ஆலயத்திற்கு சொந்தமான பல சொத்துக்கள் இன்று பறிபோயுள்ளமை கவலைக்குரிய விடயம் என்றாலும் உண்மையான சைவ மக்கள் இங்கு வாழ்வதால் சைவம் அழியாமல் உள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் சைவசமயத்தைப் பற்றி ஆராய்கையில் மறக்க முடியாத ஒரு பிரிவினர் தோட்டத் தொழிலாளர்கள். அவர்கள் மாவத்தகம, தொடங்கஸ்லந்த, பொல்கஹவெல போன்ற

இடங்களில் உள்ள பெருந்தோட்டங்களில் ஆலயங்களை அமைத்து இன்றுவரை பக்தி சிரத்தையுடன் சைவத்தைப் போற்றி வருகின்றனர். தங்கள் வசதிக்கு ஏற்றவாறு வருடாவருடம் திருவிழாக்களையும், விசேட தினங்களையும் சிறப்பாக அவர்கள் நடத்தி வருவது பாராட்டத்தக்க விடயம்.

பிற்காலத்தில் வாணிபச் செட்டிமார்களாலும், ஆசாரிமார்களினாலும் அமைக்கப்பட்ட ஆலயங்கள் இரண்டு இன்றும் குருநாகல் நகரில் சைவம் வளரும் இடமாக காணப்படுகிறது. அத்துடன் இங்குள்ள தமிழ் பாடசாலைகளில் முக்கிய தினங்களில் நந்திக் கொடியேற்றும் பண்டைய சைவ பாரம்பரியம் பேணப்பட்டு, புத்துயிரளிக்கப்பட்டுள்ளமை மலையகத்தின் அடிவாரமான குருநாகலில் சைவம் மேன்மை நிலையில் உள்ளமைக்குச் சான்றாகும்.

உலக யாத்திரிகரான இபுன் பதூதா புத்தளத்தில் இருந்து குருநாகல் ஊடாகவே நாட்டின் பல பாகங்களுக்கும் சென்றுள்ளார். அவர் எழுதிய குறிப்புகளிலும் இங்கு சைவ ஆலயங்கள் இருந்தமைக்கு சான்றுகள் உள. அத்துடன் ஆங்கிலேயர் காலப்பகுதியில் இங்கு நீதிவானாக பணிபுரிந்த சேர். பொன்னம்பலம் அருணாசலம் தனது ஆங்கிலேய நண்பர்களுக்கு சைவத்தினை போதிக்கும் இடமாகவும், தனது மனையை பயன்படுத்தியமைக்கு சான்றுகள் உள. சைவப் பரம்பரையில் உதித்த சேர். பொன். அருணாசலம் போன்றவர்களும் இங்கு சைவம் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நினைக்கும் போது நாமனைவரும் பெருமைப்படாமல் இருக்க முடியாது. அத்துடன் சைவத்திற்காக இப்பகுதியில் சைவ மகா சபை ஆற்றிய பணிகளையும் மறக்கமுடியாது. முக்கியமாக சைவச் சிறார்களின் நன்மை கருதி பாடசாலை ஒன்றையும், விநாயகர் ஆலயம் ஒன்றையும் அமைத்தமை அக்காலத்தில் (1969) மேற்கொள்ளப்பட்ட பாரிய பணியாகும்.

குருநாகல் மாநகர எல்லைக்குள் சைவ ஆலயங்கள் நான்கும், குளியாப்பிட்டி, மாவத்தகம, பொல்கஹவெல, மற்றும் பல தோட்டங்களிலும் ஆலயங்கள் பல இன்னும் சிறப்பாக சைவம் வளர்க்கும் பணியை செய்து வருகின்றன.

இம்மாவட்டத்தில் ஏழு கோறளைகளில் ஒன்றின் பெயர் ''தெமல ஹத்பத்துவ". (தமிழ் கோறளை). அத்துடன் எல்லாள மன்னன் வழிவந்தவர்களும் மெல்சிரிபுர பகுதியில் இன்னும் வசித்து வருவதுடன் ஒரு கோவிலையும் பரிபாலிக்கின்றார் என்பது பலருக்கும் தெரியாத உண்மை.

எனவே பண்டுதொட்டு இன்றுவரை குருநாகலில் சைவம் பல இடையூறுகளுக்கு மத்தியிலும் மேன்மை பெற்று விளங்குகின்றது. இப்பகுதியில் சைவம் பல வழிகளிலும் வளர எல்லாம்வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக.

**புண்ணியம்**
செய்கையின் அநுபவம்

**துக்கம்**
அறியாமையில் நீ நினைக்கின்ற நினைப்பு

**ஆனந்தம்**
திறமையின்மையால் உனக்கு ஏற்படுகின்ற சோர்வு

**மரணம்**
உன்னையே மதிக்காத ஒரு செயல்

**ஞானி**
இவரிடத்தில் கிடைப்பதே இலாபம்.

**பிறவி**
இறைவனை அறிகின்ற நிலை

# சிலாபநகரில் கிறீஸ்தவர்களினதும் இந்துக்களினதும், பரஸ்பர ஒற்றுமைப் போக்கு

- திருமதி வயலெற் சந்திரசேகரம்,
ஆசிரியை,
புனித பேணடெட் கல்லூரி,
சிலாபம்.

சிலாபப் பிரதேசத்தில் அன்றுதொட்டு இன்றுவரை மக்கள் சாதி, மத, இன, மொழி பேதங்களின்றி பரஸ்பர ஒற்றுமையுடன் வாழ்வது கண்கூடு. சிலாபத்தில் சிங்கள மொழிபேசும் கிறிஸ்தவர்கள் பெரும் பான்மையாக வாழ்கின்றார்கள். ஆங்காங்கே, கிறீஸ்தவ தேவாலயங்களும் காணப்படுகின்றன. அதே வேளையில், முன்னேஸ்வரப் புனிதத் தலத்தில் சிவபெருமான் கோவிலும், காளி கோவிலும் காணப் படுவதுடன் உடப்பு என்னும் கிராமத்தில் திரௌபதை அம்மன் கோவிலும், முந்தற் கிராமத்திலும் திரௌபதை அம்மன் கோவிலும், மதுரங்குளிக் கிராமத்தில் முருகன் கோவிலும் பக்தர்கள் ஈர்க்கும் கோவில்களாகத் துலங்குகின்றன. மாதம்பேயில் காணப்படும் ஐயனார் கோவிலும், ராஜகதமுவ ஐயனார் கோவிலும் பயணிகளின் பாதுகாப்பு மையமாகத் துலங்குகின்றது. இங்கு இந்துக்களும், கிறீஸ்தவர்களும் தத்தமது வாகனங்களை நிறுத்திவிட்டு மரியாதையுடன் காணிக்கைகளைச் செலுத்திய பின்பே மீண்டும் புறப்படுகின்றனர்.

கிறீஸ்தவர்களின் புனிதத் தலமான தலவில புனித அன்னம்மாள் கோவிற் திருநாட்களில், கிறீஸ்தவர்களுடன் இந்துக்களும் சரிசமமாக இணைந்து தமது ஆராதனைகளைச் செலுத்தி வருவதை நோக்கும் போது, இவ்விரு மதத்தவர்களும், எந்தவித வேறுபாடுகளும் இன்றி இணைவதைக் காணலாம். அடுத்து, முன்னேஸ்வரத் திருத்தல விழா ஆரம்பமாகி முடியும் வரை இந்துக்கள் மட்டுமல்ல கிறீஸ்தவர் களும் சரமாரியாக இணைந்து விழாவைக் கௌரவித்து பக்தியுடன் கலந்து கொள்ளும் காட்சி மனதைக் கவரும் காட்சிதான். அத்தோடு, வெள்ளிக்கிழமைகள் தோறும், முன்னேஸ்வரத்தில் அமைந்துள்ள சிவபெருமான் கோவிலுக்கும், காளி கோவிலுக்கும் இந்துக்களும், கிறீஸ்தவர்களும் பக்திததும்பும் உள்ளத்துடன் முகத்திற் புன்னகை ததும்ப பழத்தட்டுக்களுடனும் மலர்மாலைகளுடனும் முண்டி அடித்துக் கொண்டு இறை அருள் வேண்டி இஸ்டம்போல் இறைபாதம் தொழுது நிக்கும் காட்சி இவ்விருசாராரின் வேற்றுமை அற்ற தூய பரஸ்பர ஒற்றுமையை பறைசாற்றி நிற்கிறது. தேவாலய கும்பாபிஷேகம், திருவிழா போன்ற விசேடகாலங்களில் சகல இன, மத மக்களும் அணிதிரண்டு ஆரவாரத்துடன் பத்திமல்க, பரமேஸ்வரனை ஆராதிப்பதை அடிக்கடி காணும்கால் அவர்களின் புரிந்துணர்வும் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கும் துல்லியமாகத் துலங்குவதை உணரலாம்.

அதேபோன்று கோட்டப்பிட்டி கிராமத்தில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு இந்துக்கள் செவ்வாய்க்கிழமை தோறும் மெழுகுவர்த்திகளோடு, மெய்உருகி, கண்ணீர்மல்க இறைவனை யாசிக்கும் காட்சி எம்மையே மெய்மறக்கச் செய்துவிடுகின்றது. தெதுறு ஓயாவில் அமைந்துள்ள புனித யூதாததேயூ தேவாலயத்தில் வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை தோறும் இந்துக்களும் கிறீஸ்தவர்களும் தமது நோய்களைக் குணமாக்கவும் தமது துயரங்களை இறைபாதம் சமர்ப்பித்து விமோசனம் தேடவும், பக்தியுடன் யாசிக்கும் காட்சி இவ்விரு சாராரும் ஒவ்வொரு மதத்தையும் எவ்வாறு நேசிக்கிறார்கள் என்பதற்கு சிறந்த ஆதாரம்.

2001 மார்ச் 16ம் திகதி மருதமடு மாதா, சிலாபத்தின் மத்தியில் அமைந்துள்ள. பிரதான மேற்றிராசனக் கோவிலான புனித கார்மேல்மாதா கோவிலுக்கு எழுந்தருளிக் காட்சி தந்தபோது கிறீஸ்தவர்களும் இந்துக்களும் இணைந்து மருத மடுமாதாவை வரவேற்று இரவுபகலாக ஆராதனை

செய்ததும், வரிசையில் நின்று கண்ணீர்மல்க வேண்டி, முத்தி செய்ததும் இன்றும் மறக்கமுடியாத ஒரு செவ்வையான அனுபவ அர்த்தங்களே. திருநீறு இட்ட நெற்றியுடன் இந்துக்களும் உருகி உருகி அன்னையின் அருளை யாசித்த போது எந்தவொரு மதபேதமும் கடுகளவேனும் காணப்படவில்லை.

அதுமட்டுமல்ல அனேகமாக இந்துக்களும் கிறீஸ்தவர்களும் கலப்புத் திருமணங்களைச் செய்துள்ளார்கள். அனேக கலப்புத் திருமணங்கள், மதபேதமின்றி மனிதத்தை வாழவைத்து வாழ்வது இவ்விலங்கைத் தீவிற்கே பெருமையைத் தேடித்தரும் ஒரு கௌரவத் துலங்கலாகும். மதங்களால் மனிதத்தை கூறுபோடும் இவ்வையகத்தில் சிலாபநகர மக்கள் மதபேதமின்றி மனம் ஒன்றித்து கரங்கள் இணைத்து இன்பமாக, மதவழிபாடுகளில் இணைவது இப்பிரதேச மக்களின் மனப்பாங்கையும் மன எழுச்சியையும் செப்பநிடும் செவ்வையான செயற்பாடாகத் துலங்குகின்றது.

நாம் எல்லாம் மனிதர்கள்" என்று நேயதத்துவத்தின் மேல் இப்பிரதேச மக்களின் இறை வழிபாடு அத்திவாரமிடப்பட்டுள்ளது.

இந்துக்களும் கிறீஸ்தவர்களும் ஒரே குரலாய், ஒரே இனமாய் சகல புனித கோவில்களிலும் சங்கமமாகி சம ஆராதனையிற் கலந்து கொண்டு களிப்புறுகிறார்கள். வழிபாட்டுத் தலங்களின் கதவுகள் மதபேதமின்றி பக்தர்களுக்காக சதா திறந்துவிடப்படுகிறன. மனித நேயம் இங்கு மலையாகக் காட்சிதர வழிபாடு மலையிலிட்ட தீபமாக ஒளி வீசிப் பிரகாசிக்கிறது சிலாபவலயத்தில் இந்துவும் கிறீஸ்தவனும் ஒரே குடையின் கீழ் மதவழிபாட்டை வழிஎடுத்துச் செல்வது பிரமிக்கத்தக்க ஒரு காட்சிதான்.

சமூக வாழ்விலும் அயலானை நேசிக்கும் உதவிபுரியும் பண்புகள், பக்கத்து வீடுகள் மட்டுமன்றி தெருவில் சந்திக்கும் வழிப்போக்கரிடமும்கூட காணப்படும் புன்முறுவல் கலந்த சந்திப்புகள் உளளத்தை ஈர்க்கின்றன

மேற்குக் கடலோரமாக அமைந்துள்ள பாரம்பரிய கிராமங்கள் சங்கிலிப்பின்னல் போல இந்து, கத்தோலிக்கம் என்ற மத அடிப்படையிலும் பௌத்த மதத்தவர் ஆங்காங்கே பன்சாலைகள் அமைந்துள்ள விதத்தை நோக்கும்போது இன்று நவீன யுகத்தவர் என்று வெறும் வரட்டுகௌரவம் பூர்வீக அந்த மக்களின் வாழ்வில் அமைந்திருந்த வளத்துக்கு இன்று ஏங்கித்தவிக்கும் மற்றைய மாவட்டங்களுக்கு புத்தள மாவட்டம் முன்மாதிரி என்றே கூறவேண்டும். பாவலரும் நாவலரும் பாடிமகிழ்ந்த இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களும், போதிமாதவனின் போதனையில் வாழும் பௌத்தர்களும் எமது பிரதேச வளம் என்றே கூறவேண்டும்.

விளையாட்டுத்திடலிலும் விஞ்ஞான கூடத்திலும் ஒன்றாகவே வளர்ந்து மலர்ந்துவரும் இந்த நிலை நீடுழி வாழவேண்டும்.

வாழ்க இவர்கள் புரிந்துணர்வு
வளர்க இவர்கள் ஒற்றுமை.



# கட்டிட கலையில் ஓர் கண்ணோட்டம்

- அருட்கலைச் சக்கரவர்த்தி, கலாஜோதி
நவாலியூர் தி. சந்திரன்

ஆதி மனிதன் தடிகளாலும் புற்களாலும் மண்ணினாலும் அமைத்த குடிசை முதல் வேலைப்பாடுகள் நிறைந்த கூட கோபுரங்கள் ஈறாக ஏற்பட்டுள்ள கட்டிடமுன்னேற்றம் மனிதனின் அயராத கலையார்வத்தை எடுத்துக்காட்டுகின்றது.

கட்டிடங்களின் தோற்றமும் அவற்றின் அலங்கரிப்பும் அவைகளை நிர்மாணிக்கும் சாஸ்திரங்களும் நாட்டிற்கு நாடு மதத்திற்கு மதம் காலத்திற்கு காலம் வேறுபட்ட கட்டிட கலையாக உள்ளது.

இவ்வகை தோற்ற வேறுபாடுகளை கட்டிடக்கலை சரித்திர ஆசிரியர்கள் நுணுக்கமாக ஆராய்ந்து பாகுபாடுகள் செய்துள்ளனர். இவற்றுள் இந்திய கட்டிட கலையை, இந்து ஆரியக் கட்டிடக்கலை, திராவிட கட்டிடக்கலை, சாளுக்கிய கட்டிடக்கலை, இஸ்லாமிய கட்டிடக்கலை, பௌத்த கட்டிடக்கலை என வகைப்படுத்தியுள்ளனர்.

தமிழர்களின் கலை திராவிடக்கலை எனப் பொதுவில் கூறப்படுகின்றது. இந்தியாவில் தமிழர்களின் கட்டிடக்கலை சோழ, பாண்டிய விஜயநகர் மன்னர்களாலும் மதுரை நாயக்கர்களாலும் வளர்க்கப்பட்டு வந்தது. இதன் விளைவாக சிதம்பரம், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், மகாவலிபுரம், வேலுர், மதுரை ஆகிய இடங்களில் இன்றும் வானளவில் கோயில் கோபுரங்களையும், அலங்கார மண்டபங்களையும் காணலாம்.

தமிழ் மன்னர்கள் கலைப்பிரியர்கள். இவர்கள் பிரமாண்டமான கலை சின்னங்களாக கோவில்களை கட்டி அவற்றினை அலங்கரிக்க ஆதி அற்புத உயிர் சிற்பங்களையும், சுவர் ஓவியங்களையும், தீட்டுவித்தனர். கட்டிடக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை ஆகிய முக்கலைகளையும் ஒன்று சேர்த்து இறைவனின் இருப்பிடமாக்கினர்.

இலங்கை தமிழர் பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவிலிருந்து வந்து குடியேறினர். அவர்களின் மொழி, பண்பு, மதம், கலையார்வம் இந்தியத் தமிழர்களை ஒத்ததாகும் ஆகவே அவர்கள கட்டிடக்கலையும் திராவிடக்கலைக்குட்பட்டதே,

இலங்கையின் தமிழ்ப் பிரதேசமாகிய யாழ்ப்பாணத்தில் பல கிராமங்களில் வானளவு கோபுரங்களும் கோயில்களும் காட்சியளிக்கின்றன. இக்கோவில்கள் இந்தியாவில் இருந்து வரவளைக்கப்பட்ட தமிழ் சிறபக் கட்டிட நிபுணர்களாலும், யாழ்ப்பாண சிற்பிகளாலும் சேர்ந்து கட்டப்பட்டவை. ஆதலால், இப் புராதன கட்டிடங்களின் திராவிடக்கலை வடிவங்களையும் சிற்பங்களையும் எல்லா கட்டிடங்களிலும் காணமுடிகின்றது.

இதுபோன்று புத்தளம் நகரில் பல கோவில்களை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றேன். இதில் குடமுழுக்கு காணும் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் கற்பக்கிரகத்துக்கு ஏற்ப மகாமண்டபம், திருத்த மண்டபம், தரிசன மண்டபம், பரிவாரமூர்த்திகளுக்கான கட்டடங்கள் போன்றவற்றை சிற்ப சாஸ்திர முறைக்கும், இந்தியாவின் திராவிட கலைக்கும் ஏற்ற வகையில் அமைத்து கொடுத்துள்ளேன் என்பதை தெரிவிப்பதில் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

■

# ஆலயங்களும் அறநெறிப் பாடசாலைகளும்

- பா. மதுரநாயகம்,
பொருளாளர், இந்து மகாசபை,
புத்தளம்.

ஈழத்திருநாட்டிலே வாழ்கின்ற தமிழ் மக்களின் வாழ்வுடன் சமய உணர்வுகளும், நம்பிக்கைகளும், பின்னிப்பிணைந்துள்ளன. இதில் சைவப் பெருங்குடிமக்களின் இருதயமாக, மூச்சாக, உயிர்ப்பாக அமைந்தவை ஆலயமே.

ஆன்மா இறைவனை நாடி தமது சுக துக்கங்களை பகிர்ந்து கொள்ளும் இடமாகவும் திகழ்பவை ஆலயங்களே. ஆலயங்களை நாடாமல் நாமும் சைவ சமயிகள் என்று பேசுபவர்கள் இறைவனோடு சம்பந்தமே இல்லாமல் வாழும் தீண்டத்தகாதவர்கள் ஆவர்.

ஆலயங்களில் நித்திய பூஜைகள், அபிஷேகங்கள், உற்சவங்கள் ஆகியன எவ்வளவு முக்கியமோ அதைவிட உயர்ந்த சேவையாகிய மக்களுக்கும் மனிதகுலத்துக்கும் சமூக நோக்கோடு சேவை செய்தல் இன்றியமையாததாகும் இதனையே அப்பர் சுவாமிகளும்,

*''என் கடன் பணி செய்து கிடப்பதே''*

என்று பாடியுள்ளார்.

ஆலய அர்ச்சகர்களும், ஆலய நிர்வாகிகளும் முழுமூச்சோடு இறைபணியே தம்பணி என சேவையாற்றுகின்றார்கள். பொது நோக்கோடு செய்கின்ற சேவையில்தான் ஆலயத்தின் மீதும் இறைவன் மீதும் மக்கள் கவரப்படுவார்கள். குறித்த காலத்தில், குறித்த நேரத்தில் ஆலய பூஜைகளையும், அபிஷேகங்களையும் ஆரம்பிப்பதன் மூலம் மக்களினது வரவை ஆலயத்தில் அதிகரிக்கலாம். தனி மனிதனுக்காக ஆலய பூஜைகளை, அபிஷேகங்களை காலம் தாழ்த்துவது மகாகுற்றமாகும்.

பொருளாதார வசதியில் மேம்பட்ட ஆலயங்கள், சிறு, சிறு ஆலயங்களின் புனருத்தாபனம் மற்றும் தேவையின் பொருட்டு உதவுவதற்கு முன்வர வேண்டும். இதைவிட ஏழைகட்கு கல்வி வசதி, அகதிகளை பராமரித்தல், வைத்திய வசதிகள் போன்ற சமூகப் பணிகளோடு, சமய வகுப்புக்கள், சங்கீத நடன வகுப்புக்கள், அறநெறிப் பாடசாலைகள் போன்ற கல்வி சார்பணிகளையும் செய்ய முன்வரல் வேண்டும்.

கல்வி சார் பணிகளில் ஒன்றாகிய அறநெறிப்பாடசாலைகள் இன்று ஈழத்திருநாட்டின் அநேக ஆலயங்களிலும் சில தனியான இடங்களிலும் இயங்கி வருகின்றன.

இறைவனை வழிபடுவதற்கு அமைதியான இடமாக எப்படி ஆலயம் திகழ்கின்றதோ அதேபோல் அறநெறிக்கல்வியை புகட்டுவதற்கும் ஆலயமே சிறந்த கலாசாலையாகும்.

அறநெறிக் கல்வியானது சிறு வயதுமுதல் புகட்டப்படவேண்டியது முக்கியமாகும். பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாடவிதானத்திற்கு மேலதிகமாக சமய அறிவையும் நற்பண்புகளையும் ஒழுக்கத்தையும் இளஞ்சிறார்களிடத்தில் வளர்க்கின்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டவையே அறநெறிப்பாடசாலைகளாகும். இந்து சமயப்பணியை ஆலயங்களும் இந்து சமய நிறுவனங்களும் நடைமுறைப்படுத்துவது போல் இந்து சமய கலாசாரத் திணைக்களம் தனது செயற்பாடாக அறநெறிப் பாடசாலைகளின் கல்வி நெறியினை முன்னெடுத்துச் செல்கின்றது.

வடமேல் மாகாணத்தை உற்று நோக்கும்போது இருபத்தி ஏழு ஆலயங்களும் இருபத்தி நான்கு அறநெறிப்பாடசாலைகளுமே பதிவு செய்யப்பட்டுள்ளதாக இந்து கலாசார திணைக்களத்தின் தகவல் கூறுகின்றது. பொது நோக்கோடு இயங்குகின்ற எல்லா சமய நிறுவனங்களும் பதிவு செய்யப்படுதல் இன்றியமையாததாகும். நாட்டில் துரதிஸ்டவசமாக ஏற்படுகின்ற இனக் குழப்பங்களில் பாதிக்கப்படுவது முதலில் பொதுச் சொத்துக்களே. இவை முக்கியமாக பாதுகாக்கப்பட வேண்டிய அவசியமாகும்.

அறநெறிப் பாடசாலைகள் சமயபாடம் மட்டுமன்றி எமது கலை கலாசாரத்தோடு இணைந்த கலைகளையும் பயில்வதற்கு ஊக்கமளிக்கின்றது. கூச்சசுபாமின்றி மேடைகளில் பேசுவதற்கும் நடிப்பதற்கும் ஒரு உந்து சக்தியாக திகழ்கின்றது.

இதன்மூலம் சமய, ஆன்மீக பேச்சாளர்களை உருவாக்குவதில் அறநெறிப்பாடசாலைகள் பங்களிப்பு செய்கின்றன.

எமது மாவட்டத்தை பொறுத்தவரை அறநெறிப் பாடசாலைகளை ஆலயங்கள் தோறும் உருவாக்குவதில் புத்தளம் இந்து மகாசபையானது அளப்பரிய சேவையினை ஆற்றிவருகின்றது. இதற்கு உறுதுணையாக நகரைச் சூழவுள்ள அறநெறிப் பாடசாலையின் தலைவர்கள் பங்களிப்பு செய்து வருகின்றனர்.

ஆலயங்கள் தோறும் பூஜை வேளைகளில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மூலம் பஜனை நிகழ்ச்சிகளையும் ஆன்மீக உரைகளையும் ஒழுங்கு செய்வதற்கு ஆலய நிர்வாகத்தினர் முன்வரல் வேண்டும். இதன்மூலம் ஆலயங்களும் அறநெறிப் பாடசாலைகளும் இணைந்து சமயப்பணி ஆற்ற முடியும் எவ்வித பலனும் எதிர்பாராது சமயப்பணியாற்றுகின்ற ஆலய நிர்வாகிகளும், அறநெறி ஆசிரியர்களும் என்றென்றும் மதிக்கப்படவேண்டியவர்களே.

எனவே சமயப்பணியோடு தியாகமும் சேவையும் கொள்கையாகக் கொண்டு ஆன்மீகப் பணி செய்கின்ற ஆலயங்களையும், அறநெறிப் பாடசாலைகளையும் வளர்க்கின்ற பணியில் நாமும் உறுதியுடன் செயல்படுவோமாக.

வாழ்க ஆலயங்களும் அறநெறிப் பாடசாலைகளும்
வளர்க அதன் பணிகள்.



■

# Why eminent place for God Vinayaga?

T. Pathmanathan,
*Retired Administrative Officer,*
*Irrigation Department, Puttalam.*

Ganesa is the embodiment of the Prime Sound (Nada) 'OM'. No auspicious event is commenced by Hindus without first paying homage to Him. He is the God that removes all obstacles to any undertaking-material, intellectual or spiritual and so claims the first of worship. Omkara or Nada Brahman is the unitive embodiment of God and Jeeva, says St. Thirumular. These and other related philosophical ideas behind worship of God Ganesa are clearly brought out by so many learned scholars among Hindus.

## OM Sri Ganesaya Namaha Mantara

The above Ganesa's mantara can be chanted at all times and places by all sorts of people in all walks of life. It is the remedy for all restlessness and evil thoughts. It is the mantara for the commencement of meditations and for any religious ritual in the home, temples or public places. It is invoked by all who launch on new enterprises or who start a new year or perform any auspicious functions in the house hold. Therefore, it is very clear why so much of eminent place is given to God Ganesa. Hindus begin all works spiritual or secular with the utterance of the Ganesa's mantara. If one chants this mantara with faith and devotion, his intelligence will be lit up with luminous knowledge of wisdom.

Lord Ganesa is perhaps the most complex deity among the Hindu Gods. He is Mangalamoorthy (Auspicious visage) and Vigneswara (Lord of trouble), simultaneously. He gives blessings and at the same time creates hurdles. He appears to be the heaviest among all the Gods but has a tiny mouse as his favourite vehicle. Some scholars call him as one of the most efficacious or Powerful God who readily grants desires of his devotees.

Lord Shiva and Parvati - the eternal espouses had a son known as Lord Ganesh or Lord Ganapati. The very name makes him the head of a group; 'Gana' means a group. There are many legends illustrate or woven into the birth story of Lord Ganesh. Lord Ganesh birth gives different legends or stories of beliefs. One of the very popular one says that one night when Parvati was sleeping on her soft and decorated coach in her palace in 'Kailash' Lord Vishnu appeared, clad as a priest, apparently old and feeble from starvation. Then, he begged for food. Lord Shiva and Parvati greeted him kindly and inquired him what he desired. He told them that he would like to become their son and saying so that priest took the form of a tiny baby. That child quickly lay on Parvati's bed, staring at the ceiling and waving his hand and feet happily like the new born children do. So perfect was that boy's physique that it was sheer delight to look at him. So, getting Vishnu as their tiny son, Lord Shiva and Parvati were very much delighted. When receiving this message, all the Gods and Goddesses encircle the baby to give their blessings Vishnu gave him the blessing of knowledge; Brahma of fame and worship, Lord Dharma of rightiousness and mercy, Lord Shiva of generosity, intelligence, peace and self control. Goddess Lakshmi promised to ever dwell at the place where Lord Ganesh is adored. Goddess Saraswathi gave him power of speech memory and eloquence and Savitiri gave him all wisdom. We can very well understand from this why the worshipping of Lord Ganesha becomes very important or plays an important place among Hindus. Lord Ganesh is the most favoured Lord of the Hindu Pantheon and no worship is deemed to be of any use unless he is worshipped initially.

The Lord Ganesh has several names but twelve names are very popular among them. The names are mentioned here with an explanatory note for their meanings:

1) *Ganapati or Ganaadipati or Ganesh:-*
All the three names mean Lord or Master of a group. Gana literally means "a flock" multitude, group, troop, collection. In this context, it means a body of followers or attendants, or demigods who were Lord Shiva's henchmen. Ganesh means head of such group. Since he is always to be adored first among all gods for worship, he can be considered to be the head of all the Gods.

2) *Umaputra:-*
meaning the son of Uma or Parvati.

3) *Heramba:-*
An epithet for Ganesh, it also means mother's pet.

4) *Vinayak:-*
It means an especial leader who has all the special qualities.

5) *Gajaanana:-*
meaning elephant faced or having face of an elephant.

6) *Sarva-Siddhanta:-*
meaning capable of making everything possible or he who is capable of providing every siddhi (thoroughly proficient) to his worshippers.

7) *Ekadanta:-*
meaning one tusked. This epithet of Ganesh belies the legend saying that his was originally a two tusked elephant face and his one tusk was broken in his fight with Parasuram.

8) *Lambodara:-*
meaning one with a long or huge belly.

9) *Musika Vaahan:-*
meaning having mouse as his vehicle.

10) *Vakratunda:-*
one who has an askew proboscis (not straight flexible elephant trunk)

11) *Vigneshwar:-*
The Lord of all obstacles.

12) *Krishnapangaksha:-*
means one who has black and (Krishnapingaaksha) yellowish brown eyes.

As mentioned earlier, although there are more names, but the above names are very popular among the devotees. In fact, all these names, signify the most prominent features of the body of the God Ganesha.

Lord Ganesha is one of the most favourite deities of India, Sri Lanka, Malaysia, Singapore and in all most all parts of the world wherein Hindus are there. He is adored prominently in temples, houses and specially in business establishments of Hindus as the main deity. What distinguishes him most is his form. He is the only deity besides Nri-Singh whose head is not human. These are basically myths created to explain his special form. Puranic and medieval literatures have described Lord Ganesh

with the head of elephant whose trunk is lying askew and having only one task, big belly, ears like winnowing basket, small eyes, the snake as the 'yagyopaveeta' (sacred thread) upon his body, his two hands wielding a 'pasha' (snare) and 'ankush' (hamulus or goad) and he has a mouse as his vehicle. His whole visage or image is called 'Varadamoorthi' or 'Mangalamoorthi'.

The meanings for the prominent parts of Lord Ganesha's body explain as follows:-

1) Elephant Head:- Elephant specially its trunk is the most auspicious symbol for the Hindus. The elephant is the most powerful and a massive creature of the earth. The pre-historic man troubled by various natural and powerful agencies longed to acquire more and more power. Since the elephant was considered as the most powerful, the massive creature caused to be signified as the symbol of power. Hence, the belief that the elephant is the most auspicious symbol. And when the head of an elephant was planted on Ganesha's trunk, Ganesh became the most auspicious Lord.

2) Askew Lying Trunk:- The trunk or proboscis of the elephant is his most active and skilfully handling organ. An elephant can lift anything by it. Like hands for human being, so is trunk for elephant. So trunk of elephant indicates activeness. So, it is by trunk, Lord Ganesh removes all obstacles. The trunk has another interpretation. It is accepted to represent nose which is a commonly used symbol for prestige. It is a common belief that a man with a large nose means one who cares most for self-respect and reputation. Puranas reveal that Lord Ganesh was quite a self-respecting deity. He even created obstruction in his fathers, Lord Shiva's attempt to destroy 'Tripur' when he himself was not worshipped. In this sense, he was over sensitive for his specially prestigious position. Besides being the nose, the trunk also signifies organ for smelling. These organs like ear, nose etc. are the agencies for reception of the outside influence.

3) One Tusk:- The spiritual interpretation for having one tusk says that one tusk means his giving attention in one direction only, after weighing all the pro's and con's. It symbolically means that one should get information from all quarters (as indicated by big ears and nose) but having decided the course of action, he should not waver. Hence it indicates an ideal good decision maker.

4) Big Belly:- It indicates the whole Universe. Roundness is an accepted Symbol of Universe, alternatively represented by a circle. Huge Belly of God Ganesha interprets his capacity and capability to digest all the information received by his highly sensitive organs and act according to the correct decision.

5) Large Ears:- Interpretation for large ears means, his getting information from all direction, like huge dish antenna to get transmission from all directions. So the Lord listens to everyone and takes suitable decision.

6) Four Arms:- Of these four arms, two are shown to be holding a snare and a goad in each, third raised in the 'Abhaya Mudra' and the fourth one resting upon two volumes of some sacred text. His four arms, it is said represents four categories - castes into which things can be divided. The four categories are Brahman, Kshatriya, Vaishya and Shoodra into which the human race had been divided since the time manu. The four hands of Lord Ganesh indicate what all the four categories must have for their perfect usefulness to the society. The 'Abhaya' literally means fearlessness. The Lord Ganesha guarantees fearlessness to the Brahmins so that they never be afraid of anything and speak only the truth. As a result, the society can derive maximum advantage of its learning.

One hand on the sacred books indicates, 'kshatriya' or the warrior class must not discard learning to acquire knowledge. The books are the symbol of knowledge. His third hand holds an elephant - goad or hamulus. This indication for the trader or business community - vaishya to discourage them from a greedy way of longing for making money in an improper way. The snare held in the fourth hand is meant for the Shoodras-the working class who works for a specified sum or return under a bondage. Shoodras also means uninitiated or unlearned. Those who work or function under a bondage serve best.

7) The Mouse as Lord Ganesha's Vehicle:- It is said that bulkiness of the body does not count when the study of life principle is taken into consideration. Life as such is neither heavy nor light. The soul or 'Atmaa' or self may be said to be the greatest of the great and the smallest of the small, like the heavens or the sky and the atom respectively. This represents life in its totality - as seen on the earth and Lord Ganesh installed on the mouse is suggestive of these cosmic aspects.

Another interpretation says that this contrast illustrates the different ways in obstacles can be removed to reach religious ends or the aim. The Elephant tramples down everything in its path, but the mouse can creep through small holes and cracks to reach the same goal.

8) Small Eyes:- In comparison to the large size of an elephant's head normally has small eyes. But in Lord Ganesh's visage, these small eyes have special significance. His small eyes indicates his capacity to have very keen minute observation and sees the reality without missing anything unobserved.

Lord Ganesa is believed to be the Lord of wisdom. In this way he is always worshipped with the Goddess Saraswathi who is believed to be the Goddess of Speech.

Lord Ganesh knows how to solve the most intricate problems by his sheer wisdom. There is a popular belief to illustrate Lord's wisdom or presence of mind. When he entered into a competition with his younger brother Kartikeya to go round the earth, Lord Ganesha with his massive belly and bulky physics and tiny mouse as his vehicle was in no match to his brother Karthikeya with his athletic body and peacock as his vehicle, but Lord Ganesha was declared as the victor for having used his wisdom. Quoting Shastras, he argued that since the parents who cause ones birth in the world are verily the whole world for the son, his going round his parents seven times should be deemed to be equivalent to his going round the world, factually. So this argument rooted deep in his logic and gratitude won him the race. With the result, all the deities assembled there and declared Lord Ganesha to be the Lord of wisdom.

Moreover, worshipping of God Ganesha is found in the Countries neighbouring India such as Burma, Siam, Indo-China, Java, Borneo, China and Japan. Also he is worshipped alike by Saivites and Vaishnavities by the people of North and South India. He is the favourite God of Maharastra and a very popular God of Tamils. There is hardly any village without a sanctum for Pillaiyar. Being the eldest son of Umadeviyar, he is affectionately named as Pillaiyar. He is seated on the river bank, tank band and at important road junctions of Tamil Nadu. Also, He receives the worships of Buddhists as well. The Mantara 'Ganapati Hridaya' is said to be chanted by them.

So, he who chants the Lord Ganesha's name before commencing anything, education, a marriage ceremony, entering a new house, going out for some mission, never faces any hurdle or obstacles and succeeds in all his attempts or mission.

'OM SRI VIGNESWARAYA NAMAHA'

# விநாயக விரதங்கள்

அ. ந. இராஜகோபால்,
பொருளாளர், ஸ்ரீ கருமாரியம்மன்
ஆலய பரிபாலன சபை, மணல்குன்று.

*''உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு ஊறுகள் செய்யாமை
அற்றே தவத்திற்குரு''*

என்பது வள்ளுவர் வாக்கு. தவத்தின் ஒருபகுதியே விரதமாகும். தவம் நீண்டது. ஆனால் விரதம் குறுகியது. விரதம் வீட்டிலிருந்தாயினும், எந்த நாட்டிலிருந்தாயினும், இல்லறத்தவராயினும், துறவறத்தவராயினும், பிரமச்சாரியராயினும், கன்னிகையாயினும், சிறுவராகிலும், பெரியவராகிலும் அனுஷ்டிக்கக் கூடியது.

தேவாரம், திருவாசகம் போன்றவற்றை பக்தியோடு பாராயணம் செய்வதனால் இறைவனை மனக்கண் முன் வரச்செய்து தொழவும், மனதைத் தூய்மையாக வைத்திருக்கவும் உதவுவது போல் வேண்டுதல்களோடு நோற்கப்படும் விரதங்களும் சித்திகரமான நல்ல பலனைத் தருகின்றன.

மும்மணிகள் போல் விநாயகருக்குரிய மூன்று சிறப்பான விரதங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. அவை வாரந்தோறும் அனுஷ்டிக்கப்படும் ''சுக்கிர வார விரதம்'', மாதந்தோறும் அனுஷ்டிக்கப்படும் சதுர்த்தி விரதம், வருடத்தில் ஒரு முறை மாத்திரம் அனுஷ்டிக்கப்படும் விநாயகர் ஷஷ்டி விரதம் ஆகும். நினைத்த காரியம் சித்தி, விக்கினங்கள் நீக்கம் என்பனவே பொதுவாக விநாயக விரதங்களின் நோக்கமாகும்.

## விநாயகர் சுக்கிர வார விரதம்

நினைத்த காரியம், சித்திக்கவும், விக்கினமின்றி நிறைவேறவும் விநாயகனைப் பிரார்தித்து வெள்ளிக்கிழமை தோறும் இந்த சுக்கிர வார விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த விரதம் வைகாசி மாத வளர்பிறையில் வரும் முதலாவது வெள்ளி ஆரம்பித்துத் தொடர்ந்து அனுஷ்டிக்கப்படவேண்டும்.

## விநாயகர் சதுர்த்தி

விநாயக விரதங்களுள் மிகவும் விசேஷமான விரதம் விநாயகர் சதுர்த்தி விரதமாகும். இந்துக்கள் யாவரும் விரும்பி அனுஷ்டிக்கும் விரதம் இதுவாகும். விநாயகர் ஆலயங்களில் சிறப்பாகவும், ஏனைய ஆலயங்களில் பொதுவாகவும் இவ் விரதநாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்விரதத்தினை பூஜை வழிபாடுகளுடன் இல்லங்கள் தோறும் கைக்கொள்வதும் நன்று.

ஆவணி மாதத்தில் வரும் பூர்வ பட்சத்து சதுர்த்தி தினத்தன்று இவ்விரதத்தை அனுஷ்டிக்க ஆரம்பிக்க வேண்டும். வீபூதி, சந்தனம், புஸ்பம், அறுகு முதலியவைகளினால் பூஜை செய்து வழிபட வேண்டும். கொழுக்கட்டை போன்ற இருபத்தொரு வகைப் பலகாரங்களும், நாவற்பழம், விழாம்பழம், கரும்பு, தேங்காய் முதலியனவும் படைத்து நிவேதனம் செய்யவேண்டும்.

விநாயகர் சதுர்த்தி பூஜையில் மற்றுமொரு அம்சம் என்னவென்றால் இருபத்தொரு பூக்களாலும், இருபத்தொரு அறுகம் புல்லினாலும் தனித்தனியாக அர்ச்சிக்கலாம். இறைவனை அவனது பலவித நாமங்களையும் சொல்லி ஓங்காரத்துடன் உச்சரித்து வணக்கம் செலுத்துவதே அர்ச்சனையாகும். ஒவ்வொரு நாமமும் சொல்லும் போதும், ஒவ்வொரு புஸ்பம் சமர்ப்பித்தல் மரபு.

## விநாயகர் ஷஷ்டி விரதம் (பிள்ளையார் கதை)

கார்த்திகை மாதத் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை ஷஷ்டி வரையிலான இருபத்தொருநாள் விரதம் இது.

கந்தபுராணம், லிங்கபுராணம், உபதேச காண்டம் ஆகியவற்றில் விநாயகர் ஷஷ்டி விரதம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதை, வரதபண்டிதர் பெயரில் தனிநூலாகத் தந்திருக்கின்றார்.

முன்பொரு சமயம் மஹா விஷ்ணு பொய்ச் சாட்சி சொன்னதால், தமக்கேற்பட்ட சாபம், விநாயகரை வணங்கி நீங்கப் பெற்றார். இச்சாபம் நீங்கிய தினமாகிய மார்கழி மாத வளர்பிறை ஷஷ்டி தினமே விநாயக ஷஷ்டி ஆகும். இந்நாளை இறுதியாகக் கொண்ட இருபத்தொரு நாள் விரதமே பெருங்கதை விரதமென்பர்.

முதல் இருபது நாட்களும் பகல் ஒருவேளை உணவு மாத்திரம் உண்டு. இரவு பால், பழம் அல்லது பலகாரம் உண்ணலாம். தினமும் விநாயகனுக்கு இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை, கொழுக்கட்டை ஆகியவை நிவேதனம் செய்து, பெருங்கதை, விநாயகர் புராணம், விநாயகர் கவசம் போன்றவற்றையும் பாராயணம் செய்து வழிபாடு செய்தல் வேண்டும்.

இருபத்தோராம் நாள் பூரண உபவாசம் இருந்து, பூஜை வழிபாடுகள் செய்து மறுநாள் இருபத்திரண்டாம் நாள் பாரணை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.

இவ்விரத ஆரம்ப நாளில் இருபத்தொரு இழையிலான விரதக் காப்பினை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டிக் கொள்வர். இக்காப்பு விரதம் முடிந்த மறுநாள் அதாவது பாரணையிலன்று காலை அவிழ்க்கப்பட வேண்டும்.

விக்கிரமாதித்தன் என்ற மன்னனின் மனைவியருள் ஒருத்தியான இலக்கணசுந்தரி என்பவள் விநாயகர் ஷஷ்டி விரதத்தை அனுஷ்டித்து வந்து, விரதம் முடியு முன்னரே, விரதக் காப்பை அவிழ்த்து அவரைக் கொடியில் வீசிவிட்டு, விரதத்தையும் இடையில் நிறுத்திவிட்டாள். அதனால் அன்றிலிருந்து அவள் சொல்லொணாத்துயரங்களை எதிர்கொண்டு, அரண்மனையையும் விட்டு வெளியேற வேண்டி யேற்பட்டு காட்டில் வசிக்கலாளாள். வீசிய காப்பு அவரைக் கொடியில் விழுந்ததால், அக்கொடி மிகவும் செழிப்பாக வளர்ந்தது. அந்த அவரைக் கொடியில் கிடந்த விரதக் காப்பை கண்டெடுத்த பணிப்பெண் ஒருத்தி தான் அதனைக் கையில் கட்டி விரதமனுஷ்டித்தாள். அவ்விரதத்தின் பலனாக அவளை மன்னன் மணந்து அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

காட்டில் அலைந்த இலக்கணசுந்தரிக்கு வயோதிப மாது ஒருத்தி விநாயக ஷஷ்டி விரதத்தை மீண்டும் முறைப்படி அனுஷ்டிக்கும்படி அறிவுரை கூறியபடி நடந்துகொண்ட இலக்கணசுந்தரி முறைப்படி விரதம் அனுஷ்டித்தாள். அவ்வேளையில் வேட்டையாட காட்டுக்கு வந்த மன்னன் விக்கிரமாதித்தன் களைப்புற்று, தண்ணீரருந்துவதற்காக இவள் இருந்த குடிலுக்குச் சென்றான். அங்கு இலக்கணசுந்தரியைக் கண்டு அவளை மீண்டும் தன்னோடு அழைத்துச் சென்றான் என்பது கதை.

விநாயகர் ஷஷ்டி விரதம் தொடர்ந்து இருபத்தொரு ஆண்டுகள் அனுஷ்டிப்பது சிறந்த பலனைத் தரும். இயலாதவர்கள் குறைந்தது ஏழு வருடங்களாவது கடைப்பிடித்தல் நலம்.

விநாயக விரதங்களை பக்தியோடு முறைப்படி அனுஷ்டித்து நினைத்த காரியம் சித்திக்கவும், விக்கினமின்றி நிறைவேறவும். சித்தி விநாயகனின் பாதம் பணிந்து பலன் பெறுவோமாக.

''விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்''

# ஆன்மீகம், ஒழுக்க விழுமியம் மற்றும் சமூக அபிவிருத்திக்கான கல்வி

- மா. கருணாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர்
கொழும்புப் பல்கலைக்கழகம்.

ஒழுக்க விழுமியங்கள், சமூகம் மற்றும் ஆன்மீக அபிவருத்திக்கு உதவுதல் கல்வியின் முக்கிய நோக்கமாகும். மேலைத்தேயக் கல்விச் சிந்தனையாளரும் கீழைத்தேயக் கல்விச் சிந்தனையாளரும் கல்வியின் இறுதி இலக்கு உண்மையை அறிதல் என்றே எடுத்துக்காட்டி வந்துள்ளனர். இன்றைய சிக்கல் நிறைந்த வாழ்க்கைச் சூழலில், மக்களிடையே வாழ்க்கை பற்றிய தெளிவு ஏற்படுவதற்கும், வாழ்க்கை அனுபவங்கள் வளம் பெறுவதற்கும். ஆன்மீகம், ஒழுக்கம் மற்றும் சமூகம் சார்பான அபிவிருத்தி அவசியமானது.

இன்றைய கல்விமுறை மனிதனின் அடிப்படைத் திறன்களை விருத்திசெய்யும் நோக்குடன் செயற்படுகின்றது. பெரும்பாலும் பொருளாதார மேம்பாடு குறித்துச் செயலாற்றும் பொழுது, கல்வி ஒரு பொருளாதாரப் பண்டம் எனக் கருதப்படுவதால். கல்வியைச் சந்தைப்படுத்துபவர்கள் சில குறுகிய நோக்கங்களுடன் செயற்படுகின்றனர். கல்வி வெறுமனே நூலறிவு சார்ந்த பாடசாலைப் பணிகளுடன் நின்றுவிடுகிறது. பரீட்சைகளில் சித்தியடைவதும், தகைமைச் சான்றிதழ்களைப் பெறுவதும் முக்கிய மாகிவிட்டது. மனிதனின் அகக் காரணிகளிலும் பார்க்கப் புறக் காரணிகளின் ஆதிக்கம் கல்வியில் மிளிரும்போது பல முரண்பாடுகள் தோன்றுகின்றன.

இந்த நூற்றாண்டில், உலகளாவிய ரீதியில் பல்வேறு மாற்றங்கள் துரிதமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மக்கள் வாழ்க்கைமுறை, தேவைகள், தொழில்நுட்பம் சார்ந்த முன்னேற்றங்கள், இயந்திர சாதனங்களின் பயன்பாடு, தொடர்பாடல், போக்குவரத்து மற்றும் மருத்துவத்துறை வளர்ச்சிகள் யாவும் ஒன்று சேர்ந்து கல்வியின் உள்ளடக்கத்தை மாற்றியமைத்துள்ளன என்பதுடன் ஒழுக்கம்சார் மனப்பாங்குகளிலும் மாற்றங்களுக்கு வழிகோரியுள்ளன. புதிய ஒழுக்கம் மற்றும் விழுமியம் சார் பிரச்சினைகள் பல்வேறு மட்டங்களில் சமூகத்தில் உருவாகும் போது, அவற்றுக்கான தீர்வுகளை மேற்கொள்வதனின்றும் நாம் தப்பித்துக்கொள்ள முடியாது.

கல்விச் செயற்பாடுகள் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் இன்றைய காலகட்டத்தில் பிள்ளைகளின் சிந்தனைகள் மற்றும் செயல்களில் மட்டுமன்றி, நம்பிக்கைகள் விழுமியங்களிலும் மற்றவர்களின் உணர்வுகளை மதித்து நடப்பதிலும் சமநிலை பேணப்படுதல் வேண்டும். மனிதனிடத்தில் தன்மையச் சிந்தனை மேலோங்கும்போது, சுயநலமும் உலகியல் நாட்டமும் அவனை ஆட்கொள்வதால், மற்றவர்களை மதிக்கும் இயன்பினின்றும் அவன் விலகிச் செல்கின்றான்.

பொருள்சார் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுத்த மேலைநாடுகளின் ஒழுக்கம் மற்றும் சமூக அபிவிருத்திப் பண்புகள் சீர்குலைந்துள்ளன. அந்நாடுகளில் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்றுவரும் சமகால முரண் நிகழ்வுகள் இதற்குச் சான்றாக உள்ளன. மேற்கு நாடுகளின் கல்விமுறையைப் பின்பற்றிவரும் கீழை நாடுகளிலும் ஆன்மீக அடிப்படையில் வலியுறுத்தப்பட்டிருந்த ஒழுக்க விழுமியங்கள் மாற்றமடைந்து கொண்டிருக்கின்றன; வாழ்க்கையின் சமநிலையைச் சீர்குலைக்கின்றன.

வாழ்க்கை அனுபவங்களின் மூலம் சமூகப் பொறுப்புகளை ஏற்குமாறு மக்களை ஆயத்தஞ் செய்தல் கல்வியின் நோக்கம் எனின் அக்கல்வி பொருத்தமான வகையில் நிகழ்வதற்கும் சமநிலைச்

சிந்தனை முக்கியமானது. ஒவ்வொருவரும் சிறந்த சமூக உறுப்பினராக, சிறந்த பிரசையாக வாழ்வதற்கு மட்டுமன்றி முதியோர் சிறுவர் மற்றும் பெற்றோரது நலன்களைப் பேணும் பொறுப்புகளையும் ஏற்கச் செய்தல் எதிர்பார்க்கப்படுகிறது. அனுபவங்களுக்கும் பொறுப்புகளுக்கும் இடையில் ஒருவர் காண்கின்ற தெளிவான தொடர்பின் காரணமாகவே இத்தகைய பொறுப்புணர்வுகள் ஏற்படும் என்பதால், அதற்குரிய அடிப்படைகளை ஆன்மீகம், ஒழுக்கம் மற்றும் சமூகம் சார் கல்வியின் மூலம் உருவாக்குதல் வேண்டும். இன்றைய கல்வி நிறுவனங்களும் சமயக் கல்வி நிறுவனங்களும் இவ்வாறான பண்புகளை உருவாக்குவதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றனவா என அவதானங்களை மேற்கொள்வது இன்றியமையாதது.

பாடசாலைகளில் ஒழுக்கம் கட்டுப்பாடு, ஆன்மீகம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு ஏற்ற முக்கிய பாடமாகக் கலைத்திட்டத்தில் சமயபாடம் அமைகிறது. இப்பாடமும் பரீட்சை நோக்கில் விடயங்களை மனனஞ் செய்து ஒப்புவிக்கும் செயல்முறையைக் கொண்டிருக்கிறதே தவிர சமய உண்மைகளையும், மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் கற்பதன்மூலம் எதிர்பார்க்கப்படும் ஒழுக்க விழுமியங்களை வெளிக்கொணர்வது பற்றிக் கவனஞ் செலுத்தப்படுவதில்லை. ஆகவே மாணவர்கள் மத்தியில் ஒழுக்க விழுமியங்களை விருத்தி செய்வதற்கு, அவைபற்றி விஷேடமாகக் கற்பிக்கப்பட வேண்டுமா அல்லது பயிற்சியளிக்க வேண்டுமா என்ற வினாக்கள் எழுகின்றன. கல்விச் சிந்தனையாளர் பலரது கருத்தின்படி, ஒழுக்கக் கல்வியே பயன்பாடுடையதாக இருக்கும் என்பதற்கும் பல காரணங்களைத் தந்துள்ளனர்.

பிள்ளைகளுக்கு ஒழுக்கக் கல்வி வழங்கப்படும் போது, அவர்களிடையே புரிந்துணர்வு உண்டாகிறது. வாழ்க்கைப் பிரச்சினைகளைத் திறனாய்வின் அடிப்படையில் விளங்கிக்கொள்வார்கள். விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் பண்பு உண்டாகிறது. சமூகத்தில் தாம் பெறும் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்வார்கள். அறிவு, உண்மை ஆகிய விடயங்களுக்கு மதிப்பளிப்பர் இவை யாவற்றிலும் மேலாக பிறமனிதர் பற்றிய சிந்தனையும் ஏற்படும் என்பதுடன், சமூகத்தில் எழும் பிரச்சினைகளுக்கும் சரியானமுறையில் துலங்குவார்கள் என அவர்கள் தெரிவிக்கின்றனர். இத்தகைய பண்புகள் கொண்டவர் களையே ஒழுக்கவியல் அடிப்படையில் கற்ற மனிதன் என அவர்கள் கருதுகின்றனர். சமயக் கல்வியைக் கற்பிக்கும்பொழுது அவற்றுள் ஒழுக்கம், ஆன்மீகம் சார்ந்தவற்றையும் உள்ளடக்க வேண்டும் என்பதில் இவர்கள் உறுதியாக இருக்கின்றனர்.

ஆன்மீகம், ஒழுக்க விழுமியங்கள் மற்றும் சமூகம் சார் அபிவிருத்திக்கான கல்வியை வழங்கும் காலத்தில், இவற்றின்மூலம் எதிர்பார்க்கப்படும் விடயங்கள் பிள்ளைகளிடம் சரியாகச் சேர்கின்றனவா எனவும் பாடசாலைகள் அவதானிக்க வேண்டும். அவற்றைக் குறித்துப் பல்வேறுவிதமான குறிகாட்டிகளை அவை உருவாக்கலாம். பிள்ளைகளிடம் காணப்படும் நல்ல உணர்வுகள், பெறுமானங்கள், நம்பிக்கைகள் சார்பாக அவை அமையும். இதனைக் குறித்து ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் நிரந்தரமான மற்றும் சுமுகமான தொடர்புகள் அவசியமானவை. பிள்ளைகளிடையே தோன்றும் ஒழுக்கப் பிரச்சினைகளுக்கு சிறந்த வழிகாட்டல்கள் உதவும். ஏனெனில் ஒழுக்க விழுமியங்களின் தரமானது. ஆசிரியர்களின் தரத்திலும் தங்கியிருக்கின்றது. பாடசாலைகளில் ஒழுங்கு செய்யப்படும் காலைக் கூட்டங்களில் இவ்விடயங்கள் பற்றிக் கலந்துரையாடலாம். மாணவர்கள் கூட்டாக இயங்கும்போது, அவர்களுடைய வேலைகள் மற்றும் பொறுப்புணர்வுகளை அவதானிக்கலாம். வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும் பாடவிடயங்களிலும் பார்க்க ஒழுக்கம் சார்ந்த விடயங்களுக்கு முதன்மையிடம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது. இத்தகையவற்றிலிருந்து பாடசாலைக் கல்வியில் ஆன்மீகம், ஒழுக்கம் மற்றும் சமூகம் சார்பான கல்விக்குக் கலைத்திட்டத்திலும் முக்கியத்துவம் கொடுக்கப்படுதல் வேண்டும் என்ற கருத்தும் தெளிவாகின்றது. மனிதனின் பூரண வளர்ச்சிக்கும் இவை இன்றியமையாதன.

■

# ஆலய தரிசனம்

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிற்கின்ற பரம்பொருளுக்கு உலகமே ஆலயமாகும். மெய்யடியார்கள் தம் மனக்கண்களால் வழிபட்டுப் பூசிக்க இறைவன் அவர்களுடைய மனத்திலே கோயில் கொண்டருளு கின்றான். ஆயினும் சாதாரண மக்கள் தனித்தோ ஒன்று கூடியோ அவனை உணர்வொன்றித் துதித்தல் ஆலயங்களிலேயே முடிகிறது.

தலைமுறை தலைமுறையாகப் பல பக்தர்கள் தவமும், செபமும், தியானமும், பூசையும், பிரார்த்தனையுஞ் செய்த இடங்களே ஆலயங்கள். பத்தகோடிகள் விழுந்து புரண்டு வழிபட்ட தலங்களுக்கு ஒரு தனிச்சக்தி உண்டு. அவற்றில் இறைவனை எளிதிற் காணலாம். நிலத்தை அகழ்த்தால் நீரைப் பெறலாம். ஆனால் சில இடங்களிற் கிணறும் குளமும் நீர் வேட்கை தீர்ப்பதற்குத் தயாராக இருக்கின்றனவே. அவற்றை நாமடைந்து சுலபமாக தாகம் தணித்து கொள்ளலாம் அல்லவா? அவை போன்றவையே ஆலயங்களாகும். பக்தித் தாகத்தை அவ்விடங்களிற் சிரமமில்லாது தீர்த்துக் கொள்ளலாம்.

''கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்'' என்பது முதுமொழி. இதிலிருந்து நமக்கு முக்கியமானதோர் உண்மை புலப்படுகிறது. அதாவது, என்ன இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஆலயம் ஒன்று ஊருக்கு இன்றியமையாதது என்பதே அவ்வுண்மை. மக்களுடைய ஆன்ம ஈடேற்றத்துக்கும் நல்வாழ்வுக்கும் ஆதாரமாக இருப்பது ஆலயம். அன்றுஞ்சரி, இன்றுஞ்சரி தமிழ் கிராமங்கள் ஆலயத்தைச் சூழ்ந்தே அமைந்துள்ளன. எந்த ஊரை எடுத்துக் கொண்டாலும் அதன் நடுவில் ஓர் ஆலயமும் அதனைச்சுற்றி குடிமனைகளுமே இருக்கும்.

ஆலயம் என்பது ஆன்மா ஒன்றித்து நிற்கும் இடம் எனப் பொருள்படும் ''ஆ'' என்றால் பசு, லயம் என்றால் ஒன்றித்து நிற்றல், பசு என்பது உயிர் எனவே உயிர் ஒன்றித்து பக்தியினால் வழிபடும் இடம் ஆலயம் ஆகும்.

கோயில் அமைக்கப்படும் விதிபற்றி விளக்குவது இறைவனால் அருளப்பட்ட சிவாகமமாகும். மூல விக்கிரகம் எழுந்தருளியிருக்கும் இடம் கருவறை அல்லது கர்ப்பக்கிரகம் எனப்படும். இது பெரும்பாலும் கிழக்கு நோக்கிலே இருக்கும். இதன் மேற் கூரை தூபி. கருவறையில் வீற்றிருக்கும் மூர்த்தியைக் கொண்டே கோயிலின் பெயர் குறிக்கப்படும். கருவறையின் முன் இருப்பது அர்த்த மண்டபம் அங்கே சிவாச்சாரியார் நின்று சுவாமிக்கு தீபாராதனை, சோடசோபசாரங்கள் முதலியன செய்வார். இதற்கு அடுத்து இருப்பது ஐம்பொன்னாலான உற்சவமூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் மகாமண்டபம். இங்கு பூசைக்காலங்களில் சுகந்த தூபமிடல், திருமுறை ஓதல், தொண்டு செய்தல் போன்றன செய்யப்படும். இம்மண்டபம் திறந்த ஒரு மண்டபம். இதனை சங்காபிஷேகம் போன்ற சிறப்பு கிரியைகள் செய்ய உபயோகிக்கப்படும். நிருத்த மண்டபத்திற்கு முன் இருப்பது தம்பமண்டபமாகும். அங்கே வாகனம், பலிபீடம், கொடி மரம் முதலியன இருக்கும். இத்தொகுதியைச் சுற்றி நாற்புறமும் மதில்களும் சிறிய தனிக் கோயில்களும் இருக்கும். இம்மதில்களுக்கும் அல்லது தனிக்கோயில்களுக்கும் மண்டபத் தொகுதிக்கும் இடையேயுள்ள வெளியிடம் உள்வீதி என்ற பெயர் பெறும். புறத்தே இருப்பது வெளிவீதியாகும்.

ஒரு கோயிலுக்குச் சிறப்பும் அழகும் தருவது கோபுரமாகும். இதனைத் தூலலிங்கம் எனவும் வழங்குவர். வெகு தூரத்தில் வருபவர்களும் இதனைக் கண்டவுடனே பக்தி உணர்ச்சி பெறுவர். கோயில் வாயிலின் பக்கத்தில் மணிக்கோபுரம் அமைக்கப்பட்டிருக்கும். இதிலிருக்கும் பெரிய மணியை ''காண்டாமணி'' என்பர்.

இயற்கை எழிலில் இறைவனைக் காணலாம் என்பதற்கு அமைய ஆலயத்திற்கு தீர்த்தம் அமைய வேண்டும். ஓர் ஆலயத்திற்கு மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன முக்கியனவாகும்.

கோயிலுக்கு வரும் அடியவர்கள் தோய்த்து உலாந்த ஆடை அணிந்து சுத்தமாகவும், விபூதி தரித்தும், ஒரு பாத்திரத்தில் தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை முதலியவை வைத்து அரைக்கு கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பட்ட கையிலே ஏந்திக் கொண்டு செல்லவேண்டும். திருக்கோயிலை சமீபித்தவுடன் தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக் கொண்டு உள்ளே பிரவேசித்து பத்திரலிங்கமாகிய பலிபீடத்திற்கு இப்பால் நமஸ்காரம் பண்ணக்கடவர்.

ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்வர். அட்டாங்கத்தில் தலை, கையிரண்டும், செவியிரண்டும், மோவாய் புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்பும் நிலத்தில்பட வணங்க வேண்டும். அதேபோல் பஞ்சாங்க நமஸ்காரத்தில் தலை, கையிரண்டும், முளந்தாளிரண்டும் என்று ஐந்து உறுப்பும் நிலத்தில்பட வணங்குதல் வேண்டும். திரியாங்க நமஸ்காரம் சிரசிலே இரண்டு கைகளையும் குவித்தல்.

கோயிலை வலம் வருதல் மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும் பண்ணல் வேண்டும். ஒருதரம், இரண்டு தரம் பண்ணுதல் குற்றம். நமஸ்காரம் பண்ணுமிடத்து மேற்கேயாயினும் தெற்கேயாயினும் கால்நீட்டல் வேண்டும். கிழக்கே ஆயினும் வடக்கே ஆயினும் கால்நீட்டக்கூடாது. அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்திலே பிரதட்சிணம், நமஸ்காரம் முதலானவை பண்ணலாகாது. சிவலிங்கத்துக்கும் அந்த ஆவரணத்திலுள்ள பலிபீட இடங்களுக்கும் இடையே போகலாகாது.

நாம் கோயிலுக்குட் செல்லும்போது நந்திதேவரை வணங்கி அனுமதி பெற்று பின் விக்கினகம் தீர்க்கும் விநாயகரை வணங்க வேண்டும். இதன்பின் ஒவ்வொரு இறைவனாக வணங்கி இறுதியில் சண்டேசுரரை வணங்கி. நாம் செய்த தரிசன பலனை தரும் பொருட்டு பிரார்த்திக்க வேண்டும்.

இவ்வாறு ஆகமங்கட்கு உட்பட்டு முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயமே புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் ஆகும். இவ்வாலயம் புத்தளம் வாழ் சைவமக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கிறது. இங்கு கர்ப்ப கிரகத்தில் வீற்றிருக்கும் சித்தி விநாயகர் மக்களின் துயர் துடைப்பவராக இருந்து புத்தளம் வாழ் சைவ மக்களையும் பல்லின மக்களையும் பாதுகாக்கிறார். அருள் பாலிக்கின்றார்.

*சித்தி விநாயகரை தொழுவோம்.*
*அவர் தாழ் பணிவோம்,*
*ஏற்றமுற வாழ்வைப் பெறுவோமாக.*

உருத்திரசிவம் துஷ்யந்தி
பு/இந்து த.ம.வி.

# ஜோதிடக் கலை

- த. பத்மநாதன்
ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
நீர்ப்பாசனத் திணைக்களம்.

கிரகங்களின் அசைவுகளினால் ஏற்படுகின்ற காலத்தின் மாறுதல்களினால் மனிதரின் வாழ்க்கையில் ஏற்படும் விளைவுகளை வெகுதெளிவாகக் காட்டும் கலையே ஜோதிடம்.

இக்கலையை ஓரளவிற்காவது நாம் தெரிந்து வைத்துக்கொள்வோமாகில், எங்களுக்கு ஏற்படும் துன்பங்களை முன் கூட்டியே தெரிந்து கொண்டு, 'கண்ணில் படுவது, புருவத்தோடு போனது' என்பது போல் எங்களைப் பாதுகாத்துக் கொள்ள மிகவும் உதவும்.

ஒருவன் பிறக்கும்போது, முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைக்கேற்ப இப்பிறவியில் கிரகநிலை அமைகிறது. அதி உயர்ந்த பழமையான இந்து சமயக் கோட்பாட்டின்படி, 'பற்றி தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே' என்று அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. நல்ல யோகங்கள் அமைய ராஜயோகத்துடன் பிறப்பதும், தீய, தரித்திர யோகங்களுடன் பிறப்பதும், அவரவர் முன் ஜென்மத்தில் செய்து கொண்டு வந்த பூர்வ புண்ணிய் கர்ம வினைப்படியேயாகும். ஊழ்வினையின் திட்பத்தை 'விதி' என்று நாம் அழைக்கின்றோம்.

*'எழுதிச் செல்லும் விதியின் கை*
*எழுதி எழுதி மேற்செல்லும்*
*அழுது கெஞ்சி நின்றாலும்*
*தொழுது வேண்டி நின்றாலும்*
*சூழ்ச்சி பல செய்தாலும்*
*வழுவிப் பின்னால் நீங்கியொரு*
*வார்த்தையொன்றை மாற்றிடுமோ*
*அழுத கண்ணீர் ஆறெல்லாம் அதிலோர்*
*எழுத்தையேனும் அழித்திடுமோ'*

என்று விதியைப்பற்றிப் பாரசீக கவிஞர் 'உமர்கய்யாம்' பல நூற்றாண்டுகட்கு முன் பாடியிருக்கிறார். ஆகவே விதியை வெல்ல முடியாது என்ற உண்மை இருந்தாலும், மதியினால் விதியை வெல்ல முடியும் என்று சொல்லும் அறிஞர்களும் உளர். மார்க்கண்டேயர் விதியை வெல்லவில்லையா என்பார்கள். எது எப்படி இருப்பினும் நாம் எவ்வளவு புத்திசாலிகளாக இருந்தாலும், எவ்வளவு பாதுகாப்பாக இருந்தாலும், எவ்வளவு கவனமாக இருந்தாலும், விதிதன் வேலையைச் செய்து முடித்து விடுகிறது. அதன்பின் யோசிக்கிறோம் இப்படிச் செய்திருக்கலாமே அல்லது அப்படிச் செய்திருக்கலாமே என்று அங்கலாய்க்கிறோம்.

இந்த இடத்தில்தான் 'ஜோதிடம்' மனிதர்களுக்கு ஓரளவிற்குக் கைகொடுக்கிறது. எங்களுக்கு நடக்கப்போகும், நன்மை, தீமைகளை முன்கூட்டியே ஓரளவுக்கு அறிந்து, அதன்படி எங்கள் வாழ்க்கையை மாற்றி, முன் குறிப்பிட்டதுபோல் கண்ணில் படுவது, புருவத்துடன் போனதுபோல் என்பதற்கமைய எங்களைப் பாதுகாக்க மிகவும் உதவும்.

ஒவ்வொருவரும் பிறக்கும்போது, அவரவர் பாவத்திற்கேற்ப கிரகநிலை அமைகிறது என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. அவரவர் பாவத்திற்கு ஏற்றபடி, உதாரணமாக காலசர்ப்ப யோகத்துடனோ தரித்திர யோகத்துடனோ, பாவ கர்த்தரி யோகத்துடனோ, லக்கினாதிபதி மறைந்தோ, பலமற்றோ, நல்ல கிரகங்களையோ, உச்சக் கிரகங்களையோ பாவக்கிரகம் சேர்ந்தோ, பார்த்தோ, பங்கப்படுத்தியோ

செவ்வாய் 1,7,8,12டிலோ, ஏழாதிபன் ஆறில் மறைவுபெற்று திருமண சுகமின்றியோ வாழ்க்கை அமைகிறது. இன்னும் இதேபோல் எத்தனையோ நூற்றுக்கணக்கான பாவதோஷங்களுடன் கூடிப் பலர் பிறக்கின்றனர்.

ஜோதிடம் என்றால் என்ன என்பதை விளக்குவோம். ஒரு மனிதன் செய்கின்ற பாவ புண்ணியங்களிற்கு ஏற்ப, அவனது கர்ம வினைகளுக்கு ஏற்ப அமைகின்ற வாழ்க்கையும், நவக்கிரகங்களின் ஆட்சியும், வீழ்ச்சியும், ஜாதகன் அடையும் மனைவி, மக்கள், செல்வம், பதவி, வீடு, உற்றார் உறவினர், நண்பர்கள் போன்ற எல்லாவற்றையும் காட்டும் பத்திரிகையே ஜாதகம் எனப்படும். கிரகங்கள் 9, இராசிகள் 12. இது யாவருக்கும் பொருந்தும் வண்ணம் அமைவதே ஜாதகம் என்று கூறப்படும். ஜாதகம் என்பது நமது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் இவற்றைக் கணிப்பது ஆகும்.

63 கலைகளில் தலையாய கலையாக விளங்கும் இது. (1) ஜோதிடம், (2) ஜோதிஷம், (3) ஜாதகம், (4) சித்தாந்தம் என அழைக்கப்படுகின்றது. ஒளிமிகுந்த கிரக ஆகர்ஷண சக்தியை உடையதால் ஜோதிடம் என்கிறோம். இருண்ட உலகத்திற்கு ஒளியை வழங்குவதால் இது ஜோதிஷம் எனப்படுகின்றது. சாதகமான செயல்களை வரையறுத்துச் சொல்வதனால் ஜாதகம் எனவும், தெளிவான செயல்களைப் பற்றி கூறுவதால் சித்தாந்தம் எனவும் கூறப்படுகின்றது.

இக்கலையின் ஆதிகர்த்தாக்கள், முறையே (1) வசிட்டர், (2) பிரம்மரிஷி, (3) பவணந்தியார், (4) நாரதர், (5) சௌனகர், (6) அத்திரி, (7) மனு, (8) புலஸ்தியர், (9) அங்கிரஸ், (10) வியாசர், (11) ரோமசர், (12) யவணர், (13) காசியர், (14) பராசரர், (15) வராமிகர், (16) சத்யாச்சாரியர், (17) ஸ்ரீ பதி, (18) பாஸ்கரர், (19) வைத்தியநாதர், (20) பிரம்மபுத்திரர், (21) அகத்தியர், (22) நக்கீரர், (23) கனியன் பூங்குன்றனார், (24) காளிதாசர் ஆகியோர் ஆவார்கள். இவர்கள் வளர்த்த தெய்வீகக் கலைதான் ஜோதிடக் கலையாகும்.

இக்கலை பல வழிகளில் பயன் படுகின்றது.

நாட்டைக் காப்பற்ற ஜோதிடக் கலை பயன்பட்டது. அரசவையில் யோதிடர்களை வைத்து மன்னர்கள் ஜோதிடக் கலையை வளர்த்ததினால், ஜோதிடக் கலை வளர்ந்து, மிக உன்னத நிலையை அடைந்தது.

மேலும் அரசவை ஜோதிடர்கள் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய பூகம்பம், வெள்ளம், பஞ்சம், யுத்தம் மற்றும் நவக்கிரகங்களினால் ஏற்படக்கூடிய பேரழிவுகள், மாறுதல்கள் போன்றவற்றை குறித்த காலத்தில் சரியாகக் கணித்து, அதற்குரிய பரிகாரங்களையும் வேள்விகளையும் செய்து அரசர்களுக்கும் நாட்டிற்கும் பெரும் சேவை செய்தார்கள்.

ஜோதிடம் பல்வேறு வகைகளில் அழைக்கப்படுகின்றது. அவையாவன:- எண் ஜோதிடம், ஆருடம், (கைரேகை, கால்ரேகை, பெருவிரல்), ஜோதிடம் அஞ்சனம் (மைபோட்டுப் பார்த்தல்), குறி சொல்லுதல், கிளி ஜோதிடம், குடுகுடுப்பை, சகுனம், அசரீரி, விளிவிசேனம், கண்ஊறு, நாகூரு, பல்லி சொற்பலன், நாடி, பெருமாள் மாடு ஜோதிடம், சப்தரிஷி வாக்கியம் முதலானவை. தீய, நல்ல பலன்களை அறிய இப்படியான வகை ஜோதிடங்கள் பயன்பட்டன.

இப்படியாக ஜோதிடம் பாரதநாடு தொடங்கி, மகமதியர், கிரேக்கர், பாரசீகர், எகிப்தியர், சீனர், யப்பானியர், சுமேரியர் போன்றோர்களுக்கும் பரவி ஜோதிடத்தின் மூலம் பல அரிய பெரிய விஷயங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

பாரசீகத்து அல்ஹாகீம், இயூசின், ஷியூர், அப்துல்லா ஷஸ்வர் என்பவர்கள் சிறந்த மகமதிய ஜோதிடர்களாகத் திகழ்ந்தார்கள். மற்றும் ஐரோப்பிய நாட்டு லியோ, அலன் செபோரியஸ், மிச்சல் முதலானோரும் ஜோதிடக் கலையில் புகழ்பெற்றுத் திகழ்ந்தார்கள்.

ஜோதிடம் என்பது நமது வாழ்க்கையில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. நவக்கிரகங்கள், இராசிகள் இவைகளே இதன் மூலக்கூறுகளாக இருந்து மனிதனை மனிதனாக ஆக்கிவிடுகின்றன.

இந்துக்களாகப் பிறந்த அனைவரும் ஜோதிடக் கலையைக் கட்டாயம் கற்கவேண்டும். ஒவ்வொரு இந்துவும் ஆகக்குறைந்தது பஞ்சாங்கம் பார்த்துப் பலன் அறிந்து கொள்ளக்கூடியதாக தெரிந்திருத்தல் அவசியம்.

இந்து சமயத்தில் ஜோதிடம் பெரும்பங்கை வகிக்கிறது. வேதாந்தம், வைத்தியம், ஜோதிடம், கலை ஆகிய நான்கையும் அடக்கிக் கொண்டதே இந்து சமயம். ஆகவே ஜோதிடத்தை ஒவ்வொரு இந்துவும் தெரிந்து கொள்ளவேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதைத் தெரிந்து கொள்வது மிக அவசியம். இந்துக்களின் வாழ்க்கையில் அன்றாட அலுவல்களில் எல்லாம் ஜோதிடம் பின்னிப் பிணைந்து உள்ளது. சூரிய நமஸ்காரத்துடன் காலையை ஆரம்பிக்கும் இந்துக்கள் பலர். சூரியனை நடுநாயகமாக வைத்துத்தான் பூமி, புதன், சுக்கிரன், செவ்வாய், குரு, சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கிரகங்கள் சுற்றி வருகின்றன.

பூமிக்கு சந்திரன் ஒரு துணைக்கோளாகும். சந்திரன் பூமியைச் சுற்றி வருகிறது. இந்தச் சந்திரனுக்கும் பூமிக்கும் உள்ள உறவு தாய்க்கும் பிள்ளைக்கும் உள்ள உறவு போன்றதாகும். இந்த அமைப்பில் இருந்து இந்தக் கிரகங்களானது முற்றிலும் வேறுபட்ட இரு குழுக்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. உள் வட்டத்தில் சுற்றிக் கொண்டிருக்கிற புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய் ஆகிய சிறு கிரகங்கள் ஒரு பிரிவாகவும், வெளிவட்டத்தில் சுற்றிக் கொண்டிருக்கிற குரு, சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய பெரும் கிரகங்கள் மறு பிரிவாகவும் சுற்றி வருவதை அறியலாம். எல்லாக் கிரகங்களும் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றி வருகின்றன.

மனித வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில், வானவெளியில் 9 பாகை அளவுக்கு பரந்திருக்கும் ஒரு குறிப்பிட்ட பாதை வழியிலேயே இந்தக் கிரகங்கள் செல்கின்றன. ஒரு ஒளி வட்டப்பாதையின் புறத்தே இரு பக்கமும் இந்தக் கிரகபாதை அமைந்துள்ளது. இந்தக் கிரகபாதையில் செல்கின்ற கிரகங்களே மேலே குறிப்பிட்டதுபோல் மனித வாழ்வில் பெரும் மாற்றத்தையும் தாக்கத்தையும் உண்டாக்கவல்லவை.

மேலும் மனித வாழ்வில் பெரும் தாக்கத்தை உண்டாக்கவல்ல இரு 'தொடு புள்ளிகளும்' கூட வானவெளியில் இருக்கின்றன. சூரிய பாதையை சந்திரன் கடக்கும் புள்ளியே இந்தப் புள்ளியாகும். இதன் வடக்குப் புள்ளிக்கு 'இராகு' எனவும், இதில் இருந்து 180° பாதை தூரத்தில் உள்ள தெற்குப் புள்ளிக்குக் 'கேது' எனவும் பெயரிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிரகமும் சக்தி உள்ள ஒருவித குறிப்பிட்ட கதிர்களை வெளியேற்றுகின்றன. இந்தக் கதிர்களுக்கு நம்மை வசீகரிக்கும் சக்தி உள்ளது. சூரியன் சிகப்பு நிறக் கதிர்களையும், சந்திரன் (Orange)செவ்விளநீர் நிறக் கதிர்களையும், செவ்வாய் மஞ்சள் நிறக் கதிர்களையும், அப்படியே புதன் பச்சை நிறம், குரு நீல நிறம், சுக்கிரன் கருநீலம், சனி ஊதா நிறக் கதிர்களையும் வெளிப்படுத்துவதாகப் புராணங்கள் கூறுகின்றன. கிரகங்களுக்குச் சொல்லப்பட்ட நிறவகைகளில் சிறிது வேறுபாடு இருந்தாலும்கூட, இதில் விஞ்ஞானபூர்வமான உண்மை அடங்கியுள்ளது என்பதே ஆராட்சிசெய்த அறிஞர்களின் வாதம். இதுவரை சொல்லப்பட்ட ஒளிமிக்க இந்த ஏழு 'காஸ்மிக் கதிர்கள்' (Cosmic Rays) தவிர கண்ணுக்குப் புலப்படாத மேலும் கதிர்கள் உள்ளன.

அவைகள் புற ஊதாக் கதிர்கள் (Ultra Violet Rays) என்றும் உட் செங்கதிர்கள் (Infra Red Rays) என்றும் அழைக்கப்படும். புற ஊதாக்கதிர்களின் அலை நீளமானது (Wave length). ஊதா கதிர்களின் நீளத்தைவிடக் குறைந்ததாகும். உட் செங்கதிர்களின் அலை நீளமானது. சிகப்பு நிறக் கதிர்களின்

நீளத்தைவிட அதிகமானதாகும். இந்த இரு கதிர்களில் புற ஊதாக் கதிர்கள் 'ராகு' ஆகும். உட்செங் கதிர்கள் 'கேது' ஆகும்.

இந்தக் கதிர்களை ஒரு பட்டகம் (Prism) வழியே பார்க்கலாம். சூரிய ஒளியில், நிழலில், இரவில் மற்றும் செயற்கை ஒளியில் பட்டகத்தின் உதவியினால் இவற்றைப் பார்க்கலாம். ஆனால், முழு இருட்டில் இவற்றைப் பார்க்க முடியாது. ஒரு மனிதனை இந்தப் பட்டகத்தின் மூலம் பார்க்கின்ற போது அவன் இந்த ஏழு கதிர்களாலும் சூழப்பட்டிருப்பது நன்கு தெரியும்.

அதேபோல் தாவரம், மிருகம், மரங்கள், உணவு வகைகள், கட்டிடங்கள் ஆகிய யாவும் இந்தக் கதிர்களால் சூழப்பட்டிருப்பது நன்கு தெரியும். உண்மையில் தன்னைச் சுற்றியிருக்கும் இந்தக் கதிர்களைக் காட்டாத பொருட்களே இவ்வுலகில் இல்லை எனலாம்.

இந்த ஏழு ஒரே வரிசையிலேயே தெரியும். அவைகள் வரிசைமாறி தெரிவதில்லை. அவைகளின் உருவெளித் தோற்றமானது (Appearance) தேர்ந்தெடுக்கத்தக்கது. அவர்கள் எந்த வரிசையில் தோன்ற வேண்டுமோ அந்த வரிசையிலேயே தோன்றும். சிருஷ்டியில் நீல நிறக் கதிர்களே எங்கும் தெரியும். மனித உயிர் இனங்களின் தலைமயிரில் மட்டுமே நீல நிறம் தெரியும். ஆனால் ரோமம் உள்ள மிருகங்களில், அதன் உடல் முழுவதும் நீல நிறமாகத் தோன்றும். பட்டகத்தின் வழியே பார்க்கின்ற போது ஒரு மனிதனின் மூக்கு நுனியானது பச்சையாகத் தோன்றும். இதுபோல நாக்கு செவ்விளநீர் நிறமாகவும் தோன்றும். ஆனால், உள்ளுணர்வு மிக்க மனிதர்கள் தங்களது நாக்கில் நீல நிற நிழல் விழுவதைக் காண்பர்.

இவ்வாறு தாவரங்கள், விலங்குகள், பறவைகள் மற்றும் மனித வாழ்வில் இந்த விண்ணுலகக் கிரகங்கள் ஏற்படுத்துகின்ற விளைவுகளானது, வெளிப்படையாகத் தெரியக் கூடியதாக உள்ளது.

மேலும் பருவமாற்றத்துக்கு உரிய சூரியனில் இருந்து வெளிப்படையாகத் தெரியும் தாக்கங்களைப் பார்ப்போம். சூரியன் பருவமாற்றத்தை உண்டாக்க வல்லவன் என்பது தெரிந்தது. ஒரு ஆண்டின் ஒரு பாதியில் பருவநிலை குளிராக மாறும் போதும், மறுபாதியில் வெப்பமாக மாறும் போது ஏற்படும் பருவ மாற்றங்களை வெளிப்படையாகக் காண்கிறோம், உணர்கிறோம். குளிரும்போது பசியும், அதிக உணவு தேவைப்படுவதும், அதுபோல் வெப்பகாலம் வியர்வையும், பசியின்மையும், குறைந்த ஆடைகள் உடுக்கவும் விரும்புகிறோம். இவையாவையும் உணரும்போது கிரகத்தின் வல்லமையையும் தாக்கத்தையும் காண்கிறோம். அப்போது ஜோதிடம் எவ்வளவு பெரிய உண்மையைத் தெளிவாக்குகின்றது என்பதை அறிவோம். மேலும் ஜோதிடம் ஒரு பலன் தரத்தக்க விஞ்ஞானமாக (Applied Science) மிளிருகின்றது. இது சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகிய நவக் கிரகங்கள் நம் வாழ்வில் உண்டாக்குகின்ற தாக்கத்தை, மாற்றங்கள் பற்றிய உண்மையைத் தெரிவிக்கும் கலையாகும்.

மேலும் இந்த அரிய, பெரிய உண்மைகளை என்றோ எங்கள் இந்து சமயத்தைச் சார்ந்த ஞானிகள், மேதைகள் வெளிக்கொணர்ந்தார்கள் என்பதை அறியும்போது ஒவ்வொரு இந்துவும் பெருமை அடைகிறான். அத்துடன் ஒரு மனிதன் பிறக்கும்போதே வானவெளியில் ஒவ்வொரு கிரகமும் சஞ்சரிக்கும் இடத்தைப் பொறுத்தே அவனது வாழ்வில் மாற்றம், தாக்கம் உண்டாகின்றது என்ற உண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றது ஜோதிடம். அதனால் ஜோதிடத்தை ஒரு பகுதியாகக் கொண்ட இந்து மதத்தைப் பார்த்து உலகம் வியக்கின்றது என்பதை அறிந்து, இந்து மக்கள் பெருமை அடைகின்றார்கள்.

த. பத்மநாதன்.

## கும்பாபிஷேக மலருக்கான நிதியை மனநிறைவோடு வழங்கிய அன்பர்கள்:-

1. திரு. எஸ். இராஜசிங்கம் (சுதாராஜ்) குடும்பத்தினர்.
   *பொறியியளாளர், மூத்த எழுத்தாளர், புத்தளம்.*

2. திரு. மோசஸ் மரியதாசன் குடும்பத்தினர்.
   *பொறியியளாளர், புத்தளம்.*

3. திரு. சிவகுருநாதன் சண்முகஆனந்தன் குடும்பத்தினர்.
   *பொறியியளாளர், புத்தளம்.*

4. திரு. இரத்தினசிங்கம் விமலநாதன் குடும்பத்தினர்.
   *உரிமையாளர் முருகன்கபே, புத்தளம்.*

5. திரு. த. பத்மநாதன் குடும்பத்தினர்.
   *ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், புத்தளம்.*

6. அமரர் பேரம்பலம் குடும்பத்தினர்.
   *ஓய்வுபெற்ற அதிபர், புத்தளம்.*

7. திரு. பா. மதுரநாயகம் குடும்பத்தினர்.
   *தபாலதிபர், புத்தளம்.*



# புத்தளம் மன்னார் வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை

| | |
|---|---|
| *தலைவர்* ~ | L. சிவநாதன்பிள்ளை |
| *உப. தலைவர்* ~ | K. செல்வராஜா |
| *செயலாளர்* ~ | K. லோகநாதன் |
| *உப. செயலாளர்* ~ | ப. கந்தசாமி |
| *பொருளாளர்* ~ | K. பூபாலசிங்கம்<br>P. சபாரத்தினம் |
| *நிர்வாக அங்கத்தவர்* ~ | S. சந்திரன்<br>S. பத்மலிங்கம்<br>S. சிவானந்தராசா (ரவி)<br>கனகசபை ஐயா<br>R. சிவலிங்கம்<br>T. கனகசபை<br>P. குணரத்தினம்<br>V.T. பாலசிங்கம் |
| *காப்பாளர்* ~ | அமரர் மு. நடராசா தேவர்<br>செ. சத்தியமூர்த்தி |

## அபிஷேக பலன்

| | | |
|---|---|---|
| 1) வாசனைத்தைலம் | – | சுகமளிக்கும் |
| 2) மாப்பொடி | – | கடனைத் தீர்க்கும் |
| 3) நெல்லி முள்ளி | – | அரசன் வசம் |
| 4) மஞ்சள் பொடி | – | ரோகத்தை போக்கும் |
| 5) பஞ்சகவ்யம் | – | பாபத்தை போக்கும் |
| 6) பஞ்சாமிர்தம் | – | புஷ்டி அளிக்கும் |
| 7) பசுவின் நெய் | – | மோஷமளிக்கும் |
| 8) பசுவின் பால் | – | ஆயுளைக் கொடுக்கும் |
| 9) பசுவின் தயிர் | – | பிரஜா விருத்தி உண்டாக்கும் |
| 10) தேன் | – | சுகமளிக்கும் |
| 11) கரும்பின் சாறு | – | ஆரோக்கியமளிக்கும் |
| 12) சர்க்கரை, பழவர்க்கம் வாழைப்பழம் | – | பயிரை வளர்க்கும் |
| 13) மாம்பழம் | – | வசியம் |
| 14) மாதுளை | – | கோபத்தை போக்கும் |
| 15) பலாப்பழம் | – | புஷ்டியளிக்கும் |
| 16) எலுமிச்சை பழம் | – | நேர்மை |
| 17) இளநீர் | – | போகமளிக்கும் |
| 18) அன்னாபிஷேகம் | – | சாம்ராஜ்யமளிக்கும் |
| 19) சந்தனம் | – | லஷ்மியைக் கொடுக்கும் |
| 20) கும்பம் | – | மோஷப்ரதம் |

## தீபசோடச உபகாரப் பயன்

| | | |
|---|---|---|
| 1. தூபம் | – | உற்சாகத்தை தரும் |
| 2. ஏகதீபம் | – | விழிப்பை தரும் |
| 3. ஆலிங்காரதீபம் | – | சாம்ராஜ்யத்தை தரும் |
| 4. நாகதீபம் | – | லோகாதி பத்தியம்தரும் |
| 5. ரிஷப தீபம் | – | அரசை அழிக்கும் |
| 6. புருஷாமிருக தீபம் | – | தீபம் |
| 7. சூலதீபம் | – | வயிற்று வலி நீக்கும் |
| 8. ஆமைதீபம் | – | ஜீலகண்டத்தைக் கொடுக்கும் |
| 9. கஜதீபம் | – | ஐஸ்வர்யத்தை கொடுக்கும் |
| 10. சிம்மதீபம் | – | ஆயுளைக் கொடுக்கும் |
| 11. வியாத்திரதீபம் | – | விலங்குகளிடத்தில் பயத்தைப் போக்கும் |
| 12. கொடிதீபம் | – | சோலையைத் தரும் |
| 13. மயில் தீபம் | – | புத்திரப் பேறு அளிக்கும் |
| 14. பஞ்ச தட்டுடன் கும்பம் | – | சாம்ராஜ்யமளிக்கும் |
| 15. நஷத்திரதீபம் | – | பாதுகாப்பு |
| 16. மேருதீபம் | – | எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும் |

## தேவ அட்ட மங்கலங்கள்

1) கண்ணாடி
2) இடபம்
3) தீபம்
4) ஸ்ரீவற்சம்
5) இரட்டைச் சாமரம்
6) சங்கு
7) ஸ்வத்திகம்
8) பூரண கும்பம்

## தேவர்கள் எண்வர்

1) இந்திரன்
2) அக்கினி
3) யமன்
4) நிருதி
5) வருணன்
6) வாயு
7) குபேரன்
8) ஈசானன்

## ஐந்து கண்ணராவர்

1) வாசுதேவர்
2) நாராயணர்
3) பிரத்தியும்நர்
4) அநிருத்தர்
5) சங்கர்ஷணர்

## எண்வகை மணங்கள்

1. பிரமம்
2. தெய்வம்
3. அரிடம்
4. பிரசாபத்தியம்
5. சாந்தருவம்
6. ஆசுரம்
7. இராக்கதம்
8. ளக காசம்

## ஐந்து கண்ணரமைத்த ஐந்து பொய்கை


1. சூரிய புஷ்கரணி
2. சந்திர புஷகரணி
3. அக்கினி புஷ்கரணி
4. சுவர்ண புஷ்கரணி
5. அமிர்தம் புஷ்கரணி

## அறங்கள் 32

1. ஆதுலர்க்குச் சாலை
2. ஓதுவார்க்குணவு
3. அறுசமயத்தார்க்கு உண்டி
4. பசுவிற்கு வாயுறை
5. சிறைச் சோறு
6. பிச்சையிடுதல்
7. தின்பண்டம் நல்கல்
8. அறவைச் சோறு
9. மகப் பெறுவித்தல்
10. மகவு வளர்த்தல்
11. மகப்பால் வார்த்தல்
12. அறவை பிணஞ்சுடுதல்
13. அறவைத் தூரியம்
14. சுண்ணம்
15. நோய் மருந்து
16. வண்ணார்
17. நாவிதர்
18. கண்ணாடி
19. கடதோலை
20. கண்மருந்து
21. தலைக் கெண்ணெய்
22. பெண் போகம்
23. பிறர் துயர் காத்தல்
24. தண்ணீர்ப் பந்தல்
25. மடம்
26. தடாகம்
27. பூஞ்சோலை
28. ஆவுருஞ்சு தரிநாட்டல்
29. விலங்குகளுக்கு உணவு கொடுத்தல்
30. ஏறுவித்தல்
31. விலைகொடுத்துயிர் விடுதல்
32. கன்னிகாதானம்

# வாழ்வின் வழிகாட்டி

- கருணை என்பது என்ன?
- இன்பத்தை தருவது கருணை இன்ப மயமானது
- கருணை எப்படியிருத்தல் வேண்டும்?
- கருணை உன்னிடையே இருத்தல் வேண்டும்.
- வெளியில் கருணை காட்டினால் மட்டும் போதாது கருணை காட்டும் போது இன்பம் தோன்ற வேண்டும்.
- இதற்கு பொது தொண்டு செய்ய வேண்டுமா
- கருணை உள்ள மனிதன் இருந்த இடத்திலேயே தொண்டு செய்யலாம்.
- எது வலிமையானது
- கடவுளிடம் பற்றுள்ளவர்கள் சொல்வது
- பக்தன் என்பவர் யார்?
- மனிதர்களுக்கு மத்தியில் எதுமனம் என்று கண்டுபிடிப்பவன்.
- பக்தனின் நழலை என்ன?
- சித்தத்தில் தானட வைராக்கியம் இருப்பதால் பக்தர்கள் வைராக்கிய சித்தத்தை கேட்கிறார்கள்.
- திடமான எண்ணம் என்பதே அவன் நிலையாகின்றது.
- அதற்கு என்ன செய்யவேண்டும்.
- நிறைய பிரார்த்தனை செய் சித்தம் உருவாகும் பிரமை நீங்கும். பக்திவரும்
- பக்தர்கள் விரும்புவது.
- அமைதி
- அதற்கு எது தேவை
- ஆண்டவனுடைய கருத்து ஒன்றுதான் உலக அமைதிக்கு விந்து
- இறைவனிடம் உரிமை கொண்டாடலாமா.
- (தாராளமாக) பக்தியுடன் அன்பு செலுத்து கடவுள் உரிமை உள்ளவன் ஆகிறான்
- மனிதன் என்பவன் யார்?
- இயலாமையை உயர்ந்து உதவி செய்பவனே மனிதன்
- நாங்கள் உணர்ந்து உதவி செய்பவனே மனிதன்
- நாங்கள் கடவுளைப் பார்க்க முடியாதது ஏன்?
- ஞானி தண்ணீருக்கு சந்தனத்துக்கு விபூதிக்கு மத்தியிலே கடவுளை பார்க்கின்றான்.
- சராசரி மனிதன் வெறும் அபிஷேகத்தையே பார்க்கிறான் ஞானி கடவுளை எதிலும் பார்க்கிறான்.




ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அமைப்பு

இலா. சிவநாதன்பிள்ளை ஆலய பரிபாலன சபைத் தலைவர் வழங்கிய

## உயர்ந்த உள்ளங்களுக்கு எமது நன்றி மலர்கள்

புத்தளம் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் ஆலயம் பூரணமான திருப்பணிகள் நிறைவேறிப் புதுப் பொலிவுடன் மிளிரச் செய்து முடிந்து புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நிகழ்ந்தேறுவதற்கு உறுதுணை புரிந்த எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானின் கருணையையும் திருவருளையும் எண்ணியெண்ணி வியந்து மகிழ்கிறோம். முதற்கண் எல்லாம் வல்ல திருவருளுக்கு நன்றி.

☞ திருக்குடமுழுக்கினை 2001-6-11ஆம் திகதி வெகு சிறப்பாக நிகழ்த்திவைத்த பிரதமகுரு பிரதிஷ்டா பூஷணம், கிரியா சூடாமணி, சிவஞானபானு சிவாச்சார்ய சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும் இணைந்து பங்குபற்றிய ஏனைய சிவாச்சார்ய குருமணிகளுக்கும் எமது திருக் கோயிலின் சார்பாக நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

☞ திருக்கோயிற் கட்டிடங்களையும் விக்கிரகங்களையும் தூபிகளையும் அமைத்துத்தந்த கட்டிட, சிற்ப, சித்திர, ஓவிய, விக்கிரகவியற்கலை நிபுணர் அருட்கலைச் சக்கரவர்த்தி நவாலியூர் தி. சந்திரன் அவர்கட்கும் குழுவினர்களுக்கும் எமது நன்றி.

☞ குருவுக்கு குருவாய் நண்பருக்கு நண்பராய் கூடவே நின்று ஆலோசனைகளை வழங்கிய தேவஸ்தானக் குரு சிவஸ்ரீ இ. சிவகுமாரக் குருக்கள் அவர்கட்கும்.

☞ ஆலய சம்பந்தமான விடயங்களில் அவ்வப்போது தகுந்த ஆலோசனைகளை வழங்கி ஆற்றுப்படுத்திய சிவஸ்ரீ சா. வைத்தீஸ்வரக் குருக்கள் (ஈசன் ஐயா) அவர்கட்கும்.

☞ 1998-1999ம் ஆண்டு காலங்களில் ஆலயத்தை சுற்றி மதில் அமைக்கவும் தர்சன மண்டபம் அமைக்கவும் மனமுவந்து உதவி செய்த அடியார்கட்கும்.

☞ ஆலயத்தை புனருத்தாரணம் செய்ய 2000-4-19ம் திகதி பாலஸ்தாபனம் செய்து 2000-5-01ம் திகதி அடிக்கல் நாட்டு விழா வேளையிலே வருகை தந்து கால்கோள் நிகழ்விலே கலந்து கொண்டு அடித்தளம் அமைக்கத் தேவையான மூலப்பொருட்களையும் மூலதனத்தையும் வழங்கிய உயர்ந்த உள்ளங்களுக்கும்.

☞ ஆலய நிர்மான வேலைகட்குத் தேவைப்பட்ட இரும்பு, சீமெந்து போன்றவற்றிற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகையோ பாரிய தொகையாகும். இத் தொகையில் இரும்புக்குரிய பங்கினையும் சீமெந்து, கல், மண் முதலியவற்றுக்கான செலவீனங்களையும் ஏற்றுக் கொண்டு தந்துதவிய பரந்த உள்ளங்கட்கும்.

☞ கொங்கிரீட் நிர்மாண வேலைகளை நேர்த்தியாக நிறைவேற்றிக் கொள்ளத் தேவைப்பட்ட தொழில் நுட்ப உதவிகளையும் தொழிலாளர் சேவைகளையும் பெற்றுத்தந்த பெருந்தகை யாளர்கட்கும்.

☞ ஆலய அமைப்பினை ஆக்கமுடன் அமைக்க சிவன் கோவில், அம்மன் கோவில், நவக்கிரக கோவில், வைரவர் கோவில், நாகதம்பிரான் கோவில், ஆஞ்சநேயர் கோவில், மாரியம்மன் கோவில், சுப்பிரமணியர் கோவில், மணிக்கோபுரம், நுளைவாயில் கோபுரம் போன்றவற்றை நிர்மாணிப்பதில் பங்குதாரராகச் சேர்ந்து பங்காற்றிய பரோபகார சிந்தனையாளர்களுக்கும்.

☞ ஆலயத்தை அழகுபடுத்த கோபுரங்கட்கும் சிலைகட்கும் கோயிலுக்கும் மை வண்ணம் தீட்டத் தேவைப்பட்ட வர்ணங்களை மனமுவந்து வாங்கித் தந்துதவிய அன்பருக்கும்.

☞ ஆலய குருக்களை குடியமர்த்த ஒரு வீடு இல்லாமை பெரும் குறையாக நிலவி வந்தது. ஆலயத்திற்கு அருகாமையிலே வசதியான காணியொன்று கிடைத்தபோதும், நிதி வசதியில்லாது அல்லலுற்ற வேளையில் சமயம் அறிந்து நிதியுதவிய தர்ம சிந்தனையாளர்களுக்கும்.

☞ பல்வேறு கஷ்டங்கள் நெருக்கடிகள் மத்தியில் திருப்பணிகள் தொடர்ந்த போதும் தாமாகவே முன்வந்து நிதிவுதவிய அன்பர்களுக்கும். நாடெங்கிலும் இருந்து இந் நற்பணிகளுக்குப் பங்களிப்பு செய்த வர்த்தக பெருமக்களுக்கும் வெளிநாட்டிலிருந்தும் உள் நாட்டிலிருந்தும் எமதூரிலிருந்தும் நிதியீந்துதவிய அடியார்களுக்கும்.

☞ சகல வழிகளிலும் ஆலோசனைகள் வழங்கி எங்களை வழிநடத்திச் செல்லுகின்ற வரும் பொறுப்புகளைத் தாம் ஏற்றுக் கொண்டு சிறப்புக்களை எமக்கு அளிப்பவருமான எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய திரு. க. பூபாலசிங்கம் ஐயா அவர்கட்கும்.

☞ எடுத்துக் கொண்ட பணியை இடையில் விடாது துணைபுரிந்த திரு. கு. லோகநாதன் அவர்கட்கும்.

☞ தொடங்கிய திருப்பணி வேலைகள் இடைநிறுத்தப்படாது தொடர்ச்சியாக நடக்க ஆக்கமும் ஊக்கமும் துணிவும் தந்துதவிய திரு. ச. பத்மலிங்கம் அவர்கட்கும்.

☞ ஆலயத் திருப்பணிகளில் ஆர்வத்துடன் பங்கு கொண்டு அனைத்து செயல்பாடுகளிலும் கலந்து பணிபுரிந்த திரு. கே. செல்வராஜா, திரு. பொ. சபாரத்தினம், திரு. சி. சிவானந்தராசா (ரவி), T. கனகசபை ஆகியோருக்கும்.

☞ ஆலய திருப்பணிகள் நடப்பவை நல்ல வையாகவே நடைபெற வேண்டுமென்ற நல்நோக்குடன் ஒத்தாசையும், உதவியையும் புரிந்து வந்த திருவாளர் S. சந்திரன், பொ. குணரத்தினம், V. கந்தசாமி, K. கனகசபை, V.T. பாலசிங்கம் ஆகியோருக்கும்.

☞ ஆலய நிர்மாண வேலைகள் அனைத்தும் பூரணமாகியும் மூலஸ்தான அமைப்பு முறையாக சீரமைத்துச் செம்மையுறச் செய்வதற்கு சிறந்த நல் ஆலோசனைகளை வழங்கியதுடன் கும்பாபிஷேக வைபவம் குறைகளின்றி நடைபெற வேண்டுமென அல்லும் பகலும் ஆர்வமூட்டிய திரு. ஆர். சிவலிங்கம் அவர்களுக்கும்.

☞ கும்பாபிஷேக மலர் வெளியிட அயராதுழைத்த நூலாசிரியர் திரு. மு. கௌரிகாந்தன் மற்றும் நூல் வெளியீட்டுக் குழுவினர் திரு. அ.ந. இராஜகோபால், திரு. த. பத்மநாதன் ஆகியோருக்கும்.

☞ எமது வேண்டுதலை ஏற்றுச் சிறப்புமலருக்குக் கட்டுரைகளையும் வாழ்த்துக்களையும் எழுதி உதவிய சமயப் பெரியார்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அறிஞர்கள், கல்வி மான்கள், கவிஞர்கள், பிறதுறையினர் அனைவர்க்கும்.

☞ கும்பாபிஷேக மலர் வெளியீட்டுக்கு அனுசரணை புரிந்த அன்பர்களுக்கும்.

☞ இம்மலர் அச்சிலே சிறப்புற வெளிவர உதவிய கொழும்பு வானதி அச்சக நிர்வாகி திரு. R.V. சத்தியலிங்கம் அவர்களுக்கும்.

☞ நித்திய நைமித்திய பூஜைகளை முன்வந்து உபயமாக ஏற்று என்றும் ''இறை வழிபாடு'' குன்றாது நிகழ்வதற்கு உறுதுணை புரிந்துள்ள பெருமக்களுக்கும். இத்திருக்கோவிலின் வளர்ச்சிக்கும் திருக்குடமுழுக்கு நிகழ்ச்சிக்கும் தொடர்ந்து நடைபெறும் அனைத்துத் தெய்வீகப் பணிகளுக்கும் என்றென்றும் பேராதரவுதரும் விநாயக அடியார்களுக்கும் திருவருள் வளத்தையும், நலத்தையும் நல்குவதாகுக.

☞ குறிப்பறிந்து எங்களுக்குதவிய ஆனால் இங்கு குறிப்பிடத்தவறிய பெரியோர்கட்கும் அன்பர்கட்கும் அடியார்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு ஸ்ரீ சித்தி விநாயகர் திருவருள் அனைவர்க்கும் கிடைக்க வேண்டுமென்று திருவடிகளைத் தொழுது வாழ்த்தியமைகிறோம்.

தலைவர், பரிபாலன சபை,
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
மன்னார் வீதி, புத்தளம்.

புத்தளம் - மன்னார் வீதி

# ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய
# கும்பாபிஷேக சிறப்பு மலர்



## 11-06-2001

DESIGNED AND PRINTED BY:
VANATHY PRINTERS (PVT) LTD., 171, SRI KATHIRESAN STREET, COLOMBO-13. TEL.: 542430, 542431